தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆண்டு 10, 11 இற்குரியது

தொகுப்பு

S. S. ஆனந்தன்

B.A.(Hons.), Dip-in-Edu., S.L.P.S., I.S.A.

T. Geetharamany
O/L 2000

சமர்ப்பணம்

காலமெலாம் எமைவளர்த்து கண்ணிமாய் வாழ்தற்கு ஞாலத்தில் கல்வி தந்து மக்களாக்கி விட்ட சீலமிகு குணநலத்தான் சிவலிங்கம் என்தந்தை பாதமலர் இணையடிக்கு இப்பனுவல் சமர்ப்பணமே!

அன்பளிப்பு

அன்புமகன்
சி. சிவநிர்த்தானந்தா
(S. S. ஆனந்தன்)

பொருளடக்கம்

முகவுரை		1
அணிந்துரை		2
கம்பராமாயணக் காட்சிகள்		4
நளவெண்பா		9
நாலடியார்	1. அதன் வலியுறுத்தல்	24
	2. கல்வி	29
ஆசாரக் கோவை		34
பெரியபுராணம்		46
இலங்கைவனம்		60
சீறாப்புராணம்		73
கங்கையில் விடுத்த ஓலை		88
செய்னம்பு நாச்சியார்		102

முகவுரை

க.பொ.த சாதாரண தர வகுப்புகளுக்கான தமிழ் மொழிப் பாடப்பகுதியிலே தமிழ் இலக்கியம் என்னும் பகுதியொன்று தனியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதியானது செய்யுள் பகுதிகளையும் உரை நடைப் பகுதிகளையும் கொண்டுள்ளது. செய்யுள் பகுதிகளை கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் கற்கின்ற மாணவர்களுக்கும் துணை நூல்கள் மிக அவசியமானவை. இத் தேவையினைக் கருதியும் எனது சேவையினைக் கருதியும் செய்யுட்பகுதிகளுக்கான பொருள் விளக்கம் என்னும் இந் நூலினை வெளியிடத் தீர்மானித்தேன். இந்நூல் மாணவ குழாத்தினருக்கு பெருந்துணையாக அமையும் என்பதனை நான் அறிவேன். இலக்கியப் பகுதிகளில் உள்ள இடர்பாடுகளை நீக்க மேலும் பல துணை நூல்களை வெளியிடவுள்ளேன்.

எனது இப்பணியானது சிறப்படைய துணை நின்றவர்கள் பலர். என் இப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அணிந்துரையும் வழங்கி வழிகாட்டிய எனது மதிப்பிற்குரிய மேல் மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நல்லையா (எம்.ஏ) அவர்களுக்கும், இந் நூலினை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும தந்த பூபாலசிங்கம் புத்தக உரிமையாளரான திரு. பூ. ஸ்ரீதரசிங் அவர்கட்கும் என் சேவைக்கு உறுதுணையாக நின்று தோளோடு தோள் நின்றுதவிய நண்பர் திரு. இலங்கைக்கோன் அவர்கட்கும் இந்நூலினை அழகாக அச்சிட்டு பதிப்பித்த கௌரி அச்சக உரிமையாளருக்கும் என் மனமுவந்த நன்றி உரித்தாகுக.

எஸ்.எஸ். ஆனந்தன்

அணிந்துரை

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களில் தமிழ் மொழியும் இலக்கியமும் என்னும் பாடமும் தமிழ் மொழி மூலம் கல்வி பெறும் மாணவர்களுக்கு ஒரு கட்டாய பாடமாகும். முன்னர் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் என இரு பாடங்கள் கலைத்திட்டத்தில் இடம் பெற்று இருந்தன. கலைத்திட்ட விருத்தி காரணமாக தற்போது இரண்டும் ஒரு பாடமாக அமைந்துவிட்டன. இலக்கியம் வாழ்க்கையை அர்த்தமாக்கக் கூடியதாகவும், குறிப்பிட்ட சமுதாயத்தின் பாரம்பரிய பண்புகளை வெளிக்காட்டக் கூடியதாகவும், அமைவதால் மொழிப் பாடத் திட்டத்தில் இலக்கியமும் உள்ளடக்கப்படுவது மிகப் பொருத்தமென்றே கொள்ள வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான இப் பாடத்தின் இலக்கியப் பகுதிகளாக அமையும் செய்யுள் பகுதிகளுள், ஆசாரக் கோவை, பெரியபுராணம், இலங்கை வளம், கங்கையில் விடுத்த ஓலை, நளவெண்பா, நாலடியார், சீறாப்புராணம் ஆகிய இலக்கியங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளும் அடங்கலாய் உள. இவற்றின் மூலங்களைப் பெற்றுக் கற்பதே மிகப் பொருத்த மெனக் கொண்டாலும், இம் மூலங்களைப் பெறல் என்பது தற்போது மாணவருக்கு சிரமம் ஆனது என்றே கொள்ள வேண்டும். ஆசிரியர்களும் இவற்றை எந்தளவிற்குப் பெற்றுப் பயன்படுத்துவர் என்பது பற்றி நிச்சயமாகக் கூற முடியாதுள்ளது.

இப் பாடத்திட்டத்தின் செய்யுள் பகுதிக்கான பொருள் விளக்கங்களைப் பற்றிக் கூறும் துணை நூல்கள் மிக அவசியம் என்றே கூறல் வேண்டும். இதை உணர்ந்தே மேல் மாகாணத்தில் தமிழ் மொழிப் பாடத்தின் ஆசிரிய ஆலோசகர் திரு.எஸ்.எஸ். ஆனந்தன் துணை நூல்களை வெளியிட்டு உள்ளார். சிறப்புப் பட்டதாரியும், பட்டமேல் கல்வி டிப்ளோமாத் தகைமையும் பெற்ற இவர், க.பொ.த. உயர்தர வகுப்பு

மாணவக்ளுக்குத் தம் துணை நூல்கள் பலவற்றை வெளியிட்டவர். இவை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வரவேற்பை பெற்றவை. தமிழ் மொழிப் புலமை கொண்ட இவர் இப் பாடத்தை கற்பிக்கும் முறைகள் நுட்பங்கள் பற்றி நன்கு அறிந்தவர். தமிழ் மொழிப் பாடக் கலைத் திட்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். தேசிய ரீதியில் தமிழ் மொழிப் பாட ஆசிரியருக்காக நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் ஆளனியினராக பங்கு கொண்ட அனுபவம் மிக்கவர். இவரது படைப்புகள் பாராட்டைப் பெற்றவை. ஆண்டு 10,11 ஆகிய மாணவருக்காக ஆக்கப்பட்ட இத்துணை நூல்களும் மாணவராலும், ஆசிரியராலும் நல்ல வரவேற்பைப் பெறும் என்பது என் நம்பிக்கை.

இவரின் தமிழ் மொழிப் பாடச் சேவை இலங்கையின் கல்வித் திட்டத்திற்கு உரமூட்டுவதாய் உள்ளது. இவரின் இவ் வெளியீட்டுச் சேவை தொடர எனது ஆசிரிகள்.

எஸ். நல்லையா
எம். ஏ. (கல்வியியல்)
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மேல் மாகாணம்.

கம்பராமாயணக் காட்சிகள் பாடலும் பொருளும்

1. பாட்டு:

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

பொருள்: ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று – ஒலியைப் பெற்று உயர்ந்த பாற்கடலை அடைந்து: ஒரு பூசை முற்றவும் நக்குபு புக்கு என – ஒரு பூனை பாற்கடல் முழுவதையும் நக்கிப் பருகுவதற்குப் புகுந்தது போல, ஆசை பற்றி – பெருவிருப்பம் கொண்டு : காசு இல் கொற்றத்து இராமன் கதை – குற்றம் இல்லாத வெற்றியையுடைய இராமனது கதையை, அறையல் உற்றேன் – சொல்வதற்குத் தொடங்கினேன்.

2. பாட்டு:

புரமெல்லாம் எரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெல்லாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலாம் உருவியென் உயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே

பொருள்: புரமெலாம் எரி செய்தோன் முதலினோர் – மூன்று அசுரர்களது மூன்று கோட்டைகளைத் தீயினால் எரித்து அழித்த சிவன் முதலிய கடவுளர், பொருவு இலா வரம் எலாம் உருவி – கொடுத்த ஒப்பு இல்லாத உயர்ந்த வரங்கள் எல்லாவற்றையும் வலிமை கெடுத்து: என் – எனது, வசை இலா வலிமை சால் உரம் எலாம் உருவி – இகழ்தல் இல்லாத வலிமை மிக்க வெற்றிகள் யாவற்றையும் அழித்து, என் உயிர் எல்லாம் நுகரும் – எனது உயிர் முழுவதையும் உண்கின்ற நின் சரம் அல்லால் – உனது அம்பு அல்லாமல்: தருமம் வேறு உளதோ – அறம் வேறு இல்லை

3. பாட்டு:

நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை
வைத வைவின் மராமரம் ஏழ்தொளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல் நின்ற தேயத்தே

பொருள்: வைத வைவு இன்– முன் கொடுத்த சாபத்தின் காரணமாக: மராமரம் ஏழ் தொளை எய்த – ஏழு மரங்கள் துளை உண்டாகும்படி, எய்தவற்கு – ஓர் அம்பினால் எய்த இராமனுக்கு, எய்தியமாக்கதை செய்த – பொருந்திய பெருமை பொருந்திய கதையை எழுதிய, செய்தவன் சொல்நின்ற தேயத்தே – வான்மீகி முனிவரது நூல் வழங்குகின்ற நாட்டில், நொய்தின் நொய்ய சொல் நூற்கல் உற்றேன் – பொருளாற்றல் மிகக் குறைந்த சொற்களினால் நூல் செய்யத் தொடங்கினேன்: என்னை – என்னே என் செயல்: (இகழத் தக்கது)

இதனால் இராம கதையினது பெருமையையும், வான்மீகி முனிவரது பெருமையையும், அவரது நூலின் பெருமையையும் தனது அறிவாற்றலின் குறைவையும் கம்பர் கூறினார். என்னை– இகழ்ச்சிக் குறிப்பு தன்னைத் தானே இகழ்ந்தார்.

4. பாட்டு: வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் பேச லுற்றேன்.

பொருள்: வாங்கு அரும் பாதம் நான்கும் – எந்த குறைதலும் இல்லாத நான்கு அடிகளாலான பாடலை: வகுத்த வான்மீகி என்பான் – அமைத்த வான்மீகி முனிவர் அவர்கள்: தீம் கவி செவிகள் ஆர – தனது இனிய பாக்களைச் செவிகள் நிறைய: தேவரும் கற்று மகிழும்படி செய்தான்: ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை – அக் காவியத்தில் அவ்வான்மீகி முனிவர் போற்றிய நாட்டை: அன்பு என்னும் நறவம் மாந்தி – அன்பு என்னும் மதுவை அருந்தி: மூங்கையான் பேசல் உற்றான் – ஊமையன் பேசியது போல யான் பாக்களினாற் சொல்லத் தொடங்கினேன்

5. பாட்டு: தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவி னார்உரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னாலிஃது ணர்த்திய பண்பரோ

பொருள்: நான் தமிழ்ப் பாவினால் இஃது உணர்த்திய பண்பு – யான் தமிழ்ச்செய்யுளினால் இவ் விராம கதையைச் சொல்லும் முறை, தேவ பாடையில் இக் கதை செய்தவர் மூவர் ஆனவர் தம்முள் – வடமொழியில் இவ் இராம கதையைச் சொல்லிய முனிவர்கள் மூவருள்: முந்திய நாவினார் உரையின்படி – முதன்மை பெற்ற வான்மீகி முனிவர் சொல்லிய இராமாயணத்தின்படி ஆகும்

6. பாட்டு: நாயகன் உரையான் வாயால் நான் இது பகர்வன் என்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்

பொருள்: நாயகன் வாயால் இது உரையான் – அரசன் ஆகிய தசரதன் தனது வாயால் இக் கட்டளையைச் சொல்லான், யான் பகர்வன் – நான் இக்கட்டளையைச் சொல்கின்றேன், என்னா – என்று சொல்லி, தாய் என நினைவான் முன்னே – தனது தாய் என் நினைக்கும் இராமன் முன்னே: கூற்று எனத் தமியள் வந்தாள் – இயமன் போலத் தனியளாகக் கைகேயி வந்தாள்.

7. பாட்டு: கழுந்த ராயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ அபிநவ கவிநாதன்
விழுந்த ஞாயிறு எழுவதன் முன்முறை வேதிய ருடனராராய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழு நூறே

பொருள்: கழுந்தராய் – முரட்டுத்தனத்தராய், உன்கழல் பணியாதவர் – உன் திருவடிகளை வணங்காதவர்களின்: கதிர்மணி முடிமீது அழுந்த – ஒளியுள்ள மணிகள் பதித்த முடிகளில் தாக்கும்படி, வாளிகள் தொடுசிலை ராகவ – அம்புகளை விடுகின்ற வில் வைத்திருக்கும் இராம: அபிநவ கவிநாதன் – அதி புதுமையான கவியரசரான கம்பர், விழுந்த ஞாயிறு எழுவதன் முன் – மறைந்த சூரியன் உதயமாகுமுன், வேதியருடன் ஆராய்ந்து – கற்று வல்ல அந்தணரொடு வான்மீகி இராமாயணத்தை ஆராய்ந்து அறிந்து, எழுந்த ஞாயிறு விழுவதன் முன்– உதித்த ஞாயிறு மறைவதன் முன், கவி பாடினது எழுநூறு பாடிய பாடல்கள் எழுநூறு ஆகும்.

8. பாட்டு : பேராண்மை யென்ப தறுகண் ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு

பொருள்: தறுகண் – போரில் ஒருவன் பகைவரை எதிர்த்து அவர்களைக் கொல்வது: பேராண்மை என்ப – பெரும் வலிமை எனப் பெரியோர் கூறுவர், ஒன்று உற்றக்கால் – அங்கு அவர்க்கு ஏதாவது ஒரு தாழ்வு வருமாயின், ஊராண்மை – இரக்கம் காட்டல், அதன் எஃகு – அவனது பேராண்மைக்கு ஓர் உயர்வாக விளங்கும், மற்று – பொருளற்ற இடைச்சொல் இப் பாடல் திருக்குறள் ஆகும்.

9. பாட்டு:
ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

பொருள்: ஐய – ஐயனே, ஆள் உனக்கு அமைந்தன – உனக்குத் துணையாக வந்த படைகள்:மாருதம் அறைந்த பூளை ஆயின கண்டனை – சூறாவளி தாக்கிய பஞ்சுகள் போலத் தோல்வி அடைந்து ஓடின என்பதைப் பார்த்தாய், இன்று போய் போருக்கு நாளை வா – இன்று உன் இடம் சென்று போருக்கு நாளை ஆயத்தமாக வா – என நல்கினான் – என்று அவனது உயிரை அவனிடம் கொடுத்துக் கூறினான் – நாகு இளம் கமுகின் வாளை தாஉறு – அழகிய இளம் கமுக மரத்தில் வாளைமீன் பாயும், கோசல நாடு உடைய வள்ளல் – கோசல நாட்டைத் தனக்கு உரிமையாகவுள்ள இராமன்.

10. பாட்டு:
அருண வெங்கதிர் ஆயி ரத்தவன் அன்பினா லுதவுங்
கருண னுஞ்சில பகழி யோரிரு கண்ணர் மார்பில்விடா
வருண மும்பெய ரும்பி ரிந்திலர் மனமு மொன்றெனவே
தருண வாணில வெழுந கைத்துரை தந்து போயினனே

பொருள்: அருண வெங்கதிர் ஆயிரத்தவன் – சிவந்த வெம்மையான கதிர்கள் ஆயிரம் உள்ள சூரியன், அன்பினால் உதவும் கருணன் – அன்பினால் தந்த அவனது மகனான கருணன், சில பகழி – சில அம்புகளை, ஓர் இரு கண்ணர் மார்பில் மேல் விடா – ஒப்பற்ற கண்ணன் அருச்சுணன் ஆகிய இருவர் மார்பின் மீது விட்டு, வருணமும் பெயரும், பிரிந்திலர் – அவ்விருவரும் நிறத்தினாலும் பெயரினாலும் வேறானவரல்லர், மனமும் ஒன்று என இருவர்க்கும் – மனமும் ஒன்றே என: தருண வாண் நிலவு எழ நகைத்து – இளமையான ஒளியுள்ள பிறைபோலச் சிரித்து, உரை தந்து போயினன் – சில சொற்கள் கூறி அப்பாற் சென்றான்.

11. பாட்டு:
அன்று போர்புரி சேனை யின்பதி யான வீரனை நீ
இன்று போயினி நாளை வாவென இனிதி யம்பினனால்
வென்றி கூர்வரி வின்மை யாலடல் வெவ்வ ரக்கரைமுன்
கொன்ற காளையை யொத்த பேரிசை கொண்ட வாண்மையினான்

பொருள்: அன்று போர்புரி சேனையின் பதியான வீரனை– அன்றைய தினம் போர் செய்யும் பகைவர் படைகளின் தலைவனான கர்னனை: நீ இன்று போய் இனி நாளை வா – நீ இன்று போய் நாளை போர்க்கு வா, என இனிது இயம்பினன் –என்று அழகாகக் கூறினான், வென்றி

கூர் வரிவின்மையால் – வெற்றி மிகுந்த வரிகள் உள்ள வில் ஆற்றலால்: அடல் வெவ் அரக்கரை முன் கொன்ற காளையை ஒத்த – வலிமை உள்ள கொடிய அரக்கர்களைக் கொன்ற, இராமனைப் போன்ற, பேர் இசை கொண்ட ஆண்மையினான் – பெரும் புகழுக்கு உரியவலிமை மிக்க அருச்சுனன் ஆண்மையினான் – எழுவாய், இயம்பினான் – பயனிலை ஆல் – அசைநிலை இடைச்சொல் வில் + மை = வின்மை கூர் – உரிச்சொல் அருச்சுனுக்கு இராமனை உவமையாகக் கூறினார். இது வில்லிபாரதத்துப் பாடல்

12. பாட்டு: இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஒங்கு நிழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க் கிதயங் களியாதே

பொருள்: இம்பர் நாட்டிற் செல்வம் எல்லாம் எய்தி அரசாண்டு இருந்தாலும் – இவ்வுலகச் செல்வம் எல்லாம் பெற்று அரசர் போல இருந்தாலும், உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஓங்கு நிழல் இருந்தாலும் – தேவர் உலகில் கற்பகச் சோலையில் உயர்ந்த செல்வம் பெற்று வாழ்ந்தாலும், செம்பொன் மேருபுயத்தனைய திறல் சேர் இராமன் – செவ்விய பொன்மயமான மேருமலையை ஒத்த புயங்கள் உள்ள வலிமை உள்ள இராமன், திருக் கதையில் கம்பநாடன் கவிதையில் போல் – தெய்வத்தன்மையுள்ளகதையில் அக் கதையைக் காவியம் ஆக்கிய கம்பரின் கவிதையில் உள்ளம் மகிழ்வது போல முற்கூறிய இரண்டினாலும் உள்ளம் மகிழாது.

இவ்வுலக அரசச் செல்வ இன்பத்திலும் தேவருலகக் கற்பகக்காச் செல்வ இன்பத்திலும் கம்பர் காவியக் கவிதை இன்பம் உயர்ந்தது இது கம்பர் காவியத்தைப் படித்து இன்புற்று வேறு ஒரு புலவர் பாடிய பாடல்

13. பாட்டு: இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது;
சரயு என்பது, தாய்முலை அன்னது இவ்
வுரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்

பொருள்: சரயு என்பது – சரயு என்னும் நதி, இரவி தன் குலத்து எண்ணில் வேந்தர்தம் – சூரிய குலத்து எண்ணில்லாத அரசர்களின், பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது – புகழ்வதற்கு உரிய நல்ல ஒழுக்கத்தின் படி அமைந்தது, உரவு நீர் இவ் நிலத்து – கடல் சூழ்ந்த இவ் உலகத்தில் ஒங்கும், உயிர்கட்கு எல்லாம் – எல்லா உயிர்களுக்கும், தாய்முலை அன்னது – தாயின் முலையை ஒத்தது.

14. பாட்டு: எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு - முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமநுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

பொருள்: எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் – எப்பொருளையும் எவரும் எளிதாக அறிந்துக்கொள், செப்பிய வள்ளுவர் தாம் செப்பவரு முப்பாற்கு– சொல்லிய திருவள்ளுவர் செய்த திருக்குறளுக்கு பாரதம் சீராம கதை மநு பண்டை மறை நேர்வன – பாரதம், இராமாயணம், மநுதர்மசாத்திரம் பழைய வேதங்கள் என்பன ஒப்பாவன, மற்று நிகர் இல்லை – ஏனைய நூல்கள் ஒப்பாக இல்லை

15. பாட்டு:

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்கள் தோறும்
மாதவி வேரிப் பூக வனந்தொறும் வயல்க டோறும்
ஒதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே

பொருள்: தாதுகு சோலை தோறும் – மகரந்தத்துகள் சொரியும் சோலைகளிலும், சண்பகக் காடுகள் தோறும் – சண்பக மரங்கள் உள்ள காடுகளிலும், போது அவிழ் பொய்கை தோறும் – பூக்கள் மலரும் வாவிகளிலும் , புதுமணல் தடங்கள் தோறும் – புதுமணல் நிறைந்த வெளிகளிலும், மாதவி வேரி பூகம் வனந்தோறும் – மாதவிக் கொடியும் தேன் நிறைந்த கமுகம் உள்ள குடியிருப்புப் பகுதிகளிலும், வயல்கள் தோறும் – வயல்களிலும், ஒதிய உடம்பு தோறும் – உயிர் என உடம்பு தோறும் உயிர் உலவுவது போல, உலாயது – உலவி வந்தது, சரயு – சரயுநதி.

16. பாட்டு:

கலஞ்சு ரக்கும் நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கும் நிறைவளம் நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்

பொருள்: கணக்கு இலா நிதியம் கலம் சுரக்கும் – அளவில்லாத பொருள்களைக் கப்பல்கள் கொடுக்கும், நிலம் நிறைவளம் சுரக்கும் – நிலமானது அதிக வளத்தைக் கொடுக்கும், பிலம் நன்மணி சுரக்கும் – சுரங்கங்கள் நல்ல மணிகளைக் கொடுக்கும், பெறுதற்கு அரிய குலம் குடிக்கெலாம் ஒழுக்கம் – பெறுதற்கு அரிய குலமானது மக்கள் அனைவருக்கும் ஒழுக்கத்தைக் கொடுக்கும்.

நளவெண்பா

சுயம்வர காண்டம்

நளனின் செம்மையான ஆட்சிச் சிறப்பு

பாடல்:

சீத மதிக்குடைக் கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்- மாத
ரருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு:

பாடல் பிரிப்பு:

சீதம் மதி குடைக்கீழ் செம்மை அறம் கிடப்ப
தாது அவிழ் பூ தாரான் தனி காத்தான்- மாதர்
அருகு ஊட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு.

பொருள்: பூத்தாதுகள் சிந்திக் கொண்டிருக்கும் பூ மாலையை சூடியவனாகிய நளமகாராசன், இள நங்கையர்பக்கத்திலே வைத்து உணவூட்டுகின்ற பசுமையான கிளியும் அதனோடு போராடும் இயல்புடைய பருந்தும் ஒரே கூட்டிலே (ஒற்றுமையாக) வாழத்தக்க வகையிலே, குளிர்ச்சி பொருந்திய நிலவைப் போன்ற வெண்கொற்றக் குடையின் கீழேசிறந்த அறங்கள் ஒங்குமாறு (தமது) நாட்டினை ஒப்பற்ற முறையிலே ஆட்சி புரிந்து வந்தான்.

பூங்குவளைக் காட்டினூடாகப் போனான்

பாடல்:

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்-றேங்கு வளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

பாடல் பிரிப்பு:

வாங்குவளைக் கையார் வதனம் மதி பூத்த
பூ குவளைக் காட்டு இடையே போயினான்- தேன்குவளை
தேன் ஆடி வண்டு சிறகு உலர்த்தும் நீர் நாடன்
பூநாடி சோலை புக.

பொருள்: இனிய குவளைப் பூக்களிலேயுள்ள தேனிலே குளித்து வண்டுகள், தம் சிறகுகளை உலர்த்திக் கொண்டிருக்கும் நீர்வளம் பொருந்திய நாட்டையுடையவனாகிய நளன், வளைந்த வளையல்களை அணிந்த கரங்களைக் கொண்ட இளநங்கையரின் வதனங்களாகிய நிலவிலே பூத்திருக்கும் அழகிய நீலமலர்க் காட்டினூடாகப் (நிறைந்த கண்களினூடாக) பூக்களை விரும்பி சோலையினுள்ளே புகுவதற்காகப் போய்க் கொண்டிருந்தான்.

கதிரவனைக் கண்டு காரிருள் ஒளிக்கும் பொழில்

பாடல்:

தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனைப்ப வேயடைந்தான்- கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற் கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

பாடல் பிரிப்பு:

தேரின் துகளைத் திருந்து இழையார் பூ குழலின்
வேரி புனல் நனைப்பவே அடைந்தான்- கார்வண்டு
தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கு இருள் வெய்யோற்கு
ஒதுங்கி புக்கு இருந்தால் அன்ன பொழில்.

பொருள்: (நளன் செல்லும்) தேர்ச் சில்லுகளால் எழுகின்ற புழுதியைச் சிறந்தஅணிகலங்களை சூடியுள்ள இளநங்கையரின் அழகிய கூந்தலில் இருந்து வழிகின்ற தேனாகிய நீர் விழுந்து அடக்கவும், மிகுதியான இருளானது கதிரவனுக்குப் பயப்பட்டு மறைந்திருப்பதைப் போன்றதும்,கரிய வண்டுக் கூட்டங்கள் ஆரவாரித்துச் சுற்றித் திரிவதுமான நந்தவனத்தை (நளன்) சென்றடைந்தான்.

மாணிறத்தான் முன் அன்னப்புள் தோன்றியது

பாடல்:

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
றாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப- மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகு
மன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

பாடல் பிரிப்பு:

நீள் நிறத்தால் சோலை நிறம்பெயர நீடிய தன்
தாள் நிறத்தால் பொய்கைத் தலம் சிவப்ப- மாண் நிறத்தான்
முன் அப்புள் தோன்றும் முளரி தலை வைகும்
அன்னப்புள் தோன்றிற்று ஆங்கு.

பொருள்: நீரிலே தோன்றும் தாமரையிடையே வாழ்கின்ற அன்னப் பட்சியொன்று தன் உடலின் நீண்டு செல்கின்ற வெண்மை நிறத்தினாற் சோலையின்கரிய நிறம் நீங்கவும், நீண்ட (தனது) கால்களின் நிறத்தினாலே குளமானது சிவப்பு நிறமாகத் தோன்றவும்,மாட்சிமை பொருந்திய அழகு படைத்தவனாகிய நளனின் முன்பாக அங்கு வந்தடைந்தது.

அன்னத்தைப் பிடித்துத் தா!

பாடல்:

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கை நீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

பாடல் பிரிப்பு: *பேதை மட அன்னம் தன்னைப் பிழையாமல்*
மேதி குலம் ஏறி மென்கரும்பை- கோதிக்
கடித்துத்தான் முத்து உமிழும் கங்கை நீர் நாடன்
பிடித்தது தாவென்றான் பெயர்ந்து.

பொருள்: எருமைக் கூட்டம் சென்று இனிய கரும்புகளைக் கடித்துக் குதப்பி(அதனுள்ளிருக்கும்) முத்துக்களைத் துப்பிவிடுகின்ற கங்கை நீரினால் வளம் நிறைந்த (நிடத) நாட்டினையுடையவனான நளமகாராசன் (அங்குள்ள பணிப்பெண் ஒருத்தியைப் பார்த்து) "பெண்ணே,நீ சென்று, அந்த இளமைத் தன்மை கொண்ட அன்னத்தைத் தப்பிச்செல்ல விடாமற் பிடித்துக் தருவாயாக"என்று கூறினான்.

அன்னத்தைப் பிடித்து மன்னன்முன் வைத்தனர்

பாடல்: நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழா
மோடி வளைக்கின்ற தொப்பவே - நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

பாடல் பிரிப்பு: *நாடி மட அன்னத்தை நல்ல மயில்குழாம்*
ஓடி வளைக்கின்றது ஒப்பவே - நீடிய நல்
பை கூந்தல் வல்லியர்கள் பற்றி கொடு போந்து
தம் கோவின் முன் வைத்தார் தாழ்ந்து.

பொருள்: நீண்டதும் நன்கு செழிப்பானதுமான கூந்தலையுடைய பூங்கொடி போன்ற (வேலைக்கார) இளநங்கையர், அன்னத்தைப் பிடிக்கக் கருதி, சிறந்த மயிற் கூட்டமொன்று ஒடிச்சென்று வளைத்துக் கொண்டது போல (வளைத்து), அன்னத்தைப் பிடித்துக் கொண்டு போய்த் தங்களது வேந்தன் முன்பாகப் பணிவுடன் வைத்தார்கள்.

அன்னங்கொண்ட அச்சம்

பாடல்: அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டு போய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே - யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடி
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

பாடல் பிரிப்பு: *அன்னம் தன்னைப்பிடித்து அங்கு ஆய்இழையார் கொண்டுபோய்*
மன்னன் திருமுன்னர் வைத்தலும் - அன்னம்
மலங்கிற்று தன்னுடை வான்கிளையை தேடி
கலங்கிற்று மன்னவனைக் கண்டு.

பொருள்: அவ்விடத்தில், தெரிந்தெடுத்த அணிகலங்களைச் சூடியஇளநங்கையர்கள் அன்னத்தைப் பிடித்துக் கொண்டுபோய் மகராசன் முன்பாக வைத்ததும், அன்னமானது தன்னுடைய சுற்றமான ஏனைய அன்னங்களைத் தேடி வருத்தமுற்றது. (அத்துடன்) நளமகராசனைக் கண்டு பீதியும் கொண்டது.

அன்னமே நீ அஞ்ச வேண்டாம்

பாடல்:

அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும் - விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

பாடல் பிரிப்பு:

"அஞ்சல் மட அன்னமே உன்தன் அணி நடையும்
வஞ்சி அனையார் மணி நடையும் - விஞ்சியது
காண பிடித்தது காண்" என்றான் களி வண்டு
மாண பிடித்தார் மன்.

பொருள்: மதுவுண்டு இன்புறும் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கும் (மாலையை) மாட்சிமையுடன் கூடிய மாலையை அணிந்தவனாகிய நளன் " இளமை பொருந்திய அன்னமே, நீ அஞ்ச வேண்டாம். உன்னுடைய அழகிய நடையினையும், வஞ்சிக்கொடி போன்ற (இவ்) இளநங்கையரின் சிறந்த நடையினையும் ஒப்பிட்டு, எது சிறந்தது என்று காண்பதற்காகவே உன்னைப் பிடித்தோம் என்பதை அறிவாயாக " என்று கூறினான்.

தடுமாற்றம் தீர்ந்த தனியன்னம்

பாடல்:

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம் - வெய்ய
வடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

பாடல் பிரிப்பு:

செய்ய கமலம் திருவை நிகரான
தையல் பிடித்த தனி அன்னம் - வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன் சொல் கேட்டு
தடுமாற்றம் தீர்ந்ததே தான்.

பொருள்: செந்தாமரை மலரிலிருக்கும் இலக்குமியைப் போன்ற பெண்ணானவள் பிடித்துக் கொண்டு வந்து (மன்னனின் முன்னிலையில்) விட்ட ஈடற்ற அன்னமானது, கொடிய கொலைக்கருத்தில்லாத நளமன்னனின் சொற்களைக் கேட்டுத் தான் (தன்னுடைய) மனக்கலக்கத்தைத் தீர்த்துக் கொண்டது.

உன் தோள்களுக்கேற்றவள் தமயந்தியே

பாடல்: .

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள் - வசையி
றமையந்தி யென்றோதுந் தையலாள் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு .

பாடல்பிரிப்பு:

" திசைமுகந்த வெண் கவிகை தேர் வேந்தே உன்தன்
இசை முகந்த தோளுக்கு இசைவாள் - வசை இல்
தமையந்தி என்று ஓதும் தையலாள் மென்தோள்
அமைஅந்தி என்ற ஓர் அணங்கு."

பொருள்: " எட்டுத் திசைகளிலும் புகழ் பரவியுள்ள வெண்கொற்றக் குடையினையுடைய, தேரைக் கொண்டுள்ள மகராசனே", உன்னுடைய புகழ் பூத்த தோள்களுக்குப் பொருத்தமானவள், மூங்கிலையொத்த அழகிய மெல்லிய தோள்களைக் கொண்ட தெய்வப் பெண் போன்றவளான மாசற்ற தமயந்தி என்று சொல்லப்படும் பெண்ணாவாள்.

கன்னி மனக்கோயிலைக் கைப்பற்றினான்

பாடல்:

அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச் - சொன்னமயி
லார்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

பாடல்பிரிப்பு:

அன்னம் மொழிந்த மொழி புகாமுன் புக்கு
கன்னி மனக்கோயில் கைக்கொள்ள - " சொன்னமயில்
ஆர் மடந்தை" என்றான் அநங்கன் சிலைவளைப்ப
பார் மடந்தை கோமான் பதைத்து.

பொருள்: அன்னம் சொல்லியவற்றைச் செவிமடுக்கு முன்பாகவே (தமயந்தி என்னும்) கன்னியானவள் (தனது) மனக்கோயிலினுள்ளே புகுந்து அதனைத் தனதாக்கிக் கொள்ளவும், மன்மதன் (கரும்பு) வில்லை வளைக்கவும் (அதனால் ஆசை உண்டாகப் பெற்று) நிலமகளின் அரசனாகிய நளன் துடிதுடித்து " நீ சொன்ன மயிலைப் போன்ற இளநங்கை யாருடைய புதல்வி " என்று கேட்டான்.

கொடை விதர்ப்பன் பெற்ற கொம்பு

பாடல்:

எழுவடுதோண் மன்னா விலங்கிழையேர்தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை - யுழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

பாடல் பிரிப்பு: *"எழு அடு தோள் மன்னா இலங்கு இழை ஏர் தூண்ட*
கொழு நுதியிற் சாய்ந்த குவளை - உழுநர்
மடை மிதிப்ப தேன் பாயும் மாடு ஒலி நீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றது ஓர் கொம்பு."

பொருள்: தூணினையும் வெற்றி கொள்ளும் (திண்மையான) தோள்களையுடைய வேந்தனே, விளங்குகின்ற அணிகலன்களை அணிந்த அந்த இளநங்கை (யாரென்றால்), உழவர்கள் ஏரினைத் தூண்டிச் செலுத்த, (அந்த) ஏரின் கொழுமுனையிலே சாய்ந்து போன குவளைகளின் மடைகளை மிதிப்பதனால் தேனைப்பாய்ச்சுகின்ற மிகுந்த ஆரவாரத்தினையுடைய நீர்வளம் மிகுந்த விதர்ப்ப நாட்டுக்குரியவனும் கொடையிற் சிறந்தவனுமாகிய விதர்ப்ப வேந்தன் பெற்றெடுத்த ஈடற்ற பூங்கொடியவாள்."

வேற்படையும் வாட்படையும் கண்களாம்!

பாடல்: நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ
ழாளுமே பெண்மை யரசு.

பாடல் பிரிப்பு : *" நால் குணமும் நால் படையாம் ஐம்புலனும் நல் அமைச்சாம்*
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசாம் - வேல் படையும்
வாளும் கண்ணாம் வதனம் மதி குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. "

"(பெண்மைக்குரிய) அச்சம், மடம் போன்ற நான்கு குணங்களையும் நால்வகைச்சேனைகளாகவும், மெய், வாய் போன்ற ஐந்து புலன்களையும் நல்ல அமைச்சர்களாகவும், ஆர்ப்பரிக்கும் சிலம்புகளை அழகிய முரசுகளாகவும் விழிகளை வேற்படைகளாகவும் வாட்படையாகவும் கொண்டு, தன் வதனமாகிய சந்திர வட்டக் குடையின் கீழாகப் பெண்மையென்னும், அரசை ஆழ்பவள். (அந்தத் தமயந்தி என்பதாகும்.) "

அஞ்சிறகு அசைய அஞ்சும் இடை

பாடல்: என்று நுடங்கு மிடையென்ப வேழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே - யொன்றி
அறுகால் சிறுபறவை அம்சிறகால் வீசும்
சிறு காற்றுக் காற்றாது தேய்ந்து.

Proud to be
a Ramanathanist

பாடல் பிரிப்பு: *"என்றும் நுடங்கும் இடை என்ப ஏழு உலகும்*
நின்ற கவிதை நிழல் வேந்தே - ஒன்றி
அறுகால் சிறு பறவை அம்சிறகால் வீசும்
சிறு காற்றுக்கு ஆற்றாது தேய்ந்து."

பொருள்: " ஏழுலகங்களிலும் வெண்கொற்றக் குடையானது நிழல் செய்யும் வண்ணம் ஆண்டு வரும் வேந்தனே, ஆறு கால்களைக் கொண்ட சிறிய வண்டானது , தனது அழகிய சிறகுகளை ஒருமித்து (அசைத்து) வீசுகின்ற மெல்லிய காற்றுக்குத் தாக்குப் பிடிக்கமுடியாது இடையானது மெலிவுற்று எப்போதும் துவண்டு கொண்டிருக்கும்" (அவ்வளவு சிறிய இடையைக் கொண்டவள் என்பது பொருள்)

உன்னவே என் ஆவி சோர்கிறதே !

பாடல்:

அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னாவி
யுன்னவே சோரு முனக்கவளோ - டென்னை
அடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்றா டன்பா னயந்து.

பாடல் பிரிப்பு :

"அன்னமே நீ உரைத்த அன்னத்தை என் ஆவி
உன்னவே சோரும் உனக்கு அவளோடு - என்னை
அடைவு என்றான் மற்று அந்த அன்னத்தை முன்னே
நடை வென்றாள் தன்பால் நயந்து.

பொருள்: அந்த அன்னப் பட்சியை முன்பு தன் இனிய நடையால் வெற்றி கொண்டவளான தமயந்தி மீது மையல் கொண்டு" அன்னமே, நீ கூறிய அந்த அன்னம் போன்றவளான தமயந்தியை எண்ணும் போதே என் உயிர் துன்புறுகின்றது. அது ஒருபக்கமிருக்க, உனக்கு அவளுடன் எத்தகைய தொடர்பு என்பதைக் கூறுவாயாக" என்றான் நளன்.

காமன் படைத்தொழிலைக் கற்றான்

பாடல்:

பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழ மயிற்குலங்கள் - காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தோம் நாம்.

பாடல் பிரிப்பு :

"பூமனைவாய் வாழ்கின்ற புள் குலங்கள் யாம் அவள் தன்
மாமனைவாய் வாழும் மயில் குலங்கள் - காமன்
படை கற்பான் வந்து அடைந்தான் பை தொடியாள் பாத
நடை கற்பான் வந்து அடைந்தோம் நாம்."

பொருள்: "மன்மதன் (அவளது கண் பார்வையினைப் பார்த்து) படை தொடுக்கும் தொழிலினைக் கற்கும் பொருட்டு வந்திருந்தான். நாங்கள் பசுமையான வளையல்களை சூடிய தமயந்தியின் நடை அழகினைக் கற்பதற்காக வந்திருந்தோம். நாங்கள் மலர்வீடுகளிலே வாழுகின்ற பட்சிகளாயினும், அவளுடைய பெரிய அரண்மனையிலே வாழும் மயிற்குலங்களேயாவோம்." (அதாவது தோழிகளைப் போன்றவர்களே என்பதாம்)

மங்கை நல்லாளால் மானம் அழிந்தது

பாடல்:

இற்றது நெஞ்ச மெழுந்த திருங்காத
லற்றது மான மழிந்ததுநாண் - மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து.

பாடல் பிரிப்பு:

இற்றது நெஞ்சம் எழுந்தது இரும் காதல்
அற்றது மானம் அழிந்தது நாண் - மற்றும் இனி உன்
வாய் உடையது என்னுடைய வாழ்வு என்றான் வெம் காமம்
தீ உடைய நெஞ்சு உடையான் தேர்ந்து.

பொருள்: (அன்னம் கூறியவைகளை நளன் கேட்டவுடன்) மனம் தடுமாற்றம் கொண்டு தமயந்தி மீது மிகுதியான மையலும் உண்டாயிற்று. மானமும் போய் விட்டது, நாணமும்அழிந்து விட்டது. (தமயந்தி மீது) பெரிய ஆசையாகிய தீயைக் கொண்டிருந்த நெஞ்சினையுடைய அவன் தெளிவுற்று, " இனி என்னுடைய வாழ்வு உன் வாய் மொழியிலேயே தங்கியிருக்கின்றது" என்றான்.

மாலை உனக்கே மயங்காதே!

பாடல்:

வீமன் றிருமடந்தை மென்மாலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் - சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே யன்னம்
ஒடுங்கிடையாள் தன்பா லுயர்ந்து.

பாடல் பிரிப்பு:

"வீமன் திரு மடந்தை மென்மாலை உன்னுடைய
வாமம் நெடும்புயத்தே வைகுவிப்பேன் - சேம
நெடுங்குடையாய்" என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பாலுயர்ந்து.

பொருள்: (நாட்டு மக்களுக்கு) " நன்மை தரவல்ல நெடிதான வெண் கொற்றக் குடையினை உடையவனே! வீமராசனின் அழகிய புதல்வியாகிய தமயந்தியின் மென்டையான மண மாலையை உன்னுடைய அழகான திரண்ட தோள்களிலே பொருந்தச் செய்வேன்" என்று அன்னம் கூறி, ஆகாயத்திலே உயர்ந்து ஒடுக்கமான இடையினை உடையவளான தமயந்தியிடம் செல்லும் பொருட்டுப் பறந்து போனது.

செல்லும்! காணும்! இயம்பும்! மீளும்!

பாடல்

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொ
லிவ்வளவிற் காத லியம்புங்கொ - லிவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினான் மும்மதம்நின்
றாளுங்கொல் யானையரசு.

பாடல் பிரிப்பு : *"இவ் அளவில் செல்லுங்கொல் இவ் அளவில் காணும் கொல்*
இவ் அளவில் காதல் இயம்புங்கொல் - இவ் அளவில்
மீளுங்கொல்" என்று உரையா விம்மினான் மும்மதம் நின்று
ஆளும் கொல் யானை அரசு.

பொருள் : மூவகையான மதநீர்களுங்கொண்டு கொலைத் தொழிலினை உடையவனாய் விளங்கும் யானைப் படையினைக் கொண்டு அரசாளும் நளன், (அன்னமானது)" இவ்வளவு நேரத்தில் (அவளைக்) கண்டிருக்கும் இவ்வளவு நேரத்தில் தன் மையலை (அவளிடம்) கூறியிருக்கும், இவ்வளவு நேரத்தில் திரும்பி வந்து கொண்டிருக்கும்" (என்று தனக்குத்தானே) கூறி வருந்தினான்.

என்னை நாடியது ஏன்? சொல்

பாடல்: மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
வன்னம்போய்க் கன்னி அருகணைய - நன்னுதலுந்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ் சேர்ந் தாங்கதனை
யென்னாடல் சொல்லொன்றா ளீங்கு.

பாடல் பிரிப்பு: *மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற*
அன்னம் போய் கன்னி அருகு அணைய - நல்நுதலும்
தன் ஆடல் விட்டு தனி இடம் சேர்ந்து ஆங்கு அதனை
"என் நாடல் சொல்" என்றாள் ஈங்கு.

பொருள்: நளமன்னன் தூதனுப்பிய அழகிய அன்னப் பட்சியானது விதர்ப்ப நாட்டுக்குச் சென்று கன்னியாகிய தமயந்தியின் அருகிற் சேர, அழகிய நுதலைக் கொண்டவளாகிய அவளும் தன்னுடைய விளையாட்டுகளைக் கைவிட்டுத் தனிமையாயன ஓர் இடத்தையடைந்து அந்த அன்னப் பட்சியை நோக்கி, இவ்விடயத்தே யாது குறித்து நீவந்திருக்கின்றாய்? அதனைச் சொல்வாயாக" என்றாள்.

மங்கையர் மனம்வாங்கும் தடந்தோளான்

பாடல்: செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்க
டம்மனத்தை வாங்கும் தடந்தோளான் - மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான் வேந்த னுனக்கு.

பாடல் பிரிப்பு: *"செம் மனத்தான் தண் அளியான் செங்கோலான் மங்கையர்கள்*
தம் மனத்தை வாங்கும் தட தோளான் - மெய்ம்மை
நளன் என்பதால் மேல் நிலத்தும் நால் நிலத்தும் மிக்கான்
உளன் என்பான் வேந்தன் உனக்கு

பொருள் : "செம்மையான உள்ளம் உடையவன், இரக்கத்தைனைக் கொண்டிருப்பவன், செம்மையாக அரசாண்டு வருபவன், இளம் பெண்களின் உள்ளங்களைத் தன்பாலிழுக்கின்ற திரண்ட தோள்களையுடையவன், உண்மையாக மேலுலகத்தும் இவ்வுலகத்தும் ஆடவர்களுள் உயர்ந்தவன். (அப்படிப்பட்ட நளமன்னன்) நளனென்பவன் உனக்குத் துணைவனாவதற்கு இருக்கின்றேன் என்று கூறிக் கொண்டிருக்கின்றான்.

அறங்கிடந்த நெஞ்சன், அருளொழுகு கண்ணன்!

பாடல்:

"அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந் - திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
வங்கண்மா ஞாலத் தவற்கு.

பாடல் பிரிப்பு :

"அறம் கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும்
மறம் கிடந்த திண் தோள் வலியும் - திறம் கிடந்த
செம்கண் மால் அல்லனேல் தேர் வேந்தர் ஒப்பரோ
அம்கண் மா ஞாலத்து அவற்கு".

பொருள் : " அறநெறிகள் குடிகொண்டிருக்கும் உள்ளமும், அருள் பெருகி நிற்கின்ற விழிகளும், வீரம் நிறைந்திருக்கும் பலம் பொருந்திய தோளாற்றலுமுடைய இந்த அழகிய பெரிய உலகத்தையுடைய நளனுக்கு, மேன்மை பொருந்திய சிவந்த விழிகளையுடைய திருமாலே ஒப்புடையவராக மாட்டார் எனில், பிற தேர்வேந்தர் ஒப்புடையவர் ஆவார்களோ?

ஒளியிழந்த, வெள்ளை மதியன்ன மங்கை

பாடல்:

புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
வுள்ளங் கவர வொளியிழந்த - வெள்ளை
மதியிருந்த தாமென்ன வாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

பாடல் பிரிப்பு:

புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
உள்ளம் கவர ஒளி இழந்த - வெள்ளை
மதி இருந்ததாம் என்ன வாய்ந்து இருந்தாள் வண்டின்
பொதி இருந்த மெல் ஓதி பொன்.

பொருள்: வண்டுக் கூட்டம் மொய்த்திருக்கும் மென்மையான கூந்தலைக் கொண்ட இலக்குமியைப் போன்றவளான தமயந்தி, அன்னப்பட்சியின் சொற்களுடன் மன்மதன் ஏவும் மலரம்புகளும் தன்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட (நளன் மீது ஆசையுண்டாகி) ஒளி குறைந்த வெண் திங்கள் என்னும்படியாக உடல் வெளுத்துப் போய் அவ்விடத்தே வீற்றிருந்தாள்.

என்னிலைமை அவர்க்கு எடுத்துரைப்பாய்

பாடல்:

வாவி யுறையு மடவனமே யென்னுடைய
வாவி யுவந்தளித்தா யாதியாற் - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத் தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

பாடல் பிரிப்பு:

"வாவி உறையும் மட அன்னமே என்னுடைய
ஆவி உவந்து அளித்தாய் ஆதியால் - காவின்இடை
தேர் வேந்தற்கு எம் நிலைமை சென்று உரைத்தி " என்று உரைத்தாள்
பார் வேந்தன் பாவை பதைத்து.

பொருள்: நாடாளும் மன்னனாகிய விதர்ப்பனின் புதல்வி தமயந்தி (மையலால்) துடிதுடித்து (அன்னத்தைப் பார்த்து) " மலர்ப்பொய்கையிலே வாழும் இளம் பருவத்து அன்னப்பட்சியே பூஞ்சோலையிலே இருக்கின்ற தேரையுடைய மன்னனுக்கு என்னுடைய இந்த நிலைமையினைச் சொல்லுவாயானால் என்னுடைய உயிரினை எனக்கு விருப்பத்துடன அளித்தனையாவாய்" என்றாள்.

மன்னன் புயம் நின் வனமார்புக் கச்சாகும்

பாடல்:

மன்னன் புயநின் வனமார்புக் கச்சாகும்
என்ன முயங்குவிப்பேன் என்றன்னம் - பின்னும்
பொருந்தவன்பால் ஓதிமலர்ப் பூங்கணைகள் பாய
இருந்தவன் பாற் போன தெழுந்து.

பாடல் பிரிப்பு :

" மன்னன் புயம்நின் வன மார்புக் கச்சு ஆகும்
என்ன முயங்குவிப்பேன்" என்று அன்னம் - பின்னும்
பொருந்த அவன்பால் ஓதி மலர் பூங்கணைகள் பாய
இருந்த அவன்பால் போனது எழுந்து.

பொருள்: " நளமகராசனின் தோள்களை உன் அழகிய மார்புகளுக்குக் கவசமாகும் படி பொருந்தச் செய்வேன்" என்று (உறுதி) கூறி பின்னரும் (அவள் மனம்) அவன் மீது அழியா நிலைக்குமாறு சில வார்த்தைகளைக் கூறி, மலரம்புகள் பாய்வதால் வருந்தியிருக்கின்றவனாகிய நளனிடம் பறந்து சென்றது.

பித்துப் பிடித்துப் பேதை நின்றாள்

பாடல்:

பேரழகு சோர்கின்ற தென்னப்பிறைநுதன்மே
னீரரும்பத் தன்பேதை நின்றாளைப் - பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம்.

பாடல் பிரிப்பு : *பேர் அழகு சேர்கின்றது என்ன பிறை நுதல் மேல்*
நீர் அரும்ப தன் பேதை நின்றாளை - பாரா
குல வேந்தன் சிந்தித்தான் கோ வேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளும் மணம்.

பொருள்: மிகுந்த அழகு அனைத்தும் ஒன்றுதிரண்டு விட்டதோ என்னும் படியாகவும், பிறை போன்ற நெற்றியிலே வியர்வை வழியவும் (தன்னை வணங்கியெழுந்து) நின்ற தன் புதல்வியைச் சூரிய குலவேந்தன் விதர்ப்பன் பார்த்து (சிந்தித்து), அரசாளும் மன்னர்களை மலர்மாலை சூட்டி நாயகனாக ஏற்றுக் கொள்ளுகின்ற சுயம்வரம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

மங்கைக்கு மங்கலமான மணமாலை

பாடல்: மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரச
மெங்கு மறைகென் றியம்பினான் - பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு.

பாடல் பிரிப்பு : *மங்கை சுயம்வரம் நாள் ஏழு என்று வார் முரசம்*
எங்கும் அறைக என்று இயம்பினான் - பைங்கமுகின்
கூந்தல் மேல் கங்கை கொழுந்து ஓடும் நல் நாடன்
வேந்தர் மேல் தூது ஓட விட்டு.

பொருள்: பசுமையான கமுகு மரங்களின் கூந்தலை ஒத்த பாளைகளின் மேலாகக் கங்கையாறு பாய்ந்தோடுகின்ற தன்மை பொருந்திய நாட்டுக்குரியவனான விதர்ப்ப மன்னன், (தன் மகளின் திருமணச் செய்தியைப் பிறநாட்டு மன்னரிடம் அறிவிக்கும் பொருட்டு) தூதுவர்களை அனுப்பிவிட்டு, "தமயந்தியின் சுயம்வரம் ஏழாம் நாள் நடைபெறும்" என்று எங்கும் முரசறையும் படி கட்டளையிட்டான்.

வாள்நுதலாள் நாமம் நெஞ்சில் வைத்தான்

பாடல்: வழிமேல் விழிவைத் து வாணுதலா ணாம
மொழிமேற் செவிவைத்து மோகச் - சுழிமேற்ற
னெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடு வானில்
மஞ்சோட அன்னம் வர.

பாடல் பிரிப்பு : *வழிமேல் விழிவைத்து வாள் நுதலாள் நாமம்*
மொழி மேல் செவி வைத்து மோகம் - சுழி மேல் தன்
நெஞ்சு ஓடவைத்து அயர்வான் கண்டான் நெடுவானில்
மஞ்சு ஓட அன்னம் வர.

பொருள்: (அன்னப்பறவை திரும்பி வருகின்ற) வழியின் மீது தன் விழிகளை நிலை நிறுத்தி, பிரகாசிக்கும் நெற்றியினையுடைய தமயந்தியென்னும் பெயராகிய சொல்லின் மீது தனது காதுகளை நிலைநிறுத்தி, அவள் மீது கொண்ட காதற் சுழிமீது தன் மனத்தை நிலை நிறுத்தி, சோர்வு கொண்டிருந்த நளன், பரந்த ஆகாயத்திலே முகிற் கூட்டங்கள்கலைந்தோடுமாறு அன்னப்பட்சி வருதலைக் கண்டான்.

செல்வர் அகம்பார்க்கும் அற்றாரன்ன மன்னன்.

பாடல்:

முகம் பார்த் தருணோக்கி முன்னிரந்து செல்வ
ரகம்பார்க்கு மற்றோரைப் போல - மிகுங்காதல்
கேளா விருந்திட்டான் அனைத்தைக் கேளாரை
வாளான் விருந்திட்டமன்.

பாடல் பிரிப்பு:

முகம் பார்த்து அருள் நோக்கி முன் இரந்து செல்வர்
அகம் பார்க்கும் அற்றோரைப் போல - மிகும் காதல்
கேளா இருந்திட்டான் அன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்டமன்.

பொருள்: தன் கட்டளையைச் செவிமடுக்காத பகை மன்னர்களை வாளினாலே எமனுக்கு விருந்தாகக் கொடுத்த நளமன்னன், (பொருளற்ற ஏழைகள்) செல்வர்களின் முகத்தைப் பார்த்தும், அருட்பார்வையினை நோக்கியும் அவர் முன்னிலையில் இரந்தும் அவருடைய உள்ளக்கிடக்கையை எதிர்பார்க்கின்ற ஏழைகளைப் போல (தன்னைப்போல) தமயந்திக்கும் மிகுகின்ற காதலைப் பற்றிய செய்தியை (அன்னமுரைக்க) இருந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

என்னுயிரை மீள எனக்கே தந்தாய்!

பாடல் :

அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
வென்னுயிரை மீள வெனக்களித்தாய் - முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே யென்றான் றிருந்தாரை
யேமொழிக்கும் வேலா னெடுத்து.

பாடல் பிரிப்பு:

"அன்ன குலத்தின் அரசே அழிகின்ற
என் உயிரை மீள எனக்கு அளித்தாய் - முன் உரைத்தத
தேமொழிக்கு தீது இலவே" என்றான் திருந்தாரை
ஏம் ஒழிக்கும் வேலான் எடுத்து.

பொருள்: (தன்னுடைய பேச்சைக் கேட்டு) திருந்தாத பகைவரின் அகம்பாவத்தை அழிக்கின்ற வேலாயுதத்தை உடையவனாகிய நளன், (அன்னத்தைப் பார்த்து) " அன்னப் பட்சிகளின் அரசனே, அழிந்து கொண்டு போகின்ற என்னுயிரை எனக்கு மீட்டுத் தந்துவிட்டாய். முன்பு ,நீயுரைத்த தேன் போன்ற மொழிகளைப் பேசுகின்ற பெண்ணுக்கு எத்தகைய தீங்குமில்லையே" என்று விரைந்து கேட்டான்.

அன்னம் மொழிந்தது .... அழிந்தான் அரசன்

பாடல்:

கொற்றவன் னேவலினாற் போயக் குலக்கொடிபா
லுற்றதுவு மாங்கவடா னுற்றதுவு - முற்று
மொழிந்ததே யன்ன மொழிகேட்ட ரசற்
கழிந்ததே யுள்ள வறிவு.

பாடல் பிரிப்பு:

கொற்றவன் தன் ஏவலினால் போய் அக்குலக் கொடிபால்
உற்றதுவும் ஆங்கு அவள் தான் உற்றதுவும் - முற்று
மொழிந்தது அன்னம் மொழி கேட்ட அரசற்கு
அழிந்தது உள்ள அறிவு.

பொருள்: வெற்றிச் சிறப்புடைய நளமகராசனின் ஏவுதலினால் நல்ல குலத்திலே பிறந்த கொடி போன்றவளான தமயந்தியைத் தானடைந்ததும், அங்கு அவள் அடைந்துள்ள நிலைபற்றியதுமான செய்தி முழுவதையும் அன்னப்பட்சி அவனுக்குக் கூறியது. அப்பட்சி உரைத்த சொற்களைக் கேட்டு (ஏற்கெனவே அழிந்தது போக எஞ்சியிருந்த) வேந்தனின் உள்ளத்து அறிவும் அழியலாயிற்று.

தழலிற் படுதளிர்போற் சாய்ந்தான்

பாடல்:

கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
வோட்டை மனத்தோ டுயிர்தாங்கி - மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
றழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

பாடல் பிரிப்பு:

கேட்ட செவி வழியே கேளாது உணர்வு ஓட
ஓட்டை மனத்தோடு உயிர் தாங்கி - மீண்டும்
குழியில் படு கரிபோல் கோமான் கிடந்தான்
தழலில் படு தளிர்போல் சாய்ந்து.

பொருள்: (தமயந்தியும் தன்னைப் போலவே காதல் நோயுற்றாள் என) கேட்ட தன் காதுகளின் வழியாகவே தன்னைக் கேளாமலே உணர்வும் ஓடிப் போய்விட, உடைந்து விட்ட நெஞ்சத்துடன் தன்னுயிரையும் சுமந்து கொண்டு, மீண்டும் நெருப்பிலேபட்ட சிறு தளிரைப் போல வாட்டமுற்றுக் குழியிலே விழுந்து (கரையேற வகையின்றித் தவிக்கும்) கிடக்கும் யானையைப் போல நளன் வாடிக் கிடந்தான்.

கோதைக்குச் சுயம்வரம்

பாடல்:

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
வேதமிலாக் காட்சியர்வந் தெய்தினார் - போதிற்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாட
னடையாத வாயிலகம்.

பாடல் பிரிப்பு: *கோதை சுயம்வர நாள் கொற்றவனுக்கு உற்று உரைப்ப*
ஏதம் இலா காட்சியர் வந்து எய்தினார் - போதில்
பெடையொடு வண்டு உறங்கும் பேரொலி நீர்நாடன்
அடையாத வாயில் அகம்.

பொருள்: மாசற்ற தூதுவர், தமயந்தியின் சுயம்வரதினம் பற்றிய செய்தியினை வெற்றிச் சிறப்புடைய வேந்தனுக்கு எடுத்துச் சொல்வதற்காக பூக்களிலே வண்டினம் தம் துணையுடன் உறங்கிக் கிடக்கும் பேராரவாரமுடைய நீர்வளம் மிக்க நாட்டையுடையவனாகிய நளமகராசனின் ஒரு போதும் அடைக்கப்படாத வாசலை வந்து சேர்ந்தனர்.

மெலிந்த தோள் வேந்தன் விரைந்தான்.

பாடல்: காவலன்றன் றூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புல - மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து.

பாடல் பிரிப்பு : *காவலன் தன் தூதர் கடை காவலர்க்கு அறிவித்து*
ஏவலில் போய் ஈது என்று இயம்புதலும் - மாவில்
பொலிந்த தேர் பூட்டு என்றான் பூவாளி பாய
மெலிந்த தோள் வேந்தன் விரைந்து.

பொருள்: மக்களைக் காவல் செய்கின்ற வீமராசனின் தூதர்கள் (தாம் வந்த விடயத்தினை) வாயிற் காப்போருக்கு தெரிவித்து அந்தக் கட்டளையின் படி சென்று (தாம் வந்த) விடயத்தைக் கூறவும் (காமனின்) மலரம்புகள் பாய்தலினால் நலிந்த தோள்களைக் கொண்ட நளன் குதிரைகளாற் சிறப்புற்ற தன்னுடைய தேரை விரைவாகப் பூட்டுங்கள் என்று கட்டளையிட்டான்.

நாலடியார்
அறன் வலியுறுத்தல்
4 ஆம் அதிகாரம்

எப்பிறப்பிலும் ஒருவன் அறப்பணிகளைச் செய்து வரவேண்டும்.

பாடல்:

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கி
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பாரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

பாடல் பிரிப்பு:

அகத்தாரே வாழ்வார் என்று அண்ணாந்து நோக்கி,
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பர் (ஏ) மேலைத்
தவத்தால் தவம் செய்யாதார்.

பொருள்: இல் வாழ்க்கையே நல் வாழ்வென்று நினைத்து (செருக்குடன் நிமிர்ந்து பார்த்து, முற்பிறப்பிலே இயற்றிய நற்றவத்தின் பயனால்), (இவ்வாழ்க்கை கிடைத்ததென்று எண்ணாமல்), இப்பிறப்பிலே அறப்பணிகளைப் புறக்கணிப்பவர்கள், (மறு பிறப்பிலே) தாம் உள்ளே செல்ல இயலாதவர்களாய், தாம் மிகவும் வருந்தி, (ஒரு வீட்டின்) தலை வாசலிலே நின்றிருப்பார்கள்.

மறு பிறவிக்காக இப்பிறவியிலேயே தேட வேண்டும்.

பாடல்:

ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே - யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

பாடல் பிரிப்பு:

ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ அறம் மறந்து
போவாம் நாம் என்னாப் புலை நெஞ்சே ஓவாது
நின்று உஞற்றி வ ாழ்தி எனினும் நின் வாழ் நாட்கள்
சென்றன செய்வது உரை.

பொருள்: நாம் முடிவில் அழிந்து விடுவோம் என்பதை உணர்ந்து கொள்ளாத இழிந்தமனமே, நாம் செல்வத்தால் வளர்வோம் என்று பொருளை விரும்பி, தர்மச் செயல்களை மறந்து (எதுவித) தாழ்வுமின்றி முயற்சியுடன் வாழ்கின்றாய் ஆயினும், உன்னுடைய சீவியகாலம் முடிந்தபிறகு (மறுபிறப்பில்) செய்யப்போவதைச் சொல்வாயாக.

அறிவற்றவன் தீவினைப் பயன்களைப் புரிந்து கொள்ளாமல் வருந்துவான்.

பாடல்:

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை - நினைந்ததனைத்
தொல் லையதென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

பாடல் பிரிப்பு:

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை நினைந்து அதனை
தொல்லையது என்று உணர்வாரே
தடுமாற்றத்து எல்லை இகந்து ஒருவுவார்.

பொருள்: அறிவு இல்லாதவன் தீவினையின் காரணமாக இன்னல் வந்தபோது மிகவருந்திப் பெருமூச்செறிந்து மனத்தால் அழிந்துபோவான். அத் தீவினைப் பயன்களை நன்கு ஆராய்ந்து முற்பிறப்பிலே செய்த வினைப்பயன் என்று உணர்பவர்கள் (பிறவித் துன்பத்தால் ஏற்படும்) தடுமாற்றத்தின் எல்லையைக் கடந்து நீங்குவார்கள்.

நற்காரியங்கள் நிலைத்து நிற்க, ஏனையவை அழிந்து போகும்.

பாடல் :

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

பாடல் பிரிப்பு :

அரும் பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு ஆற்றவே கொள்க. கரும்பு ஊர்ந்த
சாறுபோல் சாலவும் பின் உதவி மற்று அதன்
கோது போல் போகும் உடம்பு.

பொருள்: பெறுவதற்கு அரிய இந்த உடலைப் பெற்றதன் பயயனாக, பெரிய பயன் மிகுந்த காரியயங்களைக் கடைப்பிடிப்பாராக. (நற்காரியங்கள்) கருப்பஞ்சாறு போல மிகவும் பயன்பட்டு நிற்கும். ஏனையவை (உபயோகமற்ற காரியங்கள்) கரும்புச் சக்கைபோலவுமாகி, உடம்பானது அழிந்துபோகும்.

உடல் எடுத்ததன் பலனை அனுபவித்தவர்கள் இறப்பைக் கண்டு அஞ்சமாட்டார்.

பாடல்:

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

பாடல் பிரிப்பு: கரும்பு ஆட்டி கட்டி சிறுகாலைக்
கொண்டார் துரும்பு எழுந்து வேகுங்கால்
துயர் ஆண்டு உழவார், வருந்தி உடம்பின்
பயன் கொண்டார் கூற்றம் வருங்கால் பரிவது இலர்.

பொருள்: (பதன்கெடுவதற்கு முன்பு) அதிகாலையிலே கருப்பஞ்சாற்றை எடுத்து வெல்லக் கட்டியை பெற்றுக் கொண்டவர்கள், (சாறுபிழிந்த பின்னுள்ள) சக்கைக் குவியல் தீயால் வேகும்போது அல்லற்பட்டு வருந்தமாட்டார்கள். உடலை வருத்தி உடல் எடுத்ததன் பயனை அனுபவித்தவர்கள் இயமன் (உயிரை எடுக்க) வரும்போது வருந்த மாட்டார்கள்.

இறப்பு நம் பின்னாலேயே நின்று கொண்டிருப்பதால் இயன்றவரை இன்றே தானதருமங்களைச் செய்யுங்கள்.

பாடல்: இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

பாடல் பிரிப்பு: *இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல்*
என்னாது பின்றையே நின்றது கூற்றம்
என்று எண்ணி ஒருவுமின் தீயவை
ஒல்லும் வகையால் மருவுமின் மாண்டார் அறம்.

பொருள்: இறப்பானது, இன்று அல்லது அன்று (நாளை) அல்லது என்றோ என்று எண்ணாமல், (நமக்கு) பின்னாலேயே நின்று கொண்டிருக்கின்றது என நினைத்துத் தீயசெயல்களை ஒதுக்குவீராக. (அத்துடன்) மாட்சிமைப்பட்ட அறிஞரால் கூறப்பட்ட தானதருமங்களை (உங்களால்) இயன்ற அளவு மனம்விரும்பிச் செய்வீர்களாக.

பூவுலக வாழ்க்கையிலிருந்து கொண்டு தேவருலக வாழ்க்கைக்கு ஏற்ற வழிவகைகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.

பாடல்: மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானாற் - றொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

பாடல் பிரிப்பு : *மக்களால் ஆய பெரும் பயனும் ஆயுங்கால்,*
எத்துணையும் ஆற்றப் பல, ஆனால் தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்து ஒழுகாது
உம்பர் கிடந்து உண்ணப் பண்ணப்படும்.

பொருள்: மக்கட்பிறவியால் உண்டாகின்ற பெரிய பயனை ஆராயும் போது, (செய்வதற்கு) எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. ஆயினும், பொருந்திய உடலுக்கு ஏற்ற நலன்களை மாத்திரம் அளித்து வாழாமல், மேலுலகில் இருந்து இன்பத்தை அனுபவிப்பதற்கு தக்கவாறு அறங்களைச் செய்ய வேண்டும்.

தகுந்தவர்களின் கையிலே தர்மம் சேர்ந்தால் அதன் பயன் மிக மிக அதிகமாக இருக்கும்.

பாடல்:

உறக்குந் துணையதோ ராலம் வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாஅங் - கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

பாடல் பிரிப்பு:

உறக்கும் துணையது ஓர் ஆலம் வித்து
ஈண்டி இறப்ப, நிழல் பயந்தா அங்கு அறப்பயனும்
தான் சிறிது ஆயினும் தக்கார் கைப்பட்டால்
வான் சிறிதாப் போர்த்து விடும்.

கிள்ளியெடுக்கும் அளவுகொண்ட (அதாவது, மிகச் சிறிய) ஓர் ஆலம் வித்தானது, மிகப்பெரிதாகி விரிந்த நிழலினைப் பரப்புவது போல, தருமத்தின் அளவு சிறிதாக இருப்பினும் சேர வேண்டியவர்களின் கையிலே சேர்ந்தால், வானமும் சிறிதாகத் தோன்றும்படி (வானைமூடி) தோன்றும்.

தினமும் பொழுது கழிந்து விடுதலைப் புரியாதவர்கள் மறுமையை மறந்திருப்பர்.

பாடல்:

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண் மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

பாடல் பிரிப்பு:

வைகலும் வைகல் வரக்கண்டு அஃது உணரார்
வைகலும் வைகலை வைகும் என்று இன்புறுவார்
வைகலும் வைகற்றம் வாழ் நாள் மேல் வைகுதல்
வைகலை வைத்துணராதார்.

பொருள்: நிதமும் பொழுது போதலைத் தம்முடைய ஆயுளின் மீது செலவு நாளாக வைத்து, அந்நாட்கள் கழிந்து போதலை உணராதவர்கள், நிதம் பொழுது போவதைக் கண்டும் அதனைப் புரிந்து கொள்ளாமல், நிதமும் பொழுது கழியாமல் நிற்கின்றது என்று எண்ணி இன்பமடைவர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டாம்

பாடல்:

மான வருங்கல நீக்கி யிரவென்னு
மீன விளிவினால் வாழ்வேன்ம - னீனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

பாடல் பிரிப்பு:

மானம் அருங்கலம் நீக்கி இரவு என்னும்
ஈன இழிவினால் வாழ்வேன் மன் ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதி சேர்ந்து
இவ்வுடம்பு நீட்டித்து நிற்கும் எனில்

பொருள்: மானம் என்னும் அருமையான அணிகலனை ஒதுக்கி இரந்து வாழ்தல் மூலமாவது உயிர் வாழ்வேன் என்னும் கொள்கையுடன் வாழ்ந்தால் போதும் உடலானது நீடித்து நிற்காது அழிந்தேவிடும். எனவே அழியும் உடலை வளர்க்க மானத்தை இழக்கவே வேண்டியதில்லை.

கல்வி
14 ஆம் அதிகாரம்

உலகத்திலே ஒருவனுக்குக் கல்வியால் உண்டாகும் அழகே உண்மை அழகாகும்.

பாடல்:

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

பாடல் பிரிப்பு:

குஞ்சி அழகும், கொடும் தானைக் கோட்டு
அழகும் மஞ்சள் அழகும் அழகு அல்ல,
நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு
நிலைமையால் கல்வி அழகே அழகு.

பொருள்: (ஆண்களுடைய) மயிர் முடியின் அழகும், மடிப்புடைய ஆடையின் கரையின் அழகும், (பெண்கள்) பூசுகின்ற மஞ்சளால் ஏற்படுகின்ற அழகும் (உண்மையான) அழகுகள் ஆகமாட்டா. நடு நிலைமையோடு நாம் மனத்தால் நன்னெறியில் ஒழுகுகின்றோம் என்று கருதச் செய்யும் கல்வி அறிவால் விளையும் அழகே உண்மை அழகாகும்.

அறியாமை என்னும் மயக்கத்தைப் போக்கக் கல்வியே சிறந்தது.

பாடல்:

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

பாடல் பிரிப்பு:

இம்மை பயக்கும், ஈய குறைவு இன்று,
தம்மை விளக்கும் தாம் உளர் ஆ
கேடு இன்று, எம்மை உலகத்துக்கும்
யாம் காணேம் கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து

பொருள்: (கல்வியானது) இப்பிறவிப் பயனைத் தரும்.(பிறருக்கு) கொடுப்பதால் குறைவுபடாது. கல்வி, தன்னை உடையவரைப் புகழால் விளங்கச் செய்யும், தாம் வாழும் வரை (அக் கல்விக்கு) அழிவில்லை. ஆதலால் கல்வியைப் போல அறியாமை என்னும் மயக்கத்தை அழிக்கும் மருந்தை எவ்வுலகத்திலும் நாம் காணவில்லை.

தாழ்ந்த குடியிலே பிறந்தவரையும் கல்வி உயர்ந்த இடத்திலே வைத்துப்போற்றச் செய்யும்.

பாடல்:

களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்.

பாடல் பிரிப்பு:

களர் நிலத்து பிறந்த உப்பினை சான்றோர்,
விளை நிலத்து நெல்லின் விழுமியதாக கொள்வர்
கடை நிலத்தோர் ஆயினும் கற்று அறிந்தோரை
தலை நிலத்து வைக்கப்படும்.

பொருள்: உவர் நிலத்தில் விளைந்த உப்பைப் பெரியோர், நல்ல அறுவடை தருகின்ற நிலத்திலே உண்டாகிய நெல்லைக் காட்டிலும் மேம்பட்டதாகக் கருதுவார்கள். (அதுபோல) இழிந்த குலத்திற் பிறந்தவராயினும் நன்கு கற்றறிந்தவரை உயர்ந்த இடத்திலே வைத்துப் போற்ற வேண்டும்.

ஒருவன் தன் பிள்ளைக்கு விட்டுச் செல்லக்கூடிய எச்சம் கல்வியேயாகும்

பாடல்:

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

பாடல் பிரிப்பு:

வைப்புழி கோள் படா வாய்த்து ஈயில்
கேடு இல்லை மிக்க சிறப்பின் அரசர்
செறின் வவ்வார், எச்சம் என ஒருவன்
மக்களுக்குச் செய்வன விச்சை, மற்று அல்ல பிற

பொருள்: வைத்த (மனமாகிய) இடத்திலிருந்து பிறரால் கவர்ந்தெடுக்கப்படமாட்டா. தகுந்த மாணவர்க்குப் போதிக்கப்படின் அதற்கு அழிவு இல்லை. தம்மைக் காட்டிலும் மிகுந்த சிறப்படைந்து விட்டாலும் பொறாமை கொண்டு மன்னரால் கவரப்பட முடியாதது. (ஆதலால்) ஒரு மனிதன் தன்னுடைய பிள்ளைகளுக்கு (தனக்குப் பிறகு) எஞ்சிய செல்வமாகத் தேடி வைக்கக் கூடியது கல்விச் செல்வத்துக்கு மாறாக வேறு பொருட்கள் இல்லை.

அன்பளிப்பு
திருமதி நடராசா
ஆசிரியர் - பண்

ஒவ்வொருவரது வாழ் நாட்கள் சிலவாக இருப்பதால் கற்கத் தகுந்த நூல்களைக் கற்றுப் பயனடையவேண்டும்.

பாடல்:

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல -தெள்ளிதி
னாராய்ந்த மைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

பாடல் பிரிப்பு:

கல்வி கரை இல, கற்பவர் நாள் சில,
மெல்ல நினைக்கின் பிணி பல, தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவு உடைய கற்பவே
நீர் ஒழியப் பால் உண் குருகின் தெரிந்து.

பொருள்: கல்வி வரையற்றது (ஆனால்) கற்பவர்களது வாழ்நாளோ சிலவேயாகும். (மேலும்) மெதுவாக ஆராய்ந்து பார்த்தால், கற்பவரின் உடலைப் பீடிக்கும் நோய்கள் பலவாகும். (எனவே) நீரை விலக்கிப் பாலை மட்டும் உண்ணுகின்ற (அன்னப்) பட்சியைப் போலத் தெளிவாக ஆராய்ந்து கற்பதற்குப் பொருத்தமான புத்தகங்களையே கற்க வேண்டும்.

எந்தச் சாதியைச் சேர்ந்தவராயினும், அவர் கற்றவராயிருப்பின் அவரின் துணையுடன் மெய்ப்பொருளை அறிந்து கொள்ள வேண்டும்.

பாடல்:

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் - காணா
யவன் றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன் றுணையா நல்ல கொளல்.

பாடல் பிரிப்பு:

தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டார் என்று இகழார்
காணாய் அவன் துணையால் ஆறு போயற்று
நூல் கற்ற மகன் துணையால் நல்ல கொளல்

பொருள்: (ஆற்றைக் கடப்பதற்கு) படகினைச் செலுத்துபவன் பழைய சாதிவேறுபாடுகளைப் பார்க்கும் பொழுது, தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் என்று இகழமாட்டாதவராய் அவனது துணையைக் கொண்டு ஆற்றைக் கடப்பது போல, (இழிந்த சாதியிற் பிறந்தவனாயினும்) நல்ல அறிவு நூல்களைக் கற்ற பெருமகனின் துணையைக் கொண்டு நல்ல மெய்ப் பொருளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வாயாக.

கற்றறிந்த அறிஞர்களோடு கூடி மகிழ்வதைக் காட்டிலும் வேறு இன்பம் இந்த உலகத்திலே எங்கும் கிடையாது.

பாடல்:

தகவலரும் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

பாடல் பிரிப்பு:

தகவல் அரும் தொல் கேள்வி தன்மை உடையார்,
இகல் இலர், எஃகு உடையார் தம்முள்
குழீஇ நகலின் இனிதாயின் காண்பார்
அகல் வானத்து உம்பர் உறைவார் பதி.

பொருள்: மாசற்ற பழைய கேள்வி ஞானத்தை உடையவர்களும், தம்முள் பகைமை இல்லாதவர்களும், அறிவுக் கூர்மை உடையவர்களும் கூடியிருந்து சந்தோஷமாய் இருப்பது அகன்ற வானத்தின் கண் வாழும் தேவர்களின் நகரத்தைக் காட்டிலும், இனிமையானதாக காண்பர்.

கல்லாதவர்களுடன் கொண்ட தொடர்பினாற் பெறப்படும் இன்பம் குறைந்து கொண்டும் கற்றவர் தொடர்பினாற் கிடைக்கும் இன்பம் கூடிக் கொண்டும் செல்வதைக் காணலாம்.

பாடல்:

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு.

பாடல் பிரிப்பு:

கனைகடல் தண்சேர்ப்ப கற்று அறிந்தார்
கேண்மை நுனியில் கரும்பு தின்று அற்று,
நுனி நீக்கி தூரின் தின்று அன்ன
தகைத்தது (அரோ) பண்பு இலா ஈரம் இலாளர் தொடர்பு

பொருள்: ஆர்ப்பரிக்கும் கடலின் குளிர்ந்த கரையைக் கொண்ட தலைவனே, கற்றறிந்தவரோடு கொள்ளும் தோழமை கரும்பின் நுனியிலிருந்து (அடி நோக்கி) தின்று சுவைப்பதை ஒக்கும். (ஆனால்) பண்பும் அருளும் இல்லாதவர்களோடு கொள்ளும் நட்பு, நுனியை நீக்கி அடியிலிருந்து தின்று சுவைப்பதை ஒத்த தன்மை உடையதாக இருக்கும்.

கல்லாதவர்களும் கற்றவர்களோடு சேர்ந்தால் நல்ல அறிவைப் பெறுவார்கள்

பாடல்:

கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

பாடல் பிரிப்பு:

கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்து
ஒழுகின் நல் அறிவு நாளும் தலைப்படுவர்
தொல் சிறப்பின் ஒள் நிறப் பாதிரிப் பூ சேர்தலால்,
புத்தோடு தண்ணீர்க்கும் தான் பயந்து ஆங்கு

பொருள்: பழமைச் சிறப்பும் ஒளி வீசுகின்ற நிறமுமுடைய பாதிரிப் பூவைச் சேர்ந்திருப்பதால், அதன் அகவிதழ் (தான் சேர்ந்திருக்கும்) குளிர்ந்த நீருக்கு நல்ல மணத்தைக் கொடுத்ததைப் போல, கல்லாதவர்களாயினும் கற்றறிந்த அறிஞர்களைச் சேர்ந்து பழகினால் நாளும் (படிப்படியாக) நல் அறிவினைப் பெற்றுச் சிறப்படைவர்.

தடுமாற்றம் நீங்க அறிவு நூல்களைக் கற்றல் வேண்டும்.

பாடல்:

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாம் - கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

பாடல் பிரிப்பு:

அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லாது
உலக நூல் ஓதுவது எல்லாம் கலகல
கூவும் துணை அல்லால் கொண்டு தடுமாற்றம்
போம் துணை அறிவார் இல்.

பொருள்: மிகுதியாக நன்மைபயக்கும் நூல்களைக் கற்கவேண்டின் (ஒருவன்) மெய்யறிவு தருகின்ற நூல்களைக் கற்றுத் தேறவேண்டும் உலக வாழ்வுக்குரிய நூல்களைக் கற்பதெல்லாம், கலகலவென்று கூவும் அளவுக்கேதுணையாகுமல்லாமல் அவற்றின் துணையைக் கொண்டு பிறவித் துன்பத்தை நீக்கி வீட்டின்பத்தைப் பெறுகின்ற தன்மையை அடைபவர் எவருமில்லை. (பிறவித் துன்பத்தை நீக்குவதற்குதவும் ஞான நூல்களையே நாம் மிகுதியாகக் கற்க வேண்டும்.)

ஆசாரக்கோவை
காப்பு

பாடல்:

பூமேவு மாமறையோர் போதித்த மூதுரையாற்
கோமேவு மாசாரக் கோவைசொல - நாமேவும்
ஆக்கு மழிக்கு மகில சராசரமுங்
காக்கு மொருநிதன் காப்பு.

பாடல் பிரிப்பு:

பூமேவும் மாமறையோர் போதித்த மூதுரையால் கோமேவும் ஆசாரக் கோவை சொ(ல்)ல நாமேவும், ஆக்கும் அழிக்கும் அகில சராசரமும் காக்கும் ஒரு நிதன் காப்பு.

பொருள்: உலகை (உலகத்திலுள்ள மக்களை) விரும்புகின்ற பெரும் வேதங்களின் வழி நடக்கின்ற தூயோர் கற்பித்த பழையமொழியினால் தேவர்களும் விரும்புகின்ற ஆசாரக்கோவையினைச் (ஒழுக்க நெறித் தொகுப்பை) சொல்லுவதற்கு (என்னுடைய)நாக்கு விரும்புகின்றது. உலகைத் தோற்றுவித்து, அழித்து, எல்லாப் பிரபஞ்சங்களையும் காவல் செய்கின்ற ஆண்டவன் காவல் இருப்பாராக.

கட்டளைக் கலிப்பா

பாடல்: 1.

வட்ட வாரிதி வையக மீதிலே
வடித்த செந்தமிழ் வாணரின் முன்னிலே
கட்டளைக் கலிப் பாவொரு கோவையாய்க்
கற்ற றிந்திலன் கூறுத லெற்றரோ
மட்டிலாச் சுடர் மாமணி யோடிணை
மழுங்க லுற்றப ளிங்கினைப் போலுமே
தட்டி லாத்திரு மேவுமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

வட்டவாரிதி வையகம் மீதிலே வடித்த செந்தமிழ் வாணரின் முன்னிலே, கட்டளைக் கலிப்பா ஒரு கோவையாய்க் கற்று அறிந்திலன் கூறுதல் எற்றரோ, மட்டு இலாச் சுடர்மாமணியோடு இணை மழுங்கல் உற்ற பளிங்கினைப் போலும், தட்டு இலாத் திருமேவும் முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே.

(குறிப்பு): இவ் ஆசாரக் கோவையைப் பாடிய கற்பிட்டி அப்துல் மஜீதுப் புலவர் தனக்குப் பொருளுதவி செய்த கொடைவள்ளலாகிய முகம்மதுத் தம்பி மரைக்காயர் என்பவரை விளித்துப் பாடுவதாக அமைந்துள்ளதால், அவரை விளிக்கின்ற பாடலின் கடைசி இரு வரிகளையும் முன்னே எடுத்துப் பொருள் கொள்ளுவது சிறப்புடையது.)

பொருள்: மாசற்ற திருமகள் விரும்புகின்ற முகம்மதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, வட்டமாகக் கடற்பரப்பால் சூழப்பட்ட இப்பூமியிலே, நன்கு கற்றுத் தெளிந்த சிறந்த தமிழறிஞர்களின் முன்னிலையிலே, கட்டளைக் கலிப்பாவை ஓர் ஒழுங்கு முறையில் நன்கு கற்றறியாத நான் கூறுவது எப்படி? ஒப்பற்ற சுடரினைத் தருகின்ற பெரிய மணிக்கு இணையாக வைத்திருக்கின்ற ஒளி மழுங்கிப்போன பளிங்கைப் போன்றுதான் (என் பாடல்கள்) இருக்கும்

இரண்டனை நினை.... இரண்டனை மற

பாடல்: 2.

ஆதி தன்னை நினைத்திட வேண்டுமே
அகத்துண் மாய்வைநி னைத்திட வேண்டுமே
நீதி யாகவே தான்செயு நன்றியை
நினைப்பை விட்டும றந்திட வேண்டுமே
வாதி யாய்ப்பிறர் செய்யவ நன்றியை
மனம் பொறுத்தும றந்திட வேண்டுமே
சாதி மேன்மைத ழைத்தமு கம்மதுத்
தம்பி மாரைக் காயச கானே.

பாடல் பிரிப்பு:

சாதி மேன்மை தழைத்த முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, ஆதி தன்னை நினைத்திட வேண்டும், அகத்துள் மாய்வைநினைத்திட வேண்டும், நீதியாகவே தான் செயும் நன்றியை நினைப்பைவிட்டு மறந்திட வேண்டும். வாதியாய்ப் பிறர்செய் அவ நன்றியை மனம்பொறுத்து மறந்திடவேண்டும்.

பொருள்: குல உயர்ச்சியிலே மேம்பட்டு திகழுகின்ற முகம்மதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, ஆண்டவனை என்னும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். உள்ளத்திலே இறப்பை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும், நீதி நெறியின்படி பிறருக்குத் தான் செய்கின்ற உதவிகளை (தனது) நினைப்பிலிருந்து அகற்றிவிட வேண்டும், எதிரியாக விருந்து பிறர் புரிகின்ற தீமைகளை உள்ளத்தில் வைக்காது உடனேமறந்து விட வேண்டும்.

அவசியம் செய்ய வேண்டியவை

பாடல்: 3.

மார்க்கந் தன்னைய றிந்திட வேண்டுமே
மனத்த ழுக்கைய கற்றிட வேண்டுமே
தீர்க்க மாயொரு சற்குரு முன்னிலே
தீட்சை யானது பெற்றிட வேண்டுமே
மூர்க்க மானகு ணத்தைய டக்கியே
முழுது மஞ்சிந டந்திட வேண்டுமே
தார்க்க வின்புய வாகைமு கம்மதுத்
தம்பி மாரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தார்க்கவின்புய வாகை முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, மார்க்கம் தன்னை அறிந்திட வேண்டும். மனத்து அழுக்கை அகற்றிடவேண்டும், தீர்க்கமாய் ஒரு சற்குரு முன்னிலே தீட்சையானது பெற்றிட வேண்டும். மூர்க்கமான குணத்தை அடக்கியே முழுதும் அஞ்சி நடந்திட வேண்டும்.*

பொருள்: மலர்மாலை சூடிய அழகிய தோள்களால் மாட்சிமைக்கப்பட்ட முகம்மதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, (ஒருவன் தன்னுடைய,) சமய நெறியைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். உள்ளத்திலுள்ள கெட்ட எண்ணங்களை நீக்கிவிட வேண்டும். நல்லதொரு குருவின் முன்னிலையில் திட்டமான நல்வழிகாட்டும் உபதேசங்களைப் பெற்றிட வேண்டும். கெட்ட குணத்தை அடக்கி (இறைவனுக்கு) முழுதும் பயந்து நடக்க வேண்டும்.

பாடல்: 4.

கற்ற றிந்தவர் பாலினி லேகியே
கற்றுக் கேட்டுவி ளங்கிடல் வேண்டுமே
கற்று ணர்ந்தபின் கற்றவை போலவே
கடமை யாக நயந்திடல் வேண்டுமே
கற்ற யாவையுங் கற்றறி யார்க்குறக்
கற்பித் துக்கொடுத் தேவிடல் வேண்டுமே
சற்கு ணாலய மானமு கம்மதுத்
தம்பி மாரைக் காயச காயனே

பாடல் பிரிப்பு: *சற்குண ஆலயமான முகமதுத்தம்பி மாமரக்காய சகாயனே, கற்று அறிந்தவர் பாலினில் ஏகியே கற்றுக்கேட்டு விளங்கிடல் வேண்டும். கற்று உணர்ந்த பின் கற்றவை போலவே கடமையாக நயந்திடல் வேண்டும். கற்றவையாவும் கற்று அறியார்க்கு உறக் கற்பித்துக் கொடுத்தேவிடல் வேண்டும்.*

பொருள்: நற்குணங்களுக்கு அமைவிடமான முகமதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, நன்கு கற்றுஅறிந்த அறிஞர்களிடம் சென்று கற்று, விளங்காதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுத் தெளிந்த பின்பு கற்றுக் கொண்டவற்றின் படி கடமை தவறாது நடந்து கொள்ள வேண்டும். படித்த யாவற்றையும் படிக்காதவர்களுக்கு நன்கு கற்பித்துக் கொடுக்க வேண்டும்.

இவர், இது செய்யாமை குற்றமாகும்

பாடல்: 5.

கற்ற றிந்தவர் கற்றறி யார்க்குறக்
கற்பி யாமலி ருப்பதுங் குற்றமே
கற்றி லாதவர் கற்றறிந் தோரிடங்
கற்றி டாமலி ருப்பதுங் குற்றமே

கற்ற றிந்தவர் கற்றவை போலவே
கடமை யாய்நட வாமையுங் குற்றமே
தற்ப தந்தனி வாய்ந்தமு கம்மதுத்
தம்பி மாரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தற்பதம் தனிவாய்ந்த முகமதுத்தம்பி மாமரைக்காயர் சகாயனே, கற்று அறிந்தவர் கற்று அறியார்க்கு உறக்கற்பியாமல் இருப்பது குற்றம், கற்று இலாதவர் கற்று அறிந்தோரிடம் கற்றிடாமல் இருப்பதும் குற்றம், கற்று அறிந்தவர் கற்றவை போலவே கடமையாய் நடவாமையும் குற்றம்.*

பொருள்: (தனக்கெவரும்) ஒப்பற்ற மிக மேம்பட்ட நிலையில் இருக்கின்ற முகமதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, நன்கு படித்த விடயங்களை அறிந்தவர்கள் படிப்பறிவில்லாதவர்களுக்கு நன்கு கற்பிக்காமல் இருப்பதும் குற்றமாகும். படிப்பறிவு இல்லாதவர்கள் கற்று அறிந்தோரிடம் சென்று கல்வி கற்காது இருப்பதும் குற்றமாகும். (கற்கவேண்டியவற்றை) கற்றுக் கொண்டவர்கள் தாங்கள் கற்றுக் கொண்டதன்வழி கடமையாக நடக்காமல் இருப்பது குற்றமாகும்.

இது கல்விக்கு இது

பாடல்: 6. புத்தி யானது கல்வியி னற்பிதா
பொறுமை யோதற் குத்தம மந்திரி
பத்தி யானது தானதன் பாக்கியம்
பரவுந் தாழ்மைய தற்குடு மானமாம்
சுத்தி யானது தானதன் கண்ணியம்
சுகிர்த நற்குண மேயதற் குத்துணை
சத்தி யந்தவ றாதமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *சத்தியம் தவறாத முகமதுத் தம்பி மாமரைக் காய சகாயனே, புத்தியானது கல்வியின் நற்பிதா, பொறுமையோ அதற்கு உத்தம மந்திரி, பத்தியானதுதான் அதன் பாக்கியம், பரவும் தாழ்மை அதற்கு உடுமானமாம், சுத்தியானதுதான் அதன் கண்ணியம் சுகிர்த நற்குணமே அதற்குத் துணை.*

பொருள்: உண்மையிலிருந்து மாறுபடாத முகமதுத் தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, புத்திதான் படிப்பறிவின் நல்ல தந்தையாகும். பொறுமைதான் அதற்குச் சிறந்த மந்திரியாகும். கடவுள் பக்தியே அதனுடைய பாக்கியமாகும். பெருகுகின்ற தாழ்மைக் குணமே அதற்கு உடை போன்றதாகும். உளச் சுத்தமே கல்விக்குக் கண்ணியமாகும். சிறந்த குணமே அதற்குத் துணையாகும்.

மிகுந்தவரும் குறைந்தவரும்

பாடல்: 7.

நாவில் வார்த்தைமி குந்திடும் தன்மையோர்
நாளுங் கல்விகு றைந்தவ ராகுவர்
நாவில் வார்த்தைகு றைந்திடுந் தன்மையோர்
நாளுங் கல்விமி குந்தவ ராகுவர்
பூவி லத்தகை யோர்க்குவ மானமாம்
பூர ணங்குறை நீர்க்கல சங்களே
தாவில் கீர்த்திசெ ழிக்குமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

தாவில் கீர்த்தி செழிக்கும் முகமதுத்தம்பி மாமரைக்காய சகாயனே, நாவில் வார்த்தை மிந்ந்திடும் தன்மையோர் நாளும் கல்வி குறைந்தவராகுவர். நாவில் வார்த்தை குறைந்திடும் தன்மையோர் நாளும் கல்வி மிகுந்தவராகுவர். பூவில் அத்தகையோர்க்கு உவமானமாம் பூரணம் குறை நீர்க்கலசங்களே.

பொருள்: மாசற்ற புகழ் விளங்கும் முகமதுத்தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, நாவிலே வார்த்தைகள் அதிகரித்துக் காணப்படும் தன்மையைக் கொண்டவர்கள் எந்நாளும் படிப்பறிவிலே குறைந்தவர்களாய் இருப்பார்கள். நாவிலே வார்த்தைகள் குறைந்து காணப்படும் தன்மையைக் கொண்டவர்கள் எந்நாளும் படிப்பறிவிலே மேம்பட்டவர்களாய் இருப்பார்கள். உலகிலே பூரணமாக நிரப்பப்பட்ட நீர்க்குடங்களும், குறையாக நிரப்பப்பட்ட நீர்க்குடங்களும் அப்படிப்பட்டவர்களுக்கு உதாரணங்களாகும்.

புகழ, இகழ, திகழத்தக்கவர்கள்

பாடல்: 8.

புகழத் தக்கவர். நல்லொழுக் கங்களைப்
போற்றி மக்களுக் குப்படிப் பித்தவர்
இகழத் தக்கவர் தீயொழுக் கங்களை
ஈன்ற மக்களிற் கண்டகற் றாதவர்
திகழத் தக்கவர் தூய்யவ னேவலைத்
திட்ட மாகவெ டுத்துந டந்தவர்
சகல யோகமி குந்தமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

சகலயோகம் மிகுந்த முகமதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, நல்லொழுக்கங்களைப் போற்றி மக்களுக்குப் படிப்பித்தவர் புகழத் தக்கவர், தீயொழுக்கங்களை ஈன்ற மக்களில் கண்டு அகற்றாதவர் இகழத்தக்கவர், தூய்யவன் ஏவலைத் திட்டமாக எடுத்து நடந்தவர் திகழத்தக்கவர்.

பொருள்: சகல அதிட்டங்களும் நிறைந்து விளங்குகின்ற முகமதுத்தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, நல்ல ஒழுக்க நெறிகளை மக்களக்குக் கற்றுக் கொடுத்தவர் இவ்வுலகிலே புகழ்ச்சிக்குரியவராவார். துர்நடத்தைகளைத் தாம் பெற்றெடுத்த மக்களில் கண்டு அதனை நீக்காதவர்கள் இகழ்ச்சிக்குரியவராவர். ஆண்டவனின் கட்டளையை உண்மையாகவே பின்பற்றி நடந்தவர்கள் உலகிலே மேம்பட்டு விளங்கத் தக்கவராவர்.

இது, இதனை அழித்துவிடும்

பாடல்: 9.

பொய்யு ரைத்திடல் வாழ்வினைத் தின்றிடும்
புறணி நற்றவம் யாவையும் தின்றிடும்
நையு மாகுல மாயுளைத் தின்றிடும்
நல்கு மீகையி டுக்கணைத் தின்றிடும்
செய்யும் வஞ்சக நன்மையைத் தின்றிடும்
சினவு வெஞ்சினம் புத்தியைத் தின்றிடும்
தூய்ம்மை மிக்கவி சேஷமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

தூய்ம்மைமிக்க விசேட முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே பொய் உரைத்திடல் வாழ்வினைத் தின்றிடும், புறணி நல்தவம் யாவையும் தின்றிடும், நையும் ஆகுலம் ஆயுளைத் தின்றிடும். நல்கும் ஈகை இடுக்கணைத் தின்றிடும். செய்யும் வஞ்சகம் நன்மையைத் தின்றிடும், சினவுவெஞ்சினம் புத்தியைத் தின்றிடும்.

பொருள்: தூய்மை மிகுந்த மேன்மைபொருந்தி முகமதுத்தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, பொய் சொல்லுதல் வாழ்க்கையை சின்னபின்னப்படுத்தி விடும், புறங்கூறுதல் ஒருவன் தான் செய்த பெருந் தவங்களை அழித்துவிடும். மனக்கவலையானது ஒருவனது (ஆயுளை) வாழ்நாளை அழித்துவிடும், பிறருக்கு மனமுவந்து கொடுக்கும் தருமமானது துன்பத்தை அழித்துவிடும், தீங்கு செய்தல் நன்மையை அழித்துவிடும், கொடிய சினமானது புத்தியை அழித்து விடும்.

இது இல்லாதவர், இதனைப் போன்றவர்

பாடல்: 10.

பத்தி யீகையில் லாப்பணப் பாக்கியர்
பழமில் லாவிருட் சத்தினைப் போல்வரே
புத்தி யாய்வணங்க காத்தகை ஆலிமும்
புனல்பெய் யாவெறுங் கொண்டலைப் போல்வரே
ஒத்த நாணமில் லாமட மங்கையர்
உப்பில் லாவெறு முண்டியைப் போல்வரே
தத்த முள்ளத யாளமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தத்தம் உள்ள தயாள முகமதுத்தம்பிமா மரைக்காய சகாயனே பத்தி ஈகைஇல்லாப் பணப்பாக்கியர் பழம் இல்லா விருட்சத்தினைப் போல்வர், புத்தியாய் வணங்காத்தகை ஆலிமும் புனல் பெய்யா வெறும் கொண்டலைப் போல்வர், ஒத்த நாணம் இல்லா மட மங்கையர் உப்பு இல்லா வெறும் உண்டியைப் போல்வர்.*

பொருள்: ஈகையும் இரக்ககுணமும்கொண்ட முகமதுத்தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, பத்தியோடு கூடிய ஈகைக் குணமில்லாத பணக் காரர்கள் பழமில்லாத பெரும் மரத்தைப் போன்றவர்கள், புத்தியோடு கூடிய வணக்கத்தைப் புரியாத ஆலிமும் (மார்க்க அறிஞர்) நீர் பொழியாத வெறுமையான மேகத்தைப்போன்றவர்கள், நாணம் சற்றுமில்லாத இளம் பெண்கள் உப்பில்லாத உணவுப் பதார்த்தங்களைப் போன்றவர்கள்.

பாடல்: 11.

பாவ மீட்சியில் லாவிள வாலிபர்
பாவு மஞ்சதில் லாமனை போலுமே
மேவு நீதல் லாமுடி மன்னவர்
மேய்க்கு மாயரில் லாத்தகர் போலுமே
கோவ சாந்தமில் லாதபக் கீறுகள்
குடிக்க நீருமில் லாநதி போலுமே
தாவந் தந்தனைத் தீர்க்குமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தாவந்தம் தனைத் தீர்க்கும் முகம்மதுத்தம்பி மாமரைக்காய சகாயனே, பாவம் மீட்சி இல்லாத இளவாலிபர் பாவுமஞ்சது இல்லா மனைபோலும், மேவுநீதம் இல்லா முடிமன்னவர் மேய்க்கும் ஆயர் இல்லாத் தகர்போலும், கோவம் சாந்தம் இல்லாத பக்கீறுகள் குடிக்க நீரும் இல்லாத நதிபோலும்.*

பொருள்: (பிறருக்கு ஏற்படும்) துன்பங்களைத் தீர்த்து வைக்கின்ற முகம்மதுத் தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, பாவத்திலிருந்து மீட்சி பெறாத இளம் வாலிபர்கள் பரவிய கூரையில்லாத வீட்டைப் போன்றவர்கள். (எல்லோரையும்) சமமாகக் கருதும் நீதி நெறியிலே சொல்லாத முடிசூடிய மன்னர்கள் (தங்களை) மேய்ப்பதற்கு ஓர் இடையன் இல்லாத ஆட்டைப் போன்றவர்கள், கோபங்கொண்டவர்களாயும், சாந்த குணம் இல்லாதும் இருக்கின்ற பக்கீறுகள் குடிப்பதற்கேற்ற நீரைக் கொண்டிராத நதியைப் போன்று இருப்பார்கள்.

இவரே யோக்கியர்

பாடல்: 12.

வாக்கு நாணய மாகவு ரைத்தலும்
வம்பு வாதினைக் கண்டுவி லக்கலும்
தாக்கும் வெஞ்சின மாற்றிய டக்கலும்
தரும நீதியிற் சித்தமி ருத்தலும்

பூக்கு மங்கையர் கற்பினைக் காத்தலும்
புனித யோக்கியர் தம்மியல் பென்றனர்
தாக்குந் தன்மைய கன்றமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தாக்கும் தன்மை அகன்ற முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, வாக்கு நாணயமாக உரைத்தலும், வம்புவாதினைக் கண்டு விலக்கலும், தாக்கும் வெஞ்சினம் மாற்றி அடக்கலும் தரும நீதியில் சித்தம் இருத்தலும், பூக்கும் மங்கையர் கற்பினைக் காத்தலும் புனித யோக்கியர்தம் இயல்பென்றனர்.*

பொருள்: பிறரை வருத்துகின்ற இயல்பு அற்ற முகம்மதுத்தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, (பிறருக்குக் கொடுக்கின்ற) வாக்குறுதிகளை மிக நாணயமான முறையில் கூறுதலும், தேவையற்ற சச்சரவுகளைக் கண்ணுற்ற வேளைகளில் (அவற்றிலே தலையிட்டு) நீக்கிவிடுதலும், பெருந்தாக்கங்களை உண்டாக்கும் கொடிய கோபத்தை அகற்றி அடக்கிவிடுதலும், தரும நெறியிலே மனத்தை வைத்திருத்தலும், மலர்கின்ற மங்கையரின் கற்பு நெறியைப் பாதுகாத்தலும் தூய்மை நிறைந்த நேர்மையாளர்களின் தன்மையாகும் என்று பெரியோர் கூறியுள்ளார்கள்.

இவற்றினிலைமை இதனைப் போன்றது

பாடல்: 13.

வாழுஞ் செல்வமும் தாழிலம் பாடதும்
வைய கத்துருள் சக்கரம் போலுமே
சூழு மாநிலத் தின்பமுந் துன்பமுஞ்
சுற்று கின்றவி ராட்டினம் போலுமே
வீழு மாயுளுந் தேகமும் விண்ணினில்
விளங்கி மங்கிடு மின்னலைப் போலுமே
தாழுந் தன்மைய கன்றமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தாழும் தன்மை அகன்ற முகமதுத்தம்பி மாமரைக்காய சகாயனே, வாழும் செல்வமும் தாழ் இலம்பாடதும் வையகத்து உருள் சக்கரம் போலும், சூழும் மாநிலத்து இன்பமும் துன்பமும் சுற்றுகின்ற இராட்டினம் போலும், வீழும் ஆயுளும் தேகமும் விண்ணினில் விளங்கி மங்கிடும் மின்னலைப் போலும்.*

பொருள்: என்றும் குறைவில்லாத தன்மையை உடைய முகமதுத் தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே. (எம்மை) வாழ்விக்கும் செல்வமும், தாழவைக்கின்ற வறுமையும் உலகத்திலே உருளுகின்ற சக்கரத்தைப் போன்றவை. இவ்வுலகத்திலே எம்மைச் சூழ்ந்திருக்கின்ற இன்பங்களும் துன்பங்களும் சுற்றிக் கொண்டிருக்கின்ற பம்பரத்தைப் போன்றவை. வீழ்ந்துபோகத்தக்க ஆயுட்காலமும் உடலும் விண்ணிலே விளக்கமாகத் தோன்றி மறைகின்ற மின்னலைப் போன்றவை.

இது உள்ளவர் இதில் சேரார்

பாடல்: 14.

பெருமை யுள்ளவர் பேர்கதி சேர்ந்திடார்
பேதை யுள்ளவர் தாஞ்சபை சேர்ந்திடார்
ஒருமை யுள்ளவர் கும்பியிற் சேர்ந்திடார்
ஊக்க முள்ளவர் தாழ்ச்சியிற் சேர்ந்திடார்
அருமை யுள்ளவ ரற்பரைச் சேர்ந்திடார்
ஆணை யுள்ளவ ரல்வழிச் சேர்ந்திடார்
தரும சற்குண சீலமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தருமம் சற்குணம் சீலம் முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே. பெருமை உள்ளவர் பேர்கதி சேர்ந்திடார், பேதை உள்ளவர் தாம் சபை சேர்ந்திடார், ஒருமை உள்ளவர் கும்பியில் சேர்ந்திடார், ஊக்கம் உள்ளவர் தாழ்ச்சியில் சேர்ந்திடார், அருமை உள்ளவர் அற்பரைச் சேர்ந்திடார், ஆணை உள்ளவர் அல்வழிச் சேர்ந்திடார்.*

பொருள்: அறமும் நற்குணமும் ஒழுக்கமும் நிறைந்த முகம்மதுத்தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, அகம்பாவம் கொண்டவர்கள் மோட்சத்தை அடையமாட்டார்கள். அறிவில்லாதவர்கள் அறிஞர் கூடியிருக்கும் சபையில் சேரத்தகுதி இல்லாதவர்கள். ஆண்டவன் ஒருவனே என்ற கொள்கையுடையவர் நரகத்தை அடையமாட்டார்கள். முயற்சி உடையவர்கள் தாழ்ந்து போக மாட்டார்கள்.உயர்ந்த (அருமையான) குணத்தைக் கொண்டவர்கள் கீழ் மக்களோடு சேர மாட்டார்கள். கடவுளின் ஆணையை மேற்கொண்டு நடப்பவர்கள் தீய வழிக்குப் போகமாட்டார்கள்.

ஆயுளைக் குறைப்பன

பாடல்: 15.

தந்தை தாய்சொலைத் தட்டிந டக்கலும்
தன்னி னத்தை வெறுத்துவி லக்கலும்
சிந்தை யேழையைத் திட்டிவெ ருட்டலும்
சீரி லாத பகீல்தனஞ் செய்தலும்
வந்த வேளையை விட்டுவ ணங்கலும்
வாழு நாளினைத் தேய்த்திடு மென்றனர்
சந்த தந்தழைத் தோங்குமு கம்மதுத்
தம்பி மாரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *சந்ததம் தழைத்து ஓங்கும் முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே,தந்தை, தாய் சொல்லைத் தட்டி நடக்கலும், தன் இனத்தை வெறுத்து விலக்கலும் சிந்தை ஏழையைத் திட்டி வெருட்டலும், சீர் இலாத பகீல்தனம் செய்தலும் வந்தவேளை யைவிட்டு வணங்கலும், வாழும் நாளினைத் தேய்த்திடும் என்றனர்.*

பொருள்: எப்பொழுதும் செழித்து விளங்குகின்ற முகமதுத்தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, மாதா பிதா பேச்சைக் கேட்காமல் நடப்பதும், தன்னுடைய இனத்தவரை உதாசீனஞ் செய்து விலக்கி வைத்தலும், துன்பத்தையுடைய ஏழைகளை ஏசித் துரத்திவிடுதலும், சிறப்பற்ற உலோபத்தனத்தைக் காட்டுதலும், உரிய நேரத்தினைத் தவிர்த்து தொழுவதும் (ஆகிய செயல்கள்) ஆயுளைக் குறைத்து விடக்கூடியவை என்று (பெரியோர்) கூறுகின்றனர்.

ஒருவரை அறியுங்கள்

பாடல்: 16.

அண்ணன் றம்பி சினேகிதர் தங்களை
ஆபத் தாகிய வேளையிற் காணலாம்
ஒண்ணு நற்பொறை யுள்ளவர் தங்களை
ஒங்கும் வெஞ்சின வேளையிற் காணலாம்
நண்ணும் வீரிய முள்ளவர் தங்களை
நன்கு போர்புரி வேளையிற் காணலாம்
தண்ணந் தங்கிய செல்வமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

தண்ணம் தங்கிய செல்வம் முகமதுத் தம்பி மாரைக்காய சகாயனே, அண்ணன், தம்பி, சிநேகிதர் தங்களை ஆபத்தாகிய வேளையில் காணலாம், ஒண்ணும் நல்பொறை உள்ளவர் தங்களை ஒங்கும் வெம்சின வேளையில் காணலாம். நண்ணும் வீரியம் உள்ளவர் தங்களை நன்கு போர்புரி வேளையில் காணலாம்.

பொருள்: இரக்க சுபாவமுள்ள செலவத்தைக் கொண்டுள்ள முகமதுத்தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, அண்ணன், தம்பி, சினேகிதர் போன்றவர்களை ஆபத்து வேளைகளில் அறிந்து கொள்ளலாம். (ஒருவரோடு) பொருந்தியிருக்கின்ற நல்ல பொறுமைக்குணத்தை உடையவர்களைக் கடுஞ்சினம் உண்டாகின்ற வேளைகளிற் கண்டு கொள்ளலாம். இயல்பாகவே தங்களோடு வீரம் சேர்ந்திருக்கின்றவர்களை (பிறருடன்) யுத்தம் செய்கின்ற வேளையிற் கண்டு கொள்ளலாம்.

நம்பவொண்ணாதவர்

பாடல்: 17.

ஏந்து வாட்கொலை வீரரை நம்பினும்
எதிர்த்து நின்றிடுங் கள்ளரை நம்பினும்
காந்து மும்மத யானையை நம்பினும்
கரடி சிங்கமி யாளியை நம்பினும்
பாந்த ளூட்பகை கொண்டவர் தங்களைப்
பாசஞ் செய்வினு நம்பவொண் ணாதுகாண்
சாந்த சற்குணம் வாய்த்தமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *சாந்தம், சற்குணம் வாய்த்த முகம்மதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, ஏந்துவாள் கொலைவீரரை நம்பினும், எதிர்த்து நின்றிடும் கள்ளரை நம்பினும், காந்து மும்மத யானையை நம்பினும், கரடி, சிங்கம், யாளியை நம்பினும் பாந்தள் உட்பகை கொண்டவர் தங்களைப் பாசம் செய்வினும் நம்ப ஒண்ணாது காண்.*

பொருள்: பொறுமையும், நற்குணமும் வாய்க்கப்பெற்ற முகமதுத்தம்பிமா மரைக்காயர் என்னும் தோழனே, வாளேந்திக் கொல்கின்ற வீரர்களை நம்பினாலும், எதிர்த்து நின்று தீயன செய்கின்ற கள்வர்களை நம்பினாலும், சினமும் மும்மதங்களையுமுடைய யானையை நம்பினாலும், கரடி, சிங்கம், யாளி போன்ற விலங்குகளை நம்பினாலும், பாம்பினைப் போல உள்ளத்தினுள்ளே பகைமை கொண்டிருக்கிறவர்களை நம்பக்கூடாது என்பதை அறிவாயாக.

இவையே நல்ல குணங்கள்

பாடல்: 18.

பகைமை காட்டி முனிந்தெதிர்ப் போர்தமை
பக்தி காட்டி யிணங்கிடச் செய்தலும்
மிகைமை காட்டி யடாத்துகள் செய்யினும்
மேன்மை காட்டி மிகுந்து சகித்தலும்
மகமை காட்டி மிடித்தவர்க் கீதலும்
மண்டலம் புகழ் சற்குண மாகுமே
தகைமை காட்டி விளங்குமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு: *தகமை காட்டி விளங்கும் முகமதுத்தம்பி மாமரைக்காய சகாயனே, பகைமை காட்டி முனிந்து எதிர்ப்போர்தமைப் பத்திகாட்டி இணங்கிடச் செய்தலும், மிகைமை காட்டி அடாத்துகள் செய்யினும் மேன்மை காட்டி மிகுந்து சகித்தலும், மகமை காட்டி மிடித்தவர்க்கு ஈதலும் மண்டலம்புகழ் சற்குணம் ஆகும்.*

பொருள்: நல்ல தகுதிகளை வெளிப்படுத்தி விளங்குகின்ற தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, (எம்மீது) பகைகொண்டு சினத்துடன் எதிர்ப்பவர்களை பக்தியைக் காட்டி இணங்கிப் போகச் செய்வதும், (எம்மை) வருத்தக்கூடிய அடாத செயல்களைச் செய்தாலும், அவற்றைத்தம்முடைய உயர் குணங்களால் பொறுத்துக் கொள்ளுதலும், தமது வருவாயிலிருந்து வறியவர்களுக்குக் கொடுத்தலும் இந்த உலகம் புகழ்ந்து போற்றக்கூடிய நல்ல குணங்களாகும்.

முயற்சியுள்ளவரும் அது அற்றவரும்

பாடல்: 19.

முயற்சி யுள்ளவர் தஞ்சமு கத்தினின்
முகமன் லக்குமி தங்கி யிருக்குமே
முயற்சி யற்றவர் தஞ்சமு கத்தினின்
முகடி யானது தங்கியி ருக்குமே
முயற்சி யுள்ளவர் தாழ்மை யடைந்திடார்
முயற்சி யற்றவர் மேன்மை யடைந்திடார்
தயச்சி ரோமணி யானமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

தயச்சிரோமணியான முகம்மதுத்தம்பி மாமரைக்காய சகாயனே முயற்சி உள்ளவர் தம் சமூகத்தினில் முகமன் இலக்குமி தங்கியிருக்கும், முயற்சி அற்றவர் தம் சமூகத்தினில் முகடியானது தங்கியிருக்கும், முயற்சி உள்ளவர் தாழ்மை அடைந்திடார், முயற்சி அற்றவர் மேன்மை அடைந்திடார்.

பொருள்: இரக்கங் காட்டுவதில் தலையில் (தலைமுடியில்) அணிகின்ற மணியை ஒத்தவரான முகம்மதுத்தம்பி மரைக்காயர் என்னும் தோழனே, முயற்சியுள்ளவரின் சமூகத்தில் திருமகள் முகமலர்ந்து தங்கியிருப்பாள். முயற்சி இல்லாதவர் சமூகத்தில் மூதேவி தங்கியிருப்பாள் (எப்பொழுதும்) முயற்சியுடையவர்கள் இகழ்ச்சி (கீழ்நிலையை) அடையமாட்டார்கள். முயற்சியற்றவர்கள் உயர்நிலையை அடையமாட்டார்கள்.

இவை உத்தமமான காரியங்கள்

பாடல்: 20.

காலங்கண்டு பிழைத்தலு முத்தமம்
கரும மெண்ணி யியற்றலு முத்தமம்
ஞாலங் கண்டு நடத்தலு முத்தமம்
நற்கு ணத்திலி ருந்தலு முத்தமம்
சாலங் கண்டு விளங்கலு முத்தமம்
சபை யறிந்து விளம்பலு முத்தமம்
தாலங் கண்டு வழங்குமு கம்மதுத்
தம்பி மாமரைக் காயச காயனே.

பாடல் பிரிப்பு:

தாலங் கண்டு வழங்கும் முகமதுத் தம்பி மாமரைக்காய சகாயனே, காலம்கண்டு பிழைத்தலும் உத்தமம், கருமம் எண்ணி இயற்றலும் உத்தமம், ஞானம்கண்டு நடத்தலும் உத்தமம், நற்குணத்தில் இருத்தலும் உத்தமம், சாலம்கண்டு விளங்கலும் உத்தமம்.

பொருள்: உண்ணும் பாத்திரமறிந்து கொடுக்கின்ற முகம்மதுத்தம்பிமாமரைக்காயர் என்னும் தோழனே, காலமறிந்து அதற்கேற்பச் செயற்படுத்தும், ஒரு விடயத்தை தீர ஆராய்ந்து நடந்து கொள்வதும் உலக நடையை அறிந்து அதற்கமைய நடந்து கொள்வதும், நல்ல குணத்தை நிலையாகக் கொண்டிருத்தலும் (கபடர்கள் செய்யும்) கண்கட்டு வித்தைகளை விளங்கிக் கொள்ளுதலும், சபையின் இயல்பு அறிந்து பேசுவதும் உத்தமமான (நன்மையான) செயல்களாகும்.

பெரிய புராணம்
சேக்கிழார்
திருநகரச் சிறப்பு

திலகம் ஒக்கும் சீர்த்திருவாரூர்

பாடல்:

நிலம கட்கழ கார்திரு நீணுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் டாமரை போல்மலர்ந்
தலகில் சீர்திரு வாரூர் விளங்குமால்.

பாடல் பிரிப்பு:

நிலமகட்கு அழகு ஆர் திரு நீள் நுதல் திலகம் ஒப்பது, செம்பியர் வாழ்பதி, மலர்மகட்கு வண் தாமரைபோல் மலர்ந்து, அலகில் சீர் திருவாரூர் விளங்கும். (ஆல் -அசை)

பொருள்: பூமாதேவியின் அழகு நிறைந்த நீண்ட நெற்றியிலே உள்ள திலகம் போன்றதும், சோழ அரசர்கள் அரசு புரிந்து வருவதும், (செந்தாமரை) மலரில் வீற்றிருக்கும் இலக்குமிதேவி வாழ்வதற்கேற்ற வளம் பொருந்திய தாமரைபோலச் செழித்துள்ளதுமான அளவில்லாத சிறப்புடைய திருவாரூர் விளங்கும்.

செங்கதிரோன் வழித் தோன்றல்

பாடல்:

அன்ன தொன்னக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீரந பாயன் வழிமுதன்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே.

பாடல் பிரிப்பு:

அன்ன தொல் நகருக்கு அரசு ஆயினான், துன்னு செம் கதிரோன் வழி தோன்றினான், மன்னு சீர் அநபாயன் வழிமுதல், மின்னும் மாமணி பூண் மனு வேந்தன்.(ஏ-ஈற்றசை)

பொருள்: அப்படிப்பட்ட (சிறப்பு மிகுந்த) பழமையான நகரத்துக்கு அரசனாக இருந்தவன், நெருங்கிய சிவந்த கதிர்களைக் கொண்ட சூரியகுல மரபிலே தோன்றியவன், நிலைபெற்ற சிறப்புடைய அநபாயச் சோழனுடைய முன்னைய வழித்தோன்றலாகிய ஒளி வீசுகின்ற பெரிய மணிகளை (ஆபரணமாக) அணிந்த மனு எனப்படும் வேந்தனே ஆவான்.

கண்ணும் ஆவியும் எனக் காத்தான்

பாடல்: மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணிலாதன மாண வியற்றினான்.

பாடல் பொருள்: *மண்ணில் வாழ்தரு மன் உயிர்கட்கு எலாம் கண்ணும் ஆவியும் ஆம் பெரும் காவலான், விண்ணுளார் மகிழ்வு எய்திட எண் இலாதன வேள்விகள் மாண இயற்றினான்.*

பொருள்: (அந்த மனுச்சோழன்) நாட்டிலே வாழ்கின்ற நிலைபெற்ற உயிர்களையெல்லாம் (தன்னுடைய) கண்ணையும் உயிரையும் போலக் காவல் செய்தனன்.(அத்துடன்) வானுலகில் உள்ள தேவர்கள் மகிழ்ச்சி கொள்ளும்படி எண்ணிக்கையில்லாத யாகங்களைச் சிறப்பாகச் செய்தான்.

மனுவின் பெயரைத் தன் பெயராக்கினான்

பாடல்: கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினான்.

பாடல் பிரிப்பு: *கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திட,சுற்று மன்னர் திறை கடை சூழ்ந்திட, செற்றம் நீக்கிய செம்மையின் மெய் மனு பெற்ற நீதியும் தன் பெயர் ஆக்கினான்.*

பொருள்: வெற்றி மிக்க தனது ஆணைச் சக்கரம் உலகினைச் சூழ்ந்து நிற்கவும், தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட மன்னர்கள் தரும் திறைப்பொருள் வாயிலில் சூழ்ந்து கிடக்கவும், பகைமை இல்லாத செம்மையினாலே உண்மையாளனாகிய (அந்த முன்னைய) மனு வேந்தன் வகுத்து வைத்த மனு நீதியையும் தனது பெயராக்கிக் கொண்டான்.

பூசனை முறைப்படி பூர்த்தி செய்தான்

பாடல்: பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டு நிபந்தமா ராயந்துளான்
துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்.

பாடல் பிரிப்பு: *பொங்கு மா மறை புற்று இடம் கொண்டவர், எங்கும் ஆகிய இருந்தவர் பூசனைக்கு அங்கண் வேண்டும் நிபந்தம், துங்க ஆகமம் சொன்ன முறைமையால் ஆய்ந்துளான். (ஆராய்ந்து உள்ளான் எனக் கொள்க)*

பொருள்: பெருகி வளர்கின்ற பெருவேதமென்னும் புற்றினை இடமாகக் கொண்டு, எங்குந் தானேயாகி இருந்தவராகிய இறைவனின் பூசைக்கு வேண்டிய முறைகளை உயர்ந்த ஆகமங்கள் விதித்தவாறே ஆராய்ந்து செய்தவன்.

தேவி வயிற்றிலே திருக்குமரன் உதித்தான்

பாடல்:

அறம்பொரு ளின்பமான அறனெறி வழாமற் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங்காக்கு நாளில்
சிறந்தநற் றவத்தாற் தேவி திருமணி வயிற்றின் மைந்தன்
பிறந்தன னுலகம் போற்றப் பேரரிக் குருளை யன்னான்.

பாடல் பிரிப்பு: *அறம் பொருள் இன்பம் ஆன அறம் நெறி வழாமல் புல்லி, மறம் கடிந்து அரசர் போன்ற வையகம் காக்கும் நாளில், சிறந்த நல்ல தவத்தால் தேவி திரு மணி வயிற்றில், உலகம் போற்ற பேர் அரி குருளை அன்னான், மைந்தன் பிறந்தனன்.*

பொருள்: (இம்மனுச் சோழன்) அறம், பொருள், இன்பம் ஆகிய தரும வழியிலிருந்து விலகாமல் நாட்டைக் காத்து, தீமையை ஒறுத்து (பிரதேச) அரசர்கள் போற்றிப் புகழும் வண்ணம் இந்த உலகத்தைக் காவல் செய்து வருகின்ற நாளில், செய்து வந்த சிறந்த தவத்தின் பயனாக அரச மகாதேவியின் சிறப்புடைய வயிற்றிலே, உலகம் போற்றத்தக்க சிங்கக் குட்டியை நிகர்த்த ஒரு மைந்தன் பிறந்தான்.

தெய்வக் கலைபல திருந்த ஓதினான்

பாடல்:

தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த வோதிக்
கவனவெம் புரவியானை தேர்ப்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும்பேறே யெனவரும் பண்பின்மிக்கான்.

பாடல் பிரிப்பு: *தவம் முயன்று அரிதில் பெற்ற தனி இளம் குமரன், நாளும் சிவம் முயன்று அடையும் தெய்வக் கலை பல திருந்த ஓதி, கவன வெம் புரவி யானை தேர்ப்படை தொழில்கள் கற்று பவம் முயன்று அதுவும் பேறே என வரும் பண்பின் மிக்கான்.*

பொருள்: (மனுச் சோழனும் மனைவியும்) தவம் புரிந்து அருமையாகப் பெற்றெடுத்த ஒப்பற்ற அரச இளங்குமரன், நாள்தோறும் முயற்சி செய்து சிவத்தினை அடையச் செய்யக்கூடிய தெய்வீகக் கலைகள் பலவற்றையும் குற்றமறக் கற்றும் வேகமான கொடிய குதிரை, யானை, தேர்ப்படை போன்ற (அரச குலத்துக்குரிய) தொழில்களைக் கற்றும், இப்பிறவியானது தான் பெற்ற பெரும்பேறே என்று எண்ணுகின்ற சிறந்த பண்புகளினால் மிகுந்து சிறப்பு அடைந்தான்.

குணத்தால் நீடிய குமரன்

பாடல்:

அளவிற்றொல் கலைகள் முற்றி யரும்பெறற் றந்தை மிக்க
உளமகிழ் காதல்கூர வோங்கிய குணத்தா னீடி
இளவர சென்னும் தன்மை யெய்துதற் கணியனாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநா ளொருநாள் மைந்தன்.

பாடல் பிரிப்பு:

அளவில் தொல் கலைகள் முற்றி, அரும்பெறல் தந்தை மிக்க
உளம் மகிழ் காதல்கூர, ஓங்கிய குணத்தால் நீடி இளவரசு
என்னும் தன்மை எய்துதற்கு அணியனாகி, வளர் இளம் பரிதி
போன்று வாழும் நாள் மைந்தன், ஒருநாள்.

பொருள்: (மேலே கூறப்பட்ட) அளவற்ற பழைய கலைகள் எல்லாம் நிரம்பப் பெற்றவனாய், பெறுவதற்கு அருமையான தந்தையாகிய மனுச் சோழன் மிகுந்த உள்ள மகிழ்ச்சியால் அன்புமேலிட, மேலோங்கிய நற்குணங்களால் உயர்ந்து, இளவரசன் என்கின்ற பட்டத்தினைப் பெறுவதற்குத் தகுதி உடையவனாகி வளருகின்ற இளம் சூரியனைப் போல அம்மைந்தன் வாழ்ந்து வருகின்ற போது, ஒரு நாளிலே.

மன்னிளங் குமரர் சூழச் சென்றான்

பாடல்:

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர்க்கோயினின்று
மங்குல் தோய் மாடவீதி மன்னிளங் குமரர் சூழக்
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமங் குவவு தோளான்
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்தான்.

பாடல் பிரிப்பு:

கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமம் குவவு தோளான்,
மங்குல் தோய்-மாடம் வீதி மன் இளம் குமரர் சூழ, பொங்கிய
தானை சூழ, திங்கள் வெண் கவிகை மன்னன் திரு வளர்
கோயில் நின்று, தேர்மிசை பொலிந்து போந்தான்.

பொருள்: மணம் வீசும் மாலைகள் தாழ்ந்து கிடக்கக் குங்குமம் விளங்கிடும் தோள்களை உடைய அவன், மேகங்கள் படிகின்ற உயர்ந்த மாட வீதியினூடாக, அரச வம்சத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சூழ்ந்து வரவும், பெருகிய சேனைகள் சூழ்ந்து வரவும், வெண்மையான சந்திர வட்டக் குடையினையுடைய மன்னனுடைய செல்வம் பெருகின்ற அரண்மனையிலிருந்து புறப்பட்டுத் தேரிலே கம்பீரமாகச் சென்று கொண்டிருந்தான்.

நறுங்குழலார் வெள்வளை சிந்த வந்தான்

பொருள்: பரசுவந் தியர்முன் சூதர் மாகத ரொருபாற் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை யொருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங் கொலி யொருபால் வென்றி
அரசிளங் குமரன் போது யணிமணி மாடவீதி.

பாடல் பிரிப்பு: *பரசுவந்தியர் முன், சூதர் மாகதர் ஒரு பால், பாங்கர் விரைநறும்*
குழலார் சிந்து வெள் வளை ஒரு பால், மிக்க முரசொடு
சங்கம் ஆர்ப்ப முழங்கு ஒலி ஒரு பால், வென்றி அரசு இளம்
குமரன் அணி மணி மாட வீதி போதும்

பொருள்: புகழ் பாடுகின்ற வந்தியர் முன்னாலும், வருகையை அறிவிக்கும் சூதரும் வெற்றியைப் புகழ்ந்துரைக்கும் மாகதரும் ஒரு பக்கமாகவும், வாசனை பொருந்திய நறிய கூந்தலையுடைய பெண்கள் (மகிழ்ச்சிப் பெருக்கால்) சிந்துகின்ற வெண்மை நிற வளையல்கள் ஒரு பக்கமாகவும், மிகுந்த ஓசையைக் கொண்ட முரசொடு சங்குகளும் ஆர்ப்பரித்து ஒலிக்கும் ஒலி ஒரு பக்கமாகவும் இருக்கத் தக்கதாக வெற்றிச் சிறப்புடைய அரசிளங்குமரன் அலங்கரிக்கப்பட்ட மாட வீதியினூடாகச் சென்றான்.

தானை மன்னனைத் தருமம் சோதித்தது

பாடல்: தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினி லுண்மைப் பான்மைசோ தித்தாலென்ன
மனித்தர்தன் வரவுகாணா வண்ணமோர் வண்ண நல்லான்
புனிற்றிளங்கன்று துள்ளிப்போந்ததம் மறுகினூடே.

பாடல் பிரிப்பு: *தனி பெரும் தருமம் தான் ஓர் தயா இன்றி தானை மன்னன், பனிப்பில்*
சிந்தையினில் உண்மைப் பான்மை சோதித்தால் என்ன, மனித்தர் தன்
வரவு காணா வண்ணம் ஓர் நல் ஆன் புனிற்று இளம் கன்று துள்ளி
அம் மறுகின் ஊடு போந்தது.

பொருள்: ஒப்பற்ற பெருமையினையுடைய தரும தேவதையானது ஒரு விதமான தயவு தாட்சணியமும் இன்றிச் சேனையுடைய மன்னனின், உறுதியையும் மனத்திலுமுள்ள உண்மைத் தன்மையினையும் அறிய முற்பட்டதுபோல, மனிதக் கூட்டம் திரண்டு வருவதைக் கண்டு (வெருட்சியடைந்து) அழகிய பசுவின்மிகவும் இளையதான கன்று துள்ளிப் பாய்ந்து அந்த ஊர்வலத்தின் உள்ளே புகுந்தது.

அம்புனிற்றாவின் கன்றுக்கு அபாயம்

பாடல் :

அம்புனிற் றாவின் கன்றோ ரபாயத்தி னூடுபோகிச்
செம்பொனிற் றேர்க்கான் மீதுவிசையினாற் செல்லப்பட்டே
உம்பரி னடையக் கண்டங் குருகுதா யலமந்தோடி
வெம்பிடு மலறுஞ் சோரு மெய்நடுக் குற்றுவீழும்.

பாடல் பிரிப்பு:

அம் புனிற்று ஆ வின் கன்று ஓர் அபாயத்தின் ஊடு போகி, செம்
பொனின் தேர்க் கால் மீது விசையினால் செல்லப்பட்டு,
உம்பரின் அடைய கண்டு அங்கு உருகு தாய் அலமந்து ஓடி,
வெம்பிடும் அலறும் சோரும் மெய் நடுக்கு உற்று வீழும்.

பொருள்: (அவ்வாறு ஓடிவந்த) அழகிய பசுவின் இளங்கன்று அபாயத்தின் தன்மையினுள்ளே சென்று, சிவந்த பொன்மையான தேர்ச்சக்கரத்தின் வேகத்தால் இழுத்துச் செல்லப்பட்டு, வானுலகத்தை அடைந்ததைக் (இறந்ததை) கண்ட அன்பின் மிகுதியான தாய் பதறி ஓடி, அழும், கதறும், சோர்ந்து போகும் உடல் நடுக்கமடைந்துவிழும்.

சொற்றடுமாறி மைந்தன் துயரில் மூழ்கினான்

பாடல்:

மற்றது கண்டு மைந்தன் ' வந்ததிங் கபாய' மென்று
சொற்றடு மாறி நெஞ்சிற் றுயருழந் தறிவ ழிந்து
பெற்றமுங் கன்று மின்றெ னுணர்வெனும் பெருமை மாளச்
செற்றவென் செய்கே' னென்று தேரின் றிழிந்து வீழ்ந்தான்.

பாடல் பிரிப்பு:

மற்றது கண்டு மைந்தன் "வந்தது இங்கு அபாயம்" என்று, சொல்
தடுமாறி நெஞ்சில் துயர் உழந்து அறிவு அழிந்து, பெற்றமும் கன்றும்
இன்று என் உணர்வு எனும் பெருமைமாள, "செற்ற என் செய்கேன்"
என்று தேரில் நின்று இழிந்து வீழ்ந்தான்.

பொருள்: நிகழ்ந்து விட்ட சம்பவங்களைக் கண்டு, அரசிளங்குமரன், "பெரும் அபாயம் நிகழ்ந்து விட்டதே" என்று வார்த்தை தடுமாறி, மனத்திலே கவலை சூழ்ந்து அறிவை இழந்து, பசுவும் கன்றும் இன்று என்னுடைய நல் உணர்ச்சி என்னும் பெருமை அழியும் படியாக மாண்டு விட்டனவே! (இப்பழிக்கு) நான் என்ன செய்யப் போகின்றேன் என்று தேரிலிருந்து நீங்கிக் கீழே விழுந்தான்.

மனுவுக்குப் பழிவர மைந்தனாகப் பிறந்தேன்

பாடல்:

அலறுபே ராவை நோக்கி ஆருயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
"மலர்தலை உலகங் காக்கும் மனுவெனு மெங்கோ மானுக்கு
உலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா வொருவ" னென்பான்.

பாடல் பிரிப்பு: *அலறும் பேர் ஆவை நோக்கி ஆர் உயிர் பதைத்து சோரும், நிலம் இசை கன்றை நோக்கி நெடிது உயிர்த்து இரங்கி நிற்கும், மலர்தலை உலகம் காக்கும் மனு எனும் எம் கோமானுக்கு உலகில் இப்பழி வந்து எய்தப் பிறந்தவா ஒருவன் என்பான்.*

கருத்து: கதறி அழுகின்ற பெரிய பசுவைப் பார்த்து, தன்னுடைய அருமையான உயிர் துடிதுடிக்கச் சோர்ந்து விழுவான். நிலத்திலே விழுந்து (இறந்து) கிடக்கின்ற கன்றைப் பார்த்து நெடுமூச்சு விட்டு இரக்கங் கொண்டு நிற்பான். சிறப்புற்றுப் பரந்தாகக் காணப்படும் இந்த உலகத்தைக் காவல் செய்து வரும் மனு என்று கூறப்படுகின்ற எமது பெரிய அரசனுக்கு உலகிலே இவ்வாறான பழிவந்து சேருவதற்கு ஒருவனாகிய நான்பிறந்திருக்கிறேனே என்று கூறுவான்.

அந்தணர் விதித்தவாறு ஆற்றுவேன்

பாடல்:

"வந்தவிப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த வாற்றால் ஆற்றுவ தறமேயாகில்
எந்தையீ தறியா முன்ன மியற்றுவ" னென்று மைந்தன்
சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான்.

பாடல் பிரிப்பு: *வந்த இப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில், எந்தை ஈது அறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன் சிந்தை வெம் துயரம் தீர்ப்பான் திருமறை அவர் முன் சென்றான்.*

பொருள்: "எனக்கு வந்திருக்கின்ற இப் பழியை மாற்றக்கூடிய வழியானது, வேத நூல்களிலே சிறந்து விளங்கும் அந்தணர்கள் வகுத்திருக்கின்ற விதிமுறைப்படி கடமைகளை நிறைவேற்றுவதே தருமமாகுமானால், என்னுடைய தந்தை இதனை அறியுமுன்பாகவே (அக்கடமைகளை) நடத்தி முடிப்பேன்" என்று அரசிளங்குமரன் தன்னுடைய மனத்திலே ஏற்பட்டிருக்கும் பெரிய கவலையினை நீக்கும் பொருட்டு, மேலான வேதங்களை ஓதுகின்ற அந்தணர்களை நோக்கிச் சென்றான்.

கோயில் மணியைக் கொம்பினால் அடித்தது

பாடல்:

தன்னுயிர்க் கன்று வியத் தளர்ந்தவாத் தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்கும் செங்கோன் மனுவின் பொற் கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினாற் புடைத்த தன்றே.

பாடல் பிரிப்பு: *தன் உயிர் கன்று வீய தளர்ந்த ஆ தரியாது ஆகி, முன் நெருப்பு உயிர்த்து விம்மி, முகத்தினில் கண்ணீர் வார மன் உயிர் காக்கும் செங்கோல் மனுவின் பொன் கோயில் வாயில் பொன் அணி மணியை சென்று கோட்டினால் புடைத்தது. (அன்றே - அசை)*

பொருள்: தன்னுடைய உயிர்போன்ற கன்று இறந்துவிடத் தளர்ச்சி கொண்ட பசு தாங்க முடியாததாகி, நெருப்பு போன்ற பெருமூச்சை முன்னே விடுத்து, விம்மி அழுது முகத்திலே கண்ணீர் வடிய, மேலான உயிர்களைக் காவல் செய்கின்ற செங்கோலினையுடைய மனு என்னும் அரசனின் பொன்னாலான அரண்மனை வாசலிலே கட்டப்பட்டிருந்த அழகுவிளங்கும் மணியைத் தன்னுடைய கொம்பினால் அடித்தது.

மறலியூர்திக் கழுத்தணி மணியின் ஆர்ப்போ?

பாடல்:

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரு மறலி யூர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ வென்னத்தன் கடை முன் கேளாத்
தெழித்தெழு மோசை மன்னன் செவிப்புலம் புக்க போது.

பாடல் பிரிப்பு: *பழிப்பு அறை முழக்கோ ஆர்க்கும், பாவத்தின் ஒலியோ, வேந்தன் வழித்திரு மைந்தன் ஆவி கொள வரும் மறலி ஊர்தி கழுத்து அணி மணியின் ஆர்ப்போ என்ன தன் கடை முன்கேளாத் தெழித்து எழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்கபோது.*

பொருள்: (பசு கொம்பினால் அடித்த மணியின் ஓசை) பழி சூழ வருகின்ற பறையின் முழக்கமோ? செய்துவிட்ட பாவத்தின் ஓசையோ? மனுவேந்தனின் வம்சத்தில் வந்த மகனின் உயிரை எடுக்க வருகின்ற இயமனது வாகனத்தின் கழுத்திலே அணியப்பட்டிருக்கும் மணியின் ஓசையோ? என்னும் படியாகத் தன்னுடைய அரண்மனை வாசலிலே, முன் எப்போதும் கேட்காத உரத்தெழுகின்ற ஓசை மன்னனின் செவியிலே வந்து புகுந்தது.

மனுவேந்தன் செவியில் மணியோசை கேட்டது

பாடல்:

ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை யிழிந்து போந்து
பூங்கொடி வாயி னண்ணக் காவலர் எதிரே போற்றி
"ஈங்கிதோர் பசுவந் தெய்தி, இறைவநின் கொற்ற வாயில்
தூங்கிய மணியைக் கோட்டாற் றுளக்கிய" தென்று சொன்னான்.

பாடல் பிரிப்பு: *ஆங்கு அது கேட்ட வேந்தன் அரி அணை இழிந்து போந்து, பூங்கொடி வாயில் நண்ண காவலர் எதிரே போற்றி, "இறைவ, ஈங்கு இதோ ஓர் பசு வந்து எய்தி, நின்கொற்ற வாயில் தூங்கிய மணியை கோட்டால் துளக்கியது" என்று சொன்னார்.*

பொருள்: அங்கு அந்த (மணியின்) ஓசையைக் கேட்ட மனுச்சோழன் சிங்காசனத்தில் இருந்து இறங்கிச் சென்று பூங்கொடிகள் நாட்டியிருக்கின்ற வாசலை அடைய, காவலர்கள் மன்னனின் எதிரே வந்து, வாழ்த்தி, "இறைவனே இங்கே ஒரு பசு வந்து உம்முடைய வெற்றிச் சிறப்புடைய வாசலிலே தொங்குகின்ற ஆராய்ச்சி மணியைத் தன்னுடைய கொம்புகளால் அடித்தது" என்று சொன்னார்கள்.

அமைச்சரே, என்னிதற் குற்றது?

பாடல்:

மன்னவ னதனைக்கேளா வருந்திய பசுவை நோக்கி
"என் இதற்கு உற்றது" என்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க,
முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துஉளான் முதிர்ந்த கேள்வி
தொல் நெறி அமைச்சன் மன்னன் தாள் இணை தொழுது சொல்வான்.

பொருள்: அரசன்(காவலர்கள் கூறிய) அவ்வார்த்தைகளைக் கேட்டு வருத்தமுற்றிருக்கும் பசுவைப் பார்த்து, "இதற்கு என்ன நேர்ந்தது" என்றவாறு அமைச்சர்களை இகழ்ச்சியுடன் பார்க்க நடந்தவைகளை எல்லாம் முன்பே அறிந்திருந்தவனாகிய முதிர்ச்சி பெற்ற கேள்வி அறிவுடைய பழைய நெறிகளின்படி நடக்கின்ற (ஒரு) மந்திரி மனுச்சக்கரவர்த்தியின் பாதங்களை வணங்கிச் (பின்வருமாறு) சொல்லலானான்.

தேர்க்காலிற் புகுந்து புனிற்றிளங்கன்று இறந்தது

பாடல்:

"வளவநின் புதல்வன் ஆங்கோர்மணி நெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவிற் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்ததாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்ததித் தன்மை" யென்றான்.

பாடல் பிரிப்பு:

"வளவ, நின் புதல்வன் ஆங்கு ஓர் மணி நெடும் தேர் மேல் ஏறி,
அளவுஇல் தேர்த்தானை சூழ அரசு உலாம் தெருவில் போம்கால்,
இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்ததாக தளர்வு
உறும், இத்தாய் வந்து இத்தன்மைவிளைத்தது!" என்றான்.

கருத்து: "சோழ அரசனே, உனது மகன் அங்கே ஒரு மணிகள் பூட்டப்பட்ட நீண்ட தேரின் மேல் ஏறி, அளவில்லாத தேர்களும் படைகளும் தன்னைச் சூழ்ந்து வரத்தக்கதாக அரசர்கள் உலா வருகின்ற தெருவிலே போகும் போது, இளைய பசுக்கன்று ஒன்று தேர்ச்சில்லின் இடையிலே புகுந்து இறந்து விட்டதாகக் கவலைப்படுகின்ற இந்தத் தாய்ப்பசு வந்து இச் செயலைச் செய்தது." என்று கூறினான்."

வெவ்விடம் தலைக்கொண்டன்ன வேதனையடைந்தான்

பாடல்:

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயர மெய்தி
வெவ்விடந் தலைக்கொண் டாற் போல வேதனையகத்து மிக்கிங்(கு)
கிவ்வினை விளைந்தவா றென்றிடருறும் இரங்கும் ஏங்கும்
"செவ்விதென் செங்கோ" லென்னுந் தெருமருந் தெளியுந்தேறான்.

பாடல் பிரிப்பு:

அவ்வுரை கேட்ட வேந்தன், ஆ உறு துயரம் எய்தி, வெவ்விடம் தலைக்கொண்டால் போல் வேதனை அகத்து மிக்கு இங்கு இவ்வினை விளைந்தவாறு என்று இடர் உறும் இரங்கும் ஏங்கும் செவ்விது என் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

பொருள்: அந்தச் சொற்களைக் கேட்ட அரசன், பசு அடைந்துள்ள துன்பங்கள் எல்லாம் கொடிய விடமாகித் தலையிலே ஏறியதைப் போல உள்ளத்திலே துன்பம் அதிகரிக்க, "இங்கு இச் செயல் எவ்வாறு நடந்தது" என்று துயர்கொள்வான். இரங்குவான், ஏங்குவான், (இகழ்ச்சிக் குறிப்பில்) என்னுடைய ஆட்சி மிக நன்றாக இருக்கிறது என்று நெஞ்சம் சுழல்வான். பின் சற்றுத் தெளிவான, பின் ஒன்றும் தெளிவில்லாதவனாய் இருப்பான்.

தாய்முகங் கண்டு சோர்வான்

பாடல்:

"மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தி னீடும்
என்னெறி நன்றா" லென்னும் என்செய்தாற் தீரு" மென்னும்
தன்னிளங் கன்று காணாத் தாய்முகங் கண்டு சோரும்
அந்நிலை யரசனுற்ற துயரமோ ரளவிற் றன்றால்.

பாடல் பிரிப்பு:

மன் உயிர் புரந்து வையம் பொது கடிந்து அறத்தில் நீடும் என் நெறி நன்றால் என்னும், என் செய்தால் தீரும் என்னும் தன் இளம் கன்று காணா தாய் முகம் கண்டு சோரும், அந்நிலை அரசன் உற்ற துயரம் ஓர் அளவிற்று அன்று. (ஆல்-அசை)

பொருள்: "நிலைபெற்ற உயிர்களைக் காத்து இந்த உலகம் எல்லாவற்றையும் பொதுவாகவன்றிச் சிறப்பாகத் தனக்கே ஆக்கி, அறத்திலே நீடித்திருக்கும் எனது ஆட்சி நன்றாய் இருக்கிறது" என்று (தன்னைத் தானே) இகழ்ந்து கூறுவான். என்ன செய்தால் இந்தப் பாவம் தீரும் என்று எண்ணுவான். தன்னுடைய இளமையான கன்றைக் காணாமல் வாடுகின்ற தாய்ப்பசுவைக் கண்டு சோர்ந்து விடுவான். அந்த நிலையில் அரசன் அடைந்த துன்பமானது அளவில்லாதது.

அந்தணர்கள் விதித்த முறை நன்று

பாடல்:

மந்திரிக ளதுகண்டு மன்னவனை யடிவணங்கிச்
"சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றாற்
கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதை செய் தார்க்குமறை
அந்தணர்கள் விதித்த முறை வழிநிறுத்த லற மென்றார்.

பாடல் பிரிப்பு: *மந்திரிகள் அது கண்டு மன்னவனை அடி வணங்கி "சிந்தை தளர்ந்து அருளுவது மற்று இதற்கு தீர்வு அன்று. கொந்தலர் தார் மைந்தனை முன் கோ வதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்த முறை வழி நிறுத்தல் அறம்" என்றார்.*

பொருள்: அமைச்சர்கள் மன்னனின் நிலையினைக் கண்டு, அவனுடைய அடியினை வணங்கி, நீர் மனந் தளர்ந்து துக்கப்படுவது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகாது. கொத்தாக மலர்ந்த பூமாலை சூடிய உமது மகனின் செயலுக்கு, பசுவதை செய்தவர்களுக்கு வேத நூல் வல்லவரான அந்தணர்கள் வகுத்து வைத்திருக்கின்ற முறைப்படி கழுவாய் தேடுதலே சிறந்த வழி" என்றார்கள்

பசு கொண்ட நோய்க்கு இது மருந்தோ?

பாடல்:

"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறு நோய் மருந்தாமோ

இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ."

பாடல் பிரிப்பு: *"வழக்கு என்று நீர் மொழிந்தால் மற்று அதுதான் வலிப்பட்டு குழக்கன்றை இழந்து அலறும்கோ உறு நோய் மருந்தாமோ? இழக்கின்றேன் மைந்தனை என்று எல்லீரும் சொல்லிய இச்சழக்கு இன்று நான் இசைந்தால் தருமம்தான் சலியாதோ?*

பொருள்: "(வேத முறைப்படி பிராயச்சித்தம் தேடுவதுதான்) வழக்கமென்று கூறுகின்றீர், நீர் கூறுவது தான் இளமையான கன்றை இழந்து வருத்தமுற்றுக் கதறுகின்ற இந்தப் பசு கொண்டிருக்கும் நோய்க்கு மருந்தாகுமோ? என்னுடைய மைந்தனை இழந்து விடுவேன் என்று நீங்கள் எல்லோரும் சேர்ந்து கூறிய இப்பொய்க்கு நான் சம்மதப்பட்டால் தருமதேவதையும் சலிப்புற்றுப் போகாதோ?

ஐந்து பயந் தீர்ப்பவன் அரசன்

பாடல்:

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபய மைந்துந் தீர்த்த தறங்காப்பா னல்லனோ!"

பாடல் பிரிப்பு: *"மன்னுயிர் காக்கும் காலை தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால் ஊனம்மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர்தம்மால் ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் மாநிலம் காவலனாவான் அல்லனோ?"*

பொருள்: "(இந்த உலகத்திலே) நிலைபெற்ற உயிர்களைக் காவல் செய்து வரும் வேளையில், அவற்றுக்குத் தன்னால், தன் பரிவாரங்களால் (பரிசனத்தால்), துன்பம் செய்கின்ற பகைவர்களால், திருடர்களால், (விலங்குகள் போன்ற) வேறு உயிர்களால் ஏற்படக்கூடிய ஐந்து வகைப் பயங்களையும் தீர்த்து அறத்தைப் பாதுகாக்க வேண்டியவனே உலகத்தின் காவலன் என்று சொல்லப்படுபவன் அல்லவா?

தொன்மநுநூல் தொடைமநுவால் கெடலாமா?

பாடல்:

"என்மகன் செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய விசைந்தே
அன்னியனோ ருயிர்கொன்றா லவனைக் கொல் வேனானாற்
தொன்மநுநூற் றொடைமநுவாற் றுடைப்புண்ட தெனும் வார்த்தை
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக் கென்றான்.

பொருள்: "என்னுடைய மகன் செய்த பழிக்கு (ஏற்ற தீர்ப்புக் கூறாமல் பெரும் தவங்கள் செய்ய நான் சம்மதித்து, வேறொருவன் ஓர் உயிரைக் கொலை செய்ய அவனை நான் கொலைத் தண்டனைக்கு உள்ளாக்குவேனாக இருந்தால், பழைய மனுதர்ம சாஸ்திர ஒழுங்கு முறையானது (அவனது) வழிவந்த மனு எனப்படும் என்னால் அழிக்கப்பட்டது என்னும் பழிச்சொல்லை இந்த நிலைபெற்ற உலகிலே நான் பெற்றுக் கொள்ளும்படியாகக் கூறினீர்கள். இதுதான் மந்திரிகளின் வழக்கமாகும்" என்று (மனுவேந்தன்) கூறினான்.

மறைமொழிந்த அறம்புரிதல் வழக்கு

பாடல்:

என்றரச னிகழ்ந்துரைப்ப எதிர் நின்ற மதியமைச்சர்
"நின்றநெறி உலகின்கண் இதுபோன் முன் னிகழ்ந்ததாற்
பொன்றுவித்தன் மரபன்று மறைமொழிந்த வறம்புரிதல்
தொன்றுதொடு நெறியன்றோ தொன்னிலங்காவல" என்றார்.

பாடல் பிரிப்பு:

என்று அரசன் இகழ்ந்து உரைப்ப எதிர்நின்ற மதி அமைச்சர் "தொல் நிலம் காவல, நின்றநெறி உலகின்கண் இதுபோல முன் நிகழ்ந்ததால், பொன்றுவித்தல் மரபு அன்று, மறை மொழிந்த அறம் புரிதல் தொன்றுதொடு நெறி அன்றோ" என்றார்.

பொருள்: என்று இவ்வாறு அரசன் இகழ்ந்து கூற எதிரே நின்றவர்களான அறிவிற் சிறந்த மந்திரிகள், "பழமையான இந்தப் பூமியைக் காவல் செய்கின்ற அரசனே, உலகத்திலே (நாங்கள் சொல்லிய) இதைப் போலப் பல நிகழ்ச்சிகள் முன்னர் நிகழ்ந்துள்ளன. (ஆயினும்) கொலைபுரிதல் மரபுமுறை வழக்கமல்ல. எனவே, வேதங்கள் சொல்லுகின்ற தருமத்தைச் செய்வதுதான் தொன்றுதொட்டு நடந்து வரும் நெறிமுறையாகும் " என்று கூறினர்.

பழுதுரைத்தீர் என்றான் பார்வேந்தன்

பாடல்:

அவ்வண்ணந் தொழுதுரைத்த அமைச்சர்களை முகநோக்கி
மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல் வேந்தன்
"இவ்வண்ணம் பழுதுரைத்தீ" ரென்றெரியி னிடைத் தோய்ந்த
செவ்வண்ணக் கமலம் போல் முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான்.

பாடல் பிரிப்பு:

மெய்வண்ணம் தெரிந்து உணர்ந்த மனு என்னும் விறல் வேந்தன்,
அவ்வண்ணம் தொழுது உரைத்த அமைச்சர்களை முகம் நோக்கி,
"இவ்வண்ணம் பழுது உரைத்தீர்" என்று எரியின் இடை தோய்ந்த
செவ்வண்ணம் கமலம் போல் முகம் புலர்ந்து செயிர்த்து உரைப்பான்.

பொருள்: உண்மைத் தன்மைகளை நன்கு அறிந்து உணர்ந்த மனு என்று சொல்லப்படும் வெற்றிச் சிறப்பினையுடைய அரசன், அவ்வாறு வணங்கிக் கூறிய மந்திரிகளின் முகங்களை நோக்கி, "இவ்வாறாகப் பிழையான வார்த்தைகளைக் கூறினீர்களே" என்று நெருப்பினிற் தோய்த்தெடுத்த சிவப்பு நிறமான தாமரை மலர்போல முகம்வாடி கோபங்கொண்டு (பின்வருமாறு) சொல்லுகின்றான்.

எப்பசு இவ்வாறு மணியை அடித்தது?

பாடல்:

"அவ்வுரையில் வருநெறிக ளவைநிற்க, அறநெறியின்
செவ்வியவுண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்
எவ்வுலகி லெப்பெற்ற மிப்பெற்றித் தாமிடரால்
வெவ்வுயிர்த்துக் கதறிமணி யெறிந்து விழுந் ததுவிளம்பீர்."

பாடல் பிரிப்பு:

"அவ்உரையில் வரும் நெறிகள் அவை நிற்க, அற நெறியின் செவ்விய உண்மைத் திறம் நீர் சிந்தை செயாது உரைக்கின்றீர், எவ் உலகில் எப்பெற்றம் இப்பெற்றித்தாம் இடரால் வெவ்உயிர்த்து கதறி மணி எறிந்து விழுந்தது விளம்பீர்?

பொருள்: "(மந்திரிகளே!) நீங்கள் கூறியபடி தொன்றுதொட்டு வருகின்ற தரும நெறிகள் ஒரு புறம் இருக்கட்டும், தருமவழியிலே உள்ள செம்மையான உண்மைத் தன்மையை நீங்கள் எண்ணாமல் கூறுகின்றீர்கள். எந்த உலகில் எந்தப் பசு இவ்வகையானதொரு துன்பத்தால் பெருமூச்சுவிட்டு கதறியழுது ஒடிவந்து ஆராய்ச்சி மணியை அடித்து விழுந்தது என்பதைச் சொல்லுங்கள்." (என்று கூறினான்).

கொலைக்குக் கொலையே பரிகாரம்

பாடல்: "போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச
வீற்றிருந்த பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடைய உயிர்கொன்றான் ஆதலினால் துணி பொருள்தான்
ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவேயாம் என நினைமின்"

பாடல் பிரிப்பு: *"புரந்தரன் மால் அயன் முதலோர் போற்றி இசைத்து புகழ்ந்து இறைஞ்ச, வீற்று இருந்த பெருமானார் மேவி உறை திருவாரூர் தோற்றம் உடை உயிர் கொன்றான். ஆதலினால், துணிபொருள் தான் ஆற்றவும் அற்று அவற்கொல்லும் அதுவே ஆம் என நினைமின்."*

பொருள்: "(மேலும் கேளுங்கள்) இந்திரன்,திருமால், பிரமன் முதலிய (கடவுளர்) வர்கள் போற்றிப் புகழ்ந்து வணங்கும்படியாக எழுந்தருளியிருந்த எம்பெருமானார்விரும்பி வாழ்கின்ற திருவாரூரிலே பிறந்த பேறுடைய ஓர் உயிரைக் (என்மகன்) கொன்று விட்டான். ஆகவே, நான் நன்குணர்ந்து துணிந்த உண்மைப்பொருள் என்னவெனில், சரியான முறையில் அவனைக் கொல்வதேயாகும் என்பதை நீங்கள் எண்ணுங்கள்!" (என்றான்)

இலங்கை வளம்
01. நீர் வளம்

பாடல் :

எஃகிய பஞ்சினைப் போலத் -தமிழ்
எல்லாள மன்ன னிருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம் - இந்து
வெண்டிரை வேயவெ ழுந்திடு மன்றே.

பாடல் பிரிப்பு: *எஃகிய பஞ்சினைப் போலத் தமிழ் எல்லாளமன்னன் இருதயம் போல, வெஃகிய வெண்முகிற் கூட்டம் இந்து வெண்திரை மேய எழுந்திடும் அன்றே.*

பொருள்: தளர்ந்த பஞ்சைப் போலவும் தமிழ் மன்னனான எல்லாளனது இருதயத்தைப் போலவும், (நீரை) மிக விரும்பிய வெண்ணிறமான முகில் கூட்டமானது இந்து மாகடலைப் பருகுவதற்காக எழுந்தது.

பாடல்:

ஈயாத வற்சரின் வெளவி - நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயா வுவர்க்கட லள்ளி - மிக
வுண்டு திரண்டு புரண்டெழு மேகம்

பாடல் பிரிப்பு: *ஈயாத வற்சரின் வெளவி, நல்ல இரவலர்க்கு ஈகின்ற புரவலர் போல, ஓயா உவர்க்கடல் அள்ளி மிக உண்டு திரண்டு புரண்டு எழுமேகம்.*

பொருள்: (மனமுவந்து பிறருக்கு) ஈயாத உலோபிகளிடமிருந்து பறித்தெடுத்து (வறுமையால்) மிகுதியும் இரப்போர்க்கு அளிக்கின்ற கொடை வள்ளலைப் போன்று,(ஒரு கணமும்) ஓய்ந்திருக்காத உவர்த்தன்மையான கடல்நீரை நன்குபருகி, ஒன்றுகூடி, மேகங்கள் எழுந்தன.

பாடல்:

கல்லா தவர்மனம் போல - அன்றிக்
கடுகணைக் குகைவரு கனையிருள் போல
அல்லா தழுக்காறு கொண்டோர் - மனம்
ஆமென வேயிருண் டங்குசூல் கொண்டே.

பாடல் பிரிப்பு: *கல்லாதவர் மனம் போல, அன்றிக் கடுகணைக்குகை வரும் கனை இருள் போல, அல்லாது அழுக்காறு கொண்டோர் மனம் ஆம் எனவே இருண்டு அங்கு சூல் கொண்டு.*

பொருள்: பாமரர்களது (படிப்பறிவற்றோர்) மனத்தைப் போல, அல்லது கடுகண்ணாவைக் குடை வழியில் இருக்கின்ற செறிந்த இருள்போல, அல்லது பொறாமை கொண்டவர்களது மனத்தைப் போல இருண்டு கருக்கொண்டு (அதாவது நன்கு நீரால் நிரப்பி)

பாடல்:

செங்கதி ரோன்தனை யெள்ளி நின்று
சிரிப்பது போல விடையிடை மின்னி
அங்கவ னோடறை கூவி - எதிர்த்
தார்ப்பது போல விடித்து முழங்கும்

பாடல் பிரிப்பு:

செங்கதிரோன்தனை எள்ளி நின்று சிரிப்பது போல இடை இடைமின்னி, அங்கு அவனோடு அறைகூவி எதிர்த்து ஆர்ப்பது போல இடித்து முழங்கும்.

பொருள்: (மின்னலானது) சிவந்த சூரியனைப் பார்த்து இகழ்ந்து நகைப்பதைப் போன்று இடையிடையே மின்னலடித்து, (இடிமுழக்கமானது) கதிரவனைப் போருக்கழைத்து, எதிர்த்துச் சத்தமிடுவதைப் போன்று இடியிடித்து முழங்கியது.

பாடல்:

கைம்மலை கன்மலை போலப்- பெருங்
காண்டா மிருக நிரைகளைப் போல
மைம்மலி ராவண னேவும் - மூல
மாபல மென்னவும் வந்து குவிந்து.

பாடல் பிரிப்பு:

கை மலை, கல் மலைபோல, பெரும் காண்டாமிருக நிரைகளைப் போல, மை மலி இராணவன் ஏவும் மூலமாபலம் என்னவும் வந்து குவிந்து.

பொருள்: கையையுடைய மலையைப் (யானையைப்) போலவும், கல்லாலான மலையைப் (பாறைக்குன்று) போலவும், காண்டா விலங்கினக் கூட்டத்தைப்போலவும், கருமைமிக்க இராணவன் விடுகின்ற பெரிய மூலப்படையைப் போலவும்(கரிய மேகக் கூட்டங்கள்) வந்து குவிந்தன.

திரண்ட மேகங்கள் மழையாகப் பொழிதல்

பாடல்:

பாத பங்கய மலையின் மீதினும்
பகரு பேதுரு மலையின் மீதினும்
ஒது கதிரைமா மலையின் மீதினும்
உயர்ந்த வன்னியா ரணிய மீதினும்

பாடல் பிரிப்பு: *பாதபங்கய மலையின் மீதினும், பகருபேதுரு மலையின் மீதினும், ஓதுகதிரை மாமலையின் மீதினும் உயர்ந்த வன்னி ஆரணியம் மீதினும்.*

பாடல்: சிவனொளிபாத மலையின்மீதும், (எல்லோராலும் சிறப்பாகச்) சொல்லப்படுகின்ற பேதுருதாலகால மலையின் மீதும், மந்திரம் சொல்லுதற்குரிய பெரிய கதிரை மலையின் மீதும், வளமிக்க உயர்ந்த வன்னிக் காட்டின்மீதும்.

பாடல்:

பார்த்தி டாதகட் டோகை யாலிடப்
பாம்பொ டுங்கிடக் காந்தள் வாய்விட
வேர்த்த வெம்மைபோய் வளி கு ளிர்ந்திட
வேறு வேறுபோய்க் கால்க ளூன்றியே.

பாடல் பிரிப்பு: *பார்த்திடாத கண்தோகை ஆலிடப் பாம்பு ஒடுங்கிடக் காந்தள் வாய்விட, வேர்த்த வெம்மைபோய் வளி குளிர்ந்திட வேறுவேறு போய்க் கால்களூன்றியே.*

பொருள்: பார்க்கும் சக்தி அற்ற கண்கள் போன்ற தோகையைக் கொண்டிருக்கும் மயில் ஆடவும், பாம்பானது பயந்து ஒடுங்கிக் கிடக்கவும், கார்த்திகை பூவானது இதழ்விரியவும், வேர்வைக்குரியதான வெப்பம் நீங்கி வளியானது குளிரவும், வேறுவேறாகச் சென்று (மேகங்கள்) மழைக்கால்களாக ஊன்றின.

குமண வள்ளலின் கொடை போல

பாடல்:

கொடைம டம்படுங் குமண மன்னவன்
கூறு சித்திரப் புலவ னுக்கருள்
மடைதி றந்திடுங் கொடைவி தங்கள் போல்
வயிறு ளைந்துமா மழைசொ ரிந்தவே.

பாடல் பிரிப்பு: *கொடைமடம்படும் குமண மன்னவன் கூறுசித்திரப் புலவனுக்கு அருளி, மடைதிறந்திடும் கொடை விதங்கள் போல், வயிறு உளைந்து மாமழை சொரிந்தவே.*

பொருள்: கொடைக் குணத்திலேசிறப்பு பொருந்தியவனாகிய குமணமன்னன், பெருஞ்சித்திரனார் என்ற பாவலருக்கு கருணையோடு வழங்கிய கொடை வெள்ளம் மடையுடைத்த போல (மேகத்தின்) வயிறு நொந்து பெரும் மழை பொழிந்தது.

புத்த மாமுனி அருளுரை போல

பாடல்:

அரசு நீழலிற் புத்த மாமுனி
ஆறு வற்சரம் பெற்ற யோகினைப்
பரவு பாரினுக் கருளு மாறுபோற்
பாத பங்கயத் தருவி பாயுமே.

பாடல் பிரிப்பு: *அரசுநீழலில் புத்தமாமுனி ஆறுவற்சரம் பெற்றயோகினைப் பரவு பாரினுக்கு அருளுமாறு போல் பாதபங்கயத்து அருவி பாயும்.*

பொருள்: அரசமர நிழலிலிருந்துபுத்தர் என்னும் மகா முனிவர், ஆறு ஆண்டுகள் யோகஞ் செய்து பெற்ற ஞானத்தைப்போற்றித்தொழும் பூமியிலுள்ளவர்களுக்கு அருளிச் செய்தது போலச் சிவனொளிபாத மலையிலிருந்து நீரருவி பாய்ந்தது.

ஏசு மாமலை ஏறிக் கூறும் நீதிபோல

பாடல்:

ஏசு வென்றிடும் ஞான பண்டிதன்
ஏறி மாமலைக் கூறு நீதிபோற்
பேசு மாமுகில் சொரிய வாங்கியே
பேது ருமலை யருவி பாயுமே.

பாடல் பிரிப்பு: *ஏசு என்றிடும் ஞானபண்டிதன் மாமலை ஏறிக் கூறுநீதிபோல் பேசு மாமுகில் சொரிய வாங்கியே பேதுருமலை அருவி பாயும்.*

பொருள்: இயேசுவாகிய மிக்க அறிவுடைய ஞானி பெரிய மலையிலே ஏறி நின்று பிரசங்கவாயிலாகக் கூறுகின்ற நீதிக்கருத்துக்களைப் போல, சத்தமெழுப்பும் முகிலானது மழையைப் பொழிய அதனைத் தான் ஏற்று, பேதுருதாலகாலமலையிலிருந்து நீரருவி பாய்கின்றது.

நாவலன் செய்த கண்டனப் பிரசங்கம் போல

பாடல்:

உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமு
தோங்க நல்லைவந் தருளு நாவலன்
கண்ட னப்பிர சங்க மாமெனக்
கதிரை மாமலை யருவி பாயுமே.

பாடல் பிரிப்பு: *உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமுது ஓங்க நல்லை வந்தருளும் நாவலன், கண்டனப் பிரசங்கம் ஆமெனக் கதிரை மாமலை அருவி பாயும்.*

பொருள்: செம்மையான தமிழையும் சைவமாகிய அமிர்த்தத்தையும் உண்டு, அவற்றை உலகத்திலே மேலோங்க வைக்க நல்லூரில் பிறந்த ஆறுமுகநாவலர் செய்த கண்டனப் பிரசங்கத்தைப்போல, கதிரை மலையிலிருந்து நீரருவி பாய்கின்றது.

வயிற்றிலுள்ளவை வாந்தியாவதைப்போல

பாடல்:

குக்கி புக்கவை யருவ ருப்பினாற்
கொட்டி விட்டிடுங் கொள்கை போலவே
மைக்கண் மாமழை வழங்கு வாரிநீர்
மலைக்க ணின்றிழு மென்னப் பாயுமே

பாடல் பிரிப்பு: *குக்கி புக்கவை அருவருப்பினால் கொட்டிவிட்டிடும் கொள்கை போலவே, மைக்கண் மாமழைவழங்க வாரிநீர் மலைக்கண் நின்று இழுமென்னப் பாயும்.*

பொருள்: வயிற்றினுள் சென்ற உணவு அருவருப்பு ஏற்பட்டதால் வாந்தியாக வெளியே கொட்டப்படுவதைப் போல, மிகக் கருமையானதும் பெரியதுமான மழை முகிலானது பெய்த (கடல்) நீரானது மலையிலிருந்து இழுமென்ற ஓசையோடு பாய்கின்றது.

பெருமழையினால் ஏற்பட்ட அனர்த்தங்கள்

பாடல்:

ஓடுமா தங்கமே உருளுமா தங்கமே
வீடுமா நாகமே வீழுமா நாகமே

பாடல் பிரிப்பு: *ஓடும் மாதங்கம், உருளும் மாதங்கம், வீடும் மாநாகம், வீழும் மாநாகம் (மாதங்கம் ஓடும், மாதங்கம் உருளும், மாநாகம் வீடும், மாநாகம் வீழும்)*

பொருள்: யானைகள் (அஞ்சி) ஓடுகின்றன, அரசமரம் சரிந்து உருள்கின்றது. பெரிய நாகபாம்புகள் இறக்கின்றன. பெரிய புன்னை மரங்கள் விழுகின்றன.

பாடல்:

சரிந்த வேங்கை முரிந்த கோங்கு
தகர்ந்த சாந்து விழுந்தவே
யிரிந்த மிருக மெழுந்த பறவை
இழிந்த அருவி கழிந்தவே.

பாடல் பிரிப்பு: சரிந்த வேங்கை, முரிந்த கோங்கு, தகர்ந்த சாந்து, விழுந்தவேய், இரிந்த மிருகம், எழுந்த பறவை, இழிந்த அருவி கழிந்தவே.

பொருள்: வேங்கை மரங்கள் வீழ்ந்தன. கோங்கு மரங்கள் முரிந்து சரிந்தன. சந்தன மரங்கள் உடைந்து விழுந்தன. மூங்கில்கள் விழுந்தன. மிருகங்கள் ஓடின. பறவைகள் எழுந்து பறந்தன. (இவற்றுக் கெல்லாம் காரணமான) கீழே விழுந்த அருவி கடந்து சென்றது.

பாடல்: உருண்ட சிலைகள் ஒழிந்த வவல்கள்
உயர்ந்த மேடு பதிந்தவே
வெருண்ட கரடி விரிந்த வரவு
மிகுந்த வருவி பாயவே

பாடல் பிரிப்பு: *உருண்ட சிலைகள், ஒழிந்த அவல்கள், உயர்ந்தமேடு பதிந்தவே. வெருண்ட கரடி, இரிந்த அரவு, மிகுந்த அருவி பாயவே.*

பொருள்: கற்பாறைகள் இடம்பெயர்ந்தன. பள்ளங்கள் இல்லாமற் போயின, உயர்ந்த மேடுகள் தாழ்ந்து இல்லாமற் போயின. கரடிகள் பயந்து ஓடின. பாம்பினங்கள் இறந்தன. மிக அதிகமான நீரருவி பாய்ந்ததால் (இவ்வளவும் இடம்பெற்றன)

அருவி சென்ற இடங்கள்

பாடல்: பூங்கு றிஞ்சி முகட்டினி லேறிப்
பொழிந்த தெள்ளமு தாகிய வெள்ளம்
பாங்கி லாதப ரத்தையை நாடிப்
படரு வோரிற் படர்ந்தது பள்ளம்.

பாடல் பிரிப்பு: *பூங்குறிஞ்சி முகட்டினில் ஏறிப் பொழிந்த தெள் அமுதாகிய வெள்ளம், பாங்குஇலாத பரத்தையை நாடிப் படருவோரில் பள்ளம் படர்ந்தது.*

பொருள்: மழையாகிய அமுது பொழிந்ததால் உண்டான வெள்ளமானது மலர்கள் நிறைந்த குறிஞ்சி மரங்களால் நிறையப் பெற்ற மலைமுகட்டிலே ஏறி, (பின்) கற்பு ஒழுக்கம் இல்லாத நங்கையரை நாடிச் செல்பவரைப்போல, பள்ளத்தை நாடிச் சென்றது.

பாடல்: *முன்னை பூத்திடு முல்லையிற் போன*
முளரி பூத்திடு மருதத்திற் போன
புன்னை பூத்திடு நெய்தற் போன
போகும் போகுந் துறைதொறும் போன.

பாடல் பிரிப்பு: *முன்னை பூத்திடும் முல்லையில் போன,முளரி பூத்திடும் மருதத்தில் போன, புன்னை பூத்திடும் நெய்தலில் போன, போகும் போகும் துறைதொறும் போன.*

பொருள்: (பள்ளத்திற் படர்ந்த வெள்ளமானது) முன்னை மரங்கள் பூத்திருக்கும் முல்லை நிலத்துக்குப் போயின. தாமரை மலர்ந்திருக்கும் மருத நிலத்துக்குப் போயின, புன்னை மரங்கள் மலர்ந்திருக்கும் நெய்தல் நிலத்துக்குப் போயின. எங்கெல்லாம் நீர் செல்லுமோ அந்தத்துறைகளுக்கெல்லாம் அருவிகள் சென்றன.

வாரி நதியை மணக்கும் வைபவம்

பாடல்:

செப்பு மத்தளங் கொட்டும் கரம்போற்
சிறைய சைத்துச் சிரலினம் மேவும்
கொக்கு நாரையும் மீனினங் கொத்திக்
கொண்டே ழுந்து விழுங்கி விக்கும்மே.

பாடல் பிரிப்பு: *செப்பு மத்தளம் கொட்டும் கரம் போல் சிறை அசைத்துச் சிரல் இனம் மேவும், கொக்கும் நாரையும் மீன் இனம் கொத்திக் கொண்டு எழு விழுங்கி விக்கும்.(ஏ-(மே)-அசை)*

பொருள்: செப்பினாலான மத்தளத்தை அடிப்போரின் கைகள் அசைவது போல, தம் சிறகுகளை அசைத்துகொண்டு மீன்கொத்தி இனப் பறவைகள் வந்தடைகின்றன. கொக்குகளும் நாரைகளும் மீன் வகைகளைக் கொத்திக் கொண்டு எழுந்து பறந்து அவற்றை விழுங்கி விக்குகின்றன.

பாடல்:

மங்க லந்திகழ் மாப்பிள்ளை மார்வர
மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்
பொங்கு வெள்ளப் புதுமண நீர்வரப்
புரளு மீனிரை போயெதிர் கொள்ளுமே.

பாடல் பிரிப்பு: *மங்கலம்திகழ் மாப்பிள்ளைமார் வர மாமன்பக்கம் வரவு எதிர்கொள்ளல் போல், பொங்குவெள்ளப் புதுமண நீர்வரப் புரளும் மீன்நிரை போய் எதிர்கொள்ளும். (ஏ-(மே)-அசை)*

பொருள்: (மணவினைக்காக) மங்கலம் பொலியுமாறு மாப்பிள்ளைமார் வருகைதரும் போது, மாமனின் பக்கத்தில் இருப்பவாகள் அவர்களைச் சென்று வரவேற்பதைப் போல, பொங்கிவருகின்ற வெள்ளமாகிய புதிய மணங்கொண்ட நீர் வரும் போது புரண்டுதிரியும் மீன் கூட்டங்கள் போய் எதிர்கொண்டு வரவேற்கின்றன.

பாடல்:

அடுக்கு ஞெண்டு குடைகள் பிடிக்க
ஆல வட்டந் திருக்கை யெடுக்க
நடுக்குஞ் சுறவு நாந்தக மேந்த
நல்ல கணவாய் கவரி யிரட்ட

பாடல் பிரிப்பு: *அடுக்குஞெண்டு குடைகள் பிடிக்க, ஆலவட்டம் திருக்கை எடுக்க, நடுக்கும் சுறவு நாந்தகம் ஏந்த, நல்ல கணவாய் கவரி இரட்ட*

பொருள்: அடுக்கடுக்காய்வரும் நண்டுகள் குடைகளைப் பிடிக்கவும், திருக்கை மீன்கள் ஆலவட்டம் எடுக்கவும், பயத்தை விளைவிக்கக்கூடிய சுறா மீன்கள் வாள்களை ஏந்தி வரவும், நல்ல கணவாய் மீன்கள் கவரி வீசவும் – (அடுத்த பாடலில் முடிவும்)

பாடல்: முன்னே யாமை பரியஞ் சுமக்க
முரல்கள் சின்ன மூதி நிற்க
மன்னு திரைகள் முழுவ மியம்ப
வாரி மணக்கும் நதியையே.

பாடல் பிரிப்பு: *ஆமை முன்னே பரியம் சுமக்க, முரல்கள் சின்னம் ஊதிநிற்க, மன்னுதிரைகள் முழவம் இயம்ப, வாரி நதியை மணக்கும்.*

பொருள்: ஆமைகள் முன்னால் சீதனப் பொருட்களைச் சுமந்து செல்லவும், முரல் மீன்கள் குழல்களை ஊதி நிற்கவும், அலைகள் சேர்ந்து மத்தளம் கொட்டவும் கடலானது நதியை மணஞ் செய்து கொள்கிறது.

கதிர்காமம்

பாடல்: அதிரவரு மாணிக்க ங்கைதனில் முழ்கி
அன்பொடு சிவாயவென வருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே.

பாடல் பிரிப்பு: *அதிரவரும் மாணிக்க கங்கைதனில் மூழ்கி, அன்பொடு சிவாய என அருள் நீறுபூசி, முதிரும் அன்பால் நெஞ்சம் உருவ, விழி அருவி முத்து உதிர, மெய்ப்புளகம்ஊர, உரைகுளற, புதிய செந்தமிழ்மாலை, புகழ்மாலைசூடி,பொருவில் கந்தா, சுகம்தா என்று பாடிக் கதிரமலை காணாதகண் என்ன கண், கர்ப்பூர ஒளிகாணாத கண் என்ன கண். (ஏ-(ணே)-அசை)*

பொருள்: (வேகத்தினால்) நிலம் அதிரும்படியாக ஓடிவரும் மாணிக்க கங்கையிலே முழுகியெழுந்து, அன்புடன் "நமசிவாய" என்று ஓதியவாறு, அருள் நிறைந்த திருநீற்றினைப் (நெற்றியிலே) பூசிக்கொண்டு முதிருகின்ற பத்தியால் மனம் உருகவும், கண்களில் அருவியானது முத்தாக உதிரவும், உடலானது புளகம் கொள்ளவும், (பத்தி மேலீட்டினால்) வார்த்தைகள் தடுமாறவும், புதியனவாகிய செந்தமிழ்ப்பாடல்களை முருகக் கடவுளுக்குப் புகழ்மாலையாகச் சூட்டி, ஒப்பில்லாத கந்தனே,சுகத்தைத் தா என்று பாடியவாறு கதிரைமலையைக் காணாத கண்களால் என்ன பயன்? கர்ப்பூர தீபவழிவாட்டைக் காணாத கண்களால் என்ன பயன்?

பாடல்: விதிவரைந் திடுபழைய வினையோடி மாயு
மிடிகொடும் பிணிசோக விதமான தேயு
மதியொடங் காரகன் முதலான கோளு
மருவிடும் பகையொடு மாறான நாளும்
அதிகசுகந் தருஞான வழியான கூறும்
அளவிலன் பூறுமல மணுகாம லோடுங்
கதிரையென் றோதுமலை கண்டகண் கண்ணே
கர்ப்பூர மெய்ச்சோதி கண்டகண் கண்ணே.

பாடல் பிரிப்பு: *விதி வரைந்திடும் பழையவினை ஓடிமாயும், மிடி, கொடும்பிணி, சோகவிதமான(வை) தேயும், மதியொடு அங்காரகன் முதலான கோளும், மருவிடும் பகையோடு மாறான நாளும், அதிகசுகம் தரும் ஞானவழியான(து) கூறும், அளவில் அன்புஊறும், மலம் அணுகாமல் ஓடும், கதிரை என்று ஓதும்மலை கண்டகண், கண் கர்ப்பூர மெய்ச்சோதி கண்டகண் கண் (ஏ-(ணே)-அசை)*

பொருள்: விதியானது எழுதிவைத்த பழையவினைகள் ஓடியொழியும் வறுமையும், கொடிய நோய்களும், (பல்வேறு) சோகத்துக்குரிய துன்பங்களும் தேய்ந்து போகும். சந்திரனோடு செவ்வாய் முதலிய கிரகங்களின் சேர்க்கையால் ஏற்படும் பகை ஓடிமறையும். மிக்க சுகத்தைத் தரும் வழி(ஞானவழி) இதுவென்று கூறும். உள்ளத்தில் அளவில்லாத அன்பு பெருகும். (ஆணவம் முதலான) மலங்களும் நெருங்கிவராமல் நீங்கும். கதிரை என்று கூறப்படும் மலையினைக் கண்ட கண்களே உண்மையான கண்கள், (அங்கு முருகப் பெருமானுக்குக் காட்டப்படும்) கர்ப்பூர ஆராதனையாகிய உண்மையான ஒளியைக் கண்ட கண்களே உண்மையான கண்களாகும்.

ஆடிவேல்

பாடல்: பூதியணி வேதியர்கள் ஆதியடி யார்கள்
போற்றிவர மங்கல வியம்பல முழங்கச்
சோரிவிரி வெள்ளிமணித் தேரின்மிசைத் தோன்றிச்
சூரனுர மோடுகடல் வாரிதொலை வாக
மோதியெழு மாயமலை யாறுதுகள் போக
முன்னுமுரு கேசனுயர் முத்துமணி வைவேல்
வீதிவழி யாகவரு மாதியுலாக் காணும்
விழிகள் மணி விழிகளொளி விழிகள்.

பாடல் பிரிப்பு: *பூதி அணிவேதியர்கள் ஆதி அடியார்கள் போற்றிவர, மங்கல இயம்பல முழங்கச் சோதிவிரி வெள்ளி மணித்தேரின்மிசைத் தோன்றிச் சூரன் உரமோடு கடல்வாரி தொலைவாக, மோதியெழும் மாயமலையாறு துகள்போக உன்னும் முருகேசன் உயர்முத்துமணி வைவேல் வீதிவழியாக வரும் ஆதி உலாக் காணும் விழிகள் கதிர்விழிகள், மணிவிழிகள், ஒளிவிழிகள்.*

பொருள்: விபூதியினைப் பூசுகின்ற அந்தணர்கள், பழமையான அடியார்கள் ஆகியோர் போற்றிக்கொண்டு வரவும், மங்கலமான வாத்தியங்கள் பல முழங்கவும், ஒளி பரவுகின்ற வெள்ளியலாகிய மணிகள் பூட்டப்பட்ட தேரின்மேல் சூரபத்மனுடைய வலிமையையும் கடல் நீரையும் தொலையுமாறு செய்து, (ஆன்மாக்களை) மோதியழிக்க எழுகின்ற மாயையாகிய மலையானது தூளாகுமாறு நினைத்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானின் முத்துடன் மணியும் பதித்த கூரிய வேலானது வீதிவழியாகத் திருவுலா வருகின்ற பழைமையான திருவுலாவினைக் காணும் கண்கள் தான் பிரகாசமான கண்கள், (இவைகளே) மணிபோன்ற கண்கள், (இவைகளே) ஒளி நிறைந்த கண்கள்.

கோணமலை வெந்நீர்க் கேணிகள்

பாடல்:

காதலனைப் பிரிந்தவளின் மனம் போல வொன்று
கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல வொன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம் போல வொன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல வொன்று
நீதிபெறா வேழைதுயர் மனம் போல வொன்று
நிறை பழித்த கற்புடையாள் மனம்போல வொன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல வொன்று
கனலேறு மெழுநீர்க ளுண்டுகன்னி யாயில்.

பாடல் பிரிப்பு: *காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று, கவிபாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று, தீதுபழி கேட்டவன்தன் மனம் போல ஒன்று, செய்த பிழைக்கு அழுங்கும் அவன் மனம் போல ஒன்று, நீதிபெறா(த) ஏழை துயர் மனம்போல ஒன்று, நிறைபழித்த கற்பு உடையாள் மனம் போல ஒன்று, காதும் அழுக்காறு உடையான் மனம் போல ஒன்று, கன்னியாயில் கனல் ஏறும் ஏழுநீர்கள் உண்டு.*

பொருள்: காதலனைப் பிரிந்திருப்பவளின் மனதைப் போல ஒன்றும், (சிறந்த) கவிகளைப் பாடிப் (அதற்கான) பரிசு பெறாதிருப்பவனின் மனதைப்போல ஒன்றும், (தான் எவ்வித குற்றமும் செய்யாதிருக்க) வீணான தீதும் பழியும் கேட்டவனுடைய மனதைப் போல ஒன்றம் தான் செய்த பிழையை நினைத்து வருந்துபவனின் மனதைப்போல ஒன்றும் தனக்குரிய நீதிநியாயம் கிடைக்கப் பெறாத ஏழையின் துயர்நிறைந்த மனத்தைப்போல ஒன்றும், கற்புடைய மங்கையின் கற்பைப் பழிக்க அதனால் அவள் மனம்படும் பாட்டைப்போல ஒன்றும் பொறாமைப்படுபவனின் மனம் போல ஒன்றுமாகக் கன்னியாயில் வெப்பம் பொருந்திய ஏழுநீர் ஊற்றுக்கள் உண்டு.

பேராதனைப் பூந்தோட்டம்

பாடல்:

சீரான எந்நாடு மெப்பதியு மூரும்
சேர்வான தாவரமும் மாமரமும் காவும்
பேரான கனிமரமும் பெருமரமுந் தாவில்
பெட்பாரும் பெண்ணைகளும் வாழையொடுமேவி
நேராக வோரிடத்து நிலையாகக் காண
நிலமடந்தை வைத்ததென நின்று பய னுதவும்
பேராத னைப்புதிய நந்தவன மகவைப்
பேணியமு தூட்டி மகாவலிகங்கை பெருகும்.

பாடல் பிரிப்பு:

சீரான எந்நாடும் எப்பதியும் ஊரும் சேர்வான தாவரமும், மாமரமும், காவும், பேரான கனிமரமும், பெருமரமும், தாவில் பெட்பாரும், பெண்ணைகளும், வாழையொடு மேவி நேராக ஓர் இடத்து நிலையாகக் காண, நிலமடந்தை வைத்தது என நின்று பயன் உதவும் பேராதனைப் புதிய நந்தவனமகவைப் பேணி, அமுது ஊட்டி, மகாவலி கங்கை பெருகும்.

பொருள்: சிறப்பு மிக்க எல்லா நாடுகளிலும் எல்லா நகரங்களிலும் எல்லா ஊர்களிலும் சேர்ந்திருக்கின்ற தாவரங்களையும், மாமரங்களையும் சோலைகளையும், பேர்பெற்ற பழமரங்களையும், பெரிய மரங்களையும், கேடில்லாத பனைகளையும், வாழைகளையும் விரும்பி ஒரிடத்தில் ஒன்றாகவும் நிலையாகவும் காண்பதற்கு எண்ணிப் பூமியாகிய பெண் வைத்துவிட்டதைப் போன்று, நிலைத்து நின்று பயன்தரக்கூடிய புதிய பேராதனைப் பூந்தோட்டம் என்னும் குழந்தையைப் பாதுகாத்து (நீர் என்னும்) அமுதத்தைக் கொடுத்து மகாவலியாகிய தாய் பெருகிச் செல்லும்.

காட்டு வளம்

பாடல்:

வண்ணானின் மொழிகேட்டு வனம்விடுத்த சீதைதனை
இந்நாளுந் தேடுதல் போல் இருங்குரங்கு நெருங்கிடுமே.

பாடல் பிரிப்பு:

வண்ணானின் மொழிகேட்டு வனம்விடுத்த சீதைதனை, இந் நாளும் தேடுதல்போல் இருங்குரங்கு நெருங்கிடும்.

பொருள்: (துணிவெளுக்கும்) வண்ணானுடைய வார்த்தைகளைக் கேட்டு, (இராமன்) காட்டிலே விட்டுச் சென்ற சீதாதேவியை இந்த நாளிலும் தேடுவதைப்போன்று பெரிய குரங்குகள் நெருங்கி வருகின்றன.

பாடல்: காமர்நெடுங் காட்டினிலே காணுமொரு மாபுதினம்
மாமரைகள் ஒலிகேட்டுத் தாமரைகள் ஆயினவே.

பாடல் பிரிப்பு: *காமர் நெடுங்காட்டினிலே காணும் ஒரு மாபுதினம், மா மரைகள் ஒலிகேட்டுத் தாமரைகள் ஆயின.(ஏ(வே)அசை)*

பொருள்: அழகிய நீண்ட காட்டிலே காணக்கூடிய ஒரு பெரிய அதிசயம் என்னவென்றால், பெரிய மரைகள், (காட்டிலே எழும்) சத்தத்தைக் கேட்டுத் தாவிப்பாயும் மரைகளாவிட்டன.

பனைவளம் பாரீர்

பாடல்: கோணிலைகள் மாறிமழை வாரிவறந் தாலும்
கொடியமிடி வந்து மிக வேவருத்தி னாலும்
தாணிழ லளித்துயர் கலாநிலைய மே போல்
தந்து பல வேறுபொருள் தாங்கு பனையோங்கும்.

பாடல் பிரிப்பு: *கோள் நிலைகள் மாறி மழைவாரி வறந்தாலும், கொடிய மிடி வந்து மிக வருத்தினாலும், தாள் நிழல் அளித்து உயர்கலா நிலையமே போல், பலவேறுபொருள் தந்து தாங்குபனை ஓங்கும்.*

பொருள்: கிரகங்களின் நிலைமை மாறி மழையாகிய வருமானம் குறைந்துவிட்டாலும் பயங்கர வறுமையானது ஏற்பட்டு வருத்தினாலும் தனது அடியிலே நிழல் அளித்துக் காக்கும் கலாநிலையத்தைப் போல பல்வேறு வகையான பயன்தரும் பொருட்களைத் தந்து மேம்படும் பெருமையைப் பனையுடையது.

நகர்வளம்
கொழும்பு

பாடல்: கலைப்பட்டினம் கரைப்பட்டினம் கலப்பட்டினம் பெருமை
தலைப்பட்டினம் வரைபட்டிடாத் தலைப்பட்டினம் கொழும்பு.

பொருள்: கலைகள் நிறைந்த பட்டினம், கடற்கரையில் அமைந்துள்ள பட்டினம், கப்பல்கள் நிறைந்து காணப்படும் பட்டினம், (இத்தகைய) பெருமைகளால் தலைப்பட்டினமாய் விளங்குவதும்(ஏனையவற்றோடு) ஒப்பிட்டுக் கூற இயலாத சிறப்புக்களையுடையதும் கொழும்பு.

கண்டி

பாடல்: மலைவளத்தைக் காண்பதற்கு மனங்கொண்ட விலங்கை
மாதேவிக் காகமல ரயனிதனை வகுத்தான்
நிலைவளரு மிந்நகரை யெடுத்துரைக்க வென்றால்
நெடுமுடியா யிரமுடைய படவரவு வேண்டும்.

பாடல் பிரிப்பு: *மலைவளத்தைக் காண்பதற்கு மனம் கொண்ட இலங்கை மாதேவிக்காக மலர் அயன் இதனை வகுத்தான். நிலைவளரும் இந் நகரை எடுத்துரைக்க என்றால் நெடுமுடி ஆயிரம்உடைய பட அரவு வேண்டும்.*

பொருள்: மலைநாட்டின் வளங்களைக் காணவேண்டும் என்று மனம் விரும்பிய இலங்கை மாதேவிக்காகப் பிரமன் இந்த நகரத்தைப் படைத்தான். தனது நிலையிலே என்றும் வளர்வதாகியஇந்நகரத்தின் பெருமைகளை எடுத்தியம்புவதென்றால் நீண்ட, ஆயிரந்தலைகளுள்ள ஆதிசேடன் வேண்டும்.

யாழ்ப்பாணம்

பாடல்:

எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடும்
என்றே யுரைப்ப ரதுபோலப்
பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்
புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம்.

பாடல் பிரிப்பு: *எண் சாண் உடம்புக்குச் சென்னி சிறந்திடும் என்றே உரைப்பர், அது போலப் பொன்சேர் இலங்கைச் சிரமெனவேவரும் புண்ணியம் ஓங்கிடும் யாழ்ப்பாணம்.*

பொருள்: "எட்டுச் சாண்களைக் கொண்ட (அவரவரது) உடம்பிற்கு தலையே மிகப் பிரதானமானது" என்பர். அதைப்போன்று இலக்குமி கடாட்சம் நிறைந்த இலங்கைக்குத் தலையைப் போன்று விளங்குவதும், புண்ணியத்தால் ஒங்குவதும் யாழ்ப்பாணமாகும்.

பாடல்:

இலங்கை வளம் கேளாத செவியன்ன செவியே
இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே.

பொருள்: இலங்கையின் வளம் கேட்காத செவி செவியல்ல. அது இரும்பினால் அல்லது செம்பினால் ஆக்கப்பட்ட செவியாகும்.

சீறாப் புராணம்
நபி அவதாரப் படலம்

பாடல் :

பெருகிய கோடிசந் திரப்பிர காசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணிணைத்
திருநபி வருமவ தாரஞ் செப்புவாம்.

பாடல் பிரிப்பு:

பெருகிய கோடிசந்திரப் பிரகாசமாய் வரும்ஒரு பெருங்கதிர் மதியம் போலவே,கருணை வீற்றுஇருந்த செங்கமலக் கண்இணை திரு நபி வரும் அவதாரம் செப்புவாம்.

பொருள்: சந்திர ஒளியானது கோடிக்கணக்கான அளவிலே பெருக்கமடைந்து, வருகின்ற பெரிய ஒளிக்கதிர்களைக் கொண்ட ஒரு சந்திரனைப்போல, இரக்கம் பொருந்தியிருக்கும் சிவந்த தாமரைபோன்ற கண்களைக் கொண்ட மேலான முகம்மதுநபி அவர்களின் பிறப்பினைப் பற்றிக் கூறுகின்றேன்.

நரபதி அப்துல்லாஹ்

பாடல்:

வரபதி உலகெல்லாம் வாழ்த்து மக்கமா
புரபதிக் கதிபதி என்னும் பூபதி
பரபதி அரசர்கள் பணிந் திறைஞ்சிய
நரபதி அப்துல்லாவென்னு நாமத்தார்.

பாடல் பிரிப்பு:

அப்துல்லா என்னும் நாமத்தார், வரபதி உலகுஎலாம் வாழ்த்தும் மக்கா புரபதிக்கதிபதி என்னும் பூபதி, பரபதி, அரசர்கள் பணிந்து இறைஞ்சிய நரபதி.

பொருள்: அப்துல்லா என்னும் பெயரையுடையவர் (யாரென்றால்) உலகமெல்லாம் வாழ்த்துகின்ற சிறந்த பட்டணமாகிய மக்கா என்னும் பெரிய இடத்துக்கு அரசனும், பூமிக்கெல்லாம் தலைவனும், ஏனைய இடத்து அரசர்கள் பணிந்துவேண்டுதல் விடுகின்ற மனிதர்களின் தலைவருமாவார்.

குறைஷியர் குலகொழுந்து

பாடல்:

அறத்தினுக் கில்லிட மருட்கோர் தாயகம்
பொறுத்திடும் பொறுமையிற் பூமிக் கெண்மடங்
குறைப்பெருங் குலத்தினுக் கொப்பி லாமணி
சிறப்பினுக் குவமையில் வாத செல்வியே.

பாடல் பிரிப்பு: *அறத்தினுக்கு இல்லிடம், அருட்கு ஓர் தாயகம், பொறுத்திடும்*
பொறுமையில் பூமிக்கு எண்மடங்கு, உறை பெருங்குலத்தினுக்கு
ஒப்பு இலாமணி, சிறப்பினுக்கு உவமை இல்லாத செல்வியே.

பொருள்: அறத்துக்கு இருப்பிடம் போன்றவர், இரக்கத்துக்குத் தாய் நாடு போன்றவர், பொறுமையில் பூமியிலும் எட்டுமடங்கு மிக்கஉயர்வுடையவர், பெருமையுடைய குலத்துக்கு ஒப்புயர்வற்ற கண்மணி போன்றவர், (அது யாரெனின்) சிறப்பிலே தனக்கு நிகரில்லாத செல்வியாகிய ஆமினாவாகும்.

அப்துல்லாவும் ஆமினாவும்

பாடல்: இத்தகைக் குலமயி லாமி னாவெனு
முத்தவெண் ணகைக்கனி மொழியு மோகனச்
சித்திர அப்துல்லா வென்னுஞ் செம்மலும்
ஒத்தினி தமுதமுண் டுறையு நாளினில்.

பாடல் பிரிப்பு: *இத்தகைக் குலமயில் ஆமினா எனும் முத்தவெண்நகைக்*
கனிமொழியும், மோகனச் சித்திர அப்துல்லா என்னும்
செம்மலும், ஒத்து இனிது அமுதம் உண்டு உறையும் நாளில்.

பொருள்: இத்தகைய சிறப்புப்பொருந்திய உயர்ந்த இன மயில் போன்ற ஆமினா எனப்படுகின்ற முத்துப்போன்ற வெண்மையான சிரிப்பைச் சிந்துகின்ற கனிபோன்ற (இனிமையான) மொழிகளைப் பேசுகின்றவளும், கவர்ச்சிகரமான சித்திரம்போன்ற அழகினையுடைய அப்துல்லா எனப்படுகின்ற ஆடவருள்ளே சிறந்தவரும் மனமொத்து இனிமையாக அமுதம் போன்ற உணவுவகைகளை உண்டு வாழ்ந்துவரும் நாளிலே.

முகம்மது ஆமினா வயிற்றினில் தரித்தார்.

பாடல்: திங்க ளாமி றஜபு முதற்றெய்தி வெள்ளியிராத்
துங்கவார்கழல் முகம்மது பேரொளி துளங்கி
எங்க ணாயக ரப்துல்லா நுதலிடத் திருத்து
மங்கை யாமினா வயிற்றினிற் றரித்தது அன்றே.

பாடல் பிரிப்பு: திங்களாம் இறஜபு முதல் தெய்தி வெள்ளிஇராத் துங்க ஆர்கழல்
முகம்மது பேர்ஒளி துளங்கி, எங்கள் நாயகர் அப்துல்லா
நுதலிடத்து இருந்து, மங்கை ஆமினா வயிற்றினில் தரித்தது அன்றே.

பொருள்: றஜப் (இறஜபு) மாதத்தின் முதல் திகதியிலே, வெள்ளி இரவிலே உயர்ந்த ஒலிக்கின்ற கழல்கள் அணியப்பெற்ற முகம்மதானவர் பெரிய ஒளி விளங்கும் வண்ணம் எங்களுடைய தலைவரான அப்துல்லாவின் நெற்றியிலிருந்து (ஒளிப்பிளம்பாக) மங்கைப் பருவத்தையுடைய ஆமினாவின் வயிற்றிலேசென்று கருவாகத் தரித்தார்.

முகம்மது பற்றி இறைவன் உரைத்தனன்

பாடல்:

திருந்தும் பொன்னக ரமரரே
திரண்ட வானவரே
கருத்தி னுண்மகிழ்ந் தெவ்வையு
மலங்கரித் திடுமின்
வருத்த மொன்றிலா முகம்மதை
யாமினா வயிற்றில்
இருத்தினேனென வுரைத்தன
னியாவர்க்கு மிறையோன்

பாடல் பிரிப்பு: "திருந்தும் பொன்னகர் அமரரே, திரண்ட வானவரே, கருத்தினுள் மகிழ்ந்து எவ்வையும் அலங்கரித்திடுமின், வருத்தம் ஒன்று இலா முகம்மதை ஆமினா வயிற்றில் இருத்தினேன்" என உரைத்தனன் யாவர்க்கும் இறையோன்.

பொருள்: உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ் " திருந்திய தேவலோகத்திலேயுள்ள இறவா நிலையினராகிய அமரர்களே, திரண்டுள்ள தேவர்களே, உள்ளத்திலே மகிழ்ச்சிகொண்டு எல்லா இடங்களையும் அலங்கரியுங்கள். எவ்வித குறைகளுமற்ற (வருத்தம், கவலை போன்றவை இல்லாத) முகம்மதுவை ஆமினாவின் வயிற்றிலே இருத்தியுள்ளேன்" என்று கூறினார்.

கண்டான் இபுலீசு, கொண்டான் கவலை

பாடல்:

அந்தண் பொன்னக ரடங்கலு மலங்கரித் ததுவும்
வெந்த பாழ்நகர கங்களை அடைத்த பல்விதமும்
சந்த திண்புய முகம்மது நபிதரித் ததுவும்
இந்த வாறுக ளனைத்தையு மறிந்திபு லீசு.

பாடல் பிரிப்பு: *அந்தண் பொன்னகர் அடங்கலும் அலங்கரித்ததுவும், வெந்த பாழ் நகரங்களை அடைத்த பல்விதமும், சந்த திண்புய முகம்மது நபி தரித்ததுவும், இந்த ஆறுகள் அனைத்தையும் அறிந்து இபுலீசு. (இது அடுத்த பாடலிலே முற்றுப்பெறும் இது குளகச் செய்யுள் எனப்படும்.)*

பொருள்: அப்படிப்பட்ட குளிர்ச்சி பொருந்திய பொன்போன்ற சுவர்க்கமெல்லாவற்றையும் அலங்கரித்து செய்கையையும், வெந்து பாழ்பட்டுப் போன (நரகங்கள்) அடைக்கப்பட்ட செய்கையையும், சந்தனம் போன்ற அழகிய தோள்களைக் கொண்ட முகம்மதுநபி ஆமினாவின் வயிற்றிலே கருவாகத் தரித்ததுமான இப்படிப்பட்ட செய்திகளைச் சைத்தானாகிய இபுலீசு அறிந்து..................

பாடல்: கரைவ னேங்குவன் மலங்குவன் கலங்குவன் கதறி
இரைவன் கன்னத்திற் கையைவைத் திருந்தெழுந் திருப்பன்
தரையின் மேல்விழுந் தெனக்கிலை யினிச்சிங்கா சனமென்
றுரை மறந்திடக் கிடந்தன னிருகணீ ரொழுக.

பாடல் பிரிப்பு: *கரைவன், ஏங்குவன், மலங்குவன், கலங்குவன், கதறி இரைவன், கன்னத்தில் கையைவைத்திருந்து எழுந்து இருப்பன், தரையின் மேல்விழுந்து, எனக்குஇலை இனிச் சிங்காசனம் என்று உரை மறந்திடக் கிடந்தனன், இரு கண்நீர் ஒழுக.*

பொருள்: (இந்த அனைத்துச் செய்கைகளையும் கண்ட இபுலீசு) உருகுவான், மனம் ஏங்குவான், மயங்குவான், கலங்குவான், சத்தமிட்டுக் கதறி அழுவான். கன்னத்திலே கையை ஊன்றியபடி எழுந்திருப்பான். தரையின்மீது விழுந்தவாறு எனக்கு இனிச்சிங்காசனம் இல்லை என்று கூறியபடி, இரு கண்களிலிருந்தும் கண்ணீர் ஒழுகவும், பேச்சுமூச்சற்றுக் கிடந்தான்.

ஆமினா கனவில் ஆதம் உரைத்தனர்

பாடல்: தரித்திடு முதற் றிங்களிற் றரைபுக ழாதம்
உரைப்ப ராமினா கனவினி லுன்றிரு வுதரத்
திருக்குஞ் சந்ததி வலுமையை யுடையதிவ் வுலகத்
தருக்க னொப்பல நாமமு கம்மதென் றகன்றார்.

பாடல் பிரிப்பு: *தரித்திடும் முதல் திங்களில் தரைபுகழ் ஆதம், உரைப்பர் ஆமினா கனவினில் - உன் திரு உதரத்து இருக்கும் சந்ததி வலுமையை உடையது. இவ்வுலகத்து அருக்கன் ஒப்பல, நாமம் முகம்மது- என்று அகன்றார்.*

பொருள்: (ஆமினா) கருத்தரித்த முதல் மாதத்திலே, இவ்வுலகம் புகழுகின்ற முதல் மனிதர் ஆதம் என்பவர் ஆமினாவின் கனவிலே தோன்றிக் கூறுகின்றார், " உன்னுடைய மேலான வயிற்றிலே இருக்கும் பிள்ளையானது மிகவும் வலிமையுடையது, இவ்வுலகத்தில் அதற்குச் சூரியனும் ஒப்பாகாது அதனுடைய பெயர் முகம்மது என்பதாகும்" என்று கூறி அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

பாடல்: சினவு வேற்கரத் தப்துல்லா வெனுமொரு சிங்க
மனைவி யாகிய ஆமினா வெனுங்குல மடமா
னினமு மாயமும் வாழ்த்திடக் கருப்பமு மிலங்கக்
கனவு கண்டக மகிழ்ந்தினி திருக்குமக் காலம்.

பாடல் பிரிப்பு: *சினவு வேல்கரத்து அப்துல்லா எனும் ஒரு சிங்கம் மனைவி ஆகிய ஆமினா எனும் குலமடமான், இனமும் ஆயமும் வாழ்த்திடக் கருப்பமும் இலங்கக் கனவுகண்டு அகமகிழ்ந்து இருக்கும் அக்காலம்.*

பொருள்: கோபம் கொள்கையில் வேற்படையைக் கையில் ஏந்துகின்ற அப்துல்லா என்கின்ற சிங்கம் போன்றவரும், (அவருடைய) மனைவியாகிய ஆமினா என்று சொல்லப்படுகின்ற இளமைத்தன்மை பொருந்திய உயர்குல மான் போன்றவளும், சுற்றத்தினரும், தோழியரும் வாழ்த்திநிற்கவும், வயிற்றிலேயுள்ள கருப்பமும் விளங்கி வரவும் கனவுகள் கண்டு உள்ளம் மகிழ்ந்திருக்கும் அந்தக் காலத்திலே.

தந்தை கூறிடத் தனயன் சென்றார்"

பாடல்:

மக்கா நன்னக ரப்துல்முத் தலிபெனு மன்ன
னக்க மன்னமன் னப்துல்லா தமையழைத் திருத்தித்
தக்க புத்தியு முறைமையுந் தொழிலையுஞ் சாற்றி
யொக்கல் கூட்டுறப் புறநகர் கெழுகவென் றுரைத்தார்.

பாடல் பிரிப்பு: *மக்காநல்நகர் அப்துல்முத்தலிபு எனும் மன்னன், அக்கம் அன்னமன் அப்துல்லா தமை அழைத்து இருத்தித் தக்க புத்தியும் முறைமையும் தொழிலையும் சாற்றி, "ஒக்கல் கூட்டு உறப் புறநகர்க்கு எழுக" என்று உரைத்தார்.*

பொருள்: மக்கா எனப்படுகின்ற நல்ல நகரத்தை ஆளுகின்ற அப்துல்முத்தலிபு என்னும் அரசன், (தன்னுடைய) கண்ணை ஒத்த மகனை (அப்துல்லாவை) அழைத்துத் தமக்குப் பக்கத்திலே இருத்தி, ஏற்ற அறிவுரைகளையும் வழக்கத்தையும் அவர் செய்யவேண்டிய வேலையையும் எடுத்துக் கூறி, உறவினர்களோடு கூட்டுச் சேர்ந்து (வாணிபத்தின் பொருட்டு) நகருக்கு வெளியே செல்லுமாறு எடுத்துரைத்தார்.

தந்தைசொல் தட்டாத தனயன்

பாடல்:

தந்தை கூறிட அப்துல்லா மனந்தறு காமல்
மந்திர வாளெடுத் தினிதுற விசித்தனர் மருங்கில்
இந்திர வில்லென வில்லெடுத் தொருகையி லேந்திக்
கந்து கங்கொணர் கென்றுகட் டுரைத்தனர் கடிதின்.

பாடல் பிரிப்பு: *தந்தை கூறிட அப்துல்லா மனம் தறுகாமல் மந்திரவாள் எடுத்து மருங்கில் இனிதுற விசித்தனர், இந்திர வில்என வில்எடுத்து ஒரு கையில்ஏந்திக் கந்துகம் கொணர்க என்று கடிதின் கட்டுரைத்தனர்.*

பொருள்: தந்தை கூறிய சொற்களைக்கேட்டு அப்துல்லா மனம் மாறாமல் (மறுக்காமல்) உறையிலிடப்பட்ட வாளெயெடுத்து இடையிலே சந்தோஷமாகக் கட்டிக் கொண்டார். இந்திரனுடைய வில்லென்று கூறத்தக்க அழகியவில்லை ஒரு கையிலே ஏந்திக் கொண்டு " குதிரையைக் கொண்டு வாருங்கள்" என்று விரைவாகக் கட்டளையிட்டார்.

பாடல்:

பாடலத்தின்மேற் கொண்டுறு தனிற்பரி வாரங்
கூடு கோளரித் திரளென வரநெறி குறுகிக்
காடுங் கானமுங் கடந்துசெந் தேம்பொழிற் கனிசூழ்
நாடடைந்து போய்ப் புகுந்தனர் மதீனாமா நகரில்.

பாடல் பிரிப்பு:

பாடலத்தின்மேல் கொண்டுஉறு, தன் இல்பரிவாரம் கூடுகோளரித் திரள்என வர நெறிகுறுகிக், காடும் கானமும் கடந்து செந்தேம்பொழில் கனிசூழ் நாடு அடைந்துபோய் மதீனாமாநகரில் புகுந்தனர்.

பொருள்: (அப்துல்லா) குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, தன்னுடைய வீட்டைச் சேர்ந்த கூட்டத்தினர் சேர்ந்துவருகின்றசிங்கக் கூட்டத்தைப் போன்று வரவும், வழி பலவற்றை அடைந்து, காடுகளையும் பாலைநிலங்களையும் கடந்துசென்று, சிறந்ததேன்போன்ற கனிகள் தருகின்ற சோலைகளையுடையநாட்டையடைந்து மதீனாமாநகருக்கு வந்து சேர்ந்தனர்.

பாடல்:

வாணி பத்தொழி லனைத்தையு முடித்துமன் னவருங்
காணு நாட்சில விருந்துதம் பதிவரக் கருதிப்
பூண ணிந்தழ குறயிளை யவர்புடை சூழச்
சேண டைந்தபு வாவெனுந் தலத்தினைச் சேர்ந்தார்.

பாடல் பிரிப்பு:

வாணிபத்தொழில் அனைத்தையும் முடித்து, மன்னவரும் காணும் நாள்சில இருந்து தம்பதி வரக்கருதி, பூண்அணிந்து அழகுறும் இளையவர் புடைசூழச் சேண்அடைந்து அபுவா எனும் தலத்தினைச் சேர்ந்தார்.

பொருள்: (தந்தை கூறியபடி) வியாபாரத் தொழில்கள் எல்லாவற்றையும் முடித்து, மன்னவராகிய அப்துல்லா அறியும்படியாக அங்கே சில நாட்கள் இருந்து, தன்னுடைய நாட்டிற்கு வரநினைத்து, சிறந்த ஆபரணங்களை அணிந்து, அழகுமிக்க இளைஞர்கள் சூழ்ந்துவரச் சேய்மையிலுள்ள அபுவா என்னும் ஊரைப் போய்ச் சேர்ந்தார்.

துயில்வது போன்றிறந்தார் அப்துல்லா

பாடல்:

ஆதி கற்பனை யூழ்விதிப் பயனும்வந் தடைந்து
போது நாட்களு நாழிகைக் கணக்கையும் போக்கி
நீதி மன்னவ ரப்துல்லா தனையறி நினைவாய்ச்
சோதி மென்முக மிலங்கிட துயில்வபோன் றிறந்தார்.

பாடல் பிரிப்பு: *ஆதிகற்பனை ஊழ் விதிப்பயனும் வந்து அடைந்து, போதுநாள்களும் நாழிகைக் கணக்கையும் போக்கி, நீதிமன்னவர் அப்துல்லா தனைஅறி நினைவாய்ச் சோதிமென்முகம் இலங்கிடத் துயில்வ(து) போன்று இறந்தார்.*

பொருள்: இறைவனின் கட்டளையின்படி பழைய விதிப்பயனும் வந்து சேர்ந்து, காலமானது நாட்களையும் நாழிகைகளையும் கடத்தியதால், நீதிநெறிகளிற் சிறந்து விளங்கியவரான அப்துல்லா என்னும் மன்னர் தம்மைத்தாம் அறியும் அறிவுடன், பொருந்திய மென்மையான முகம் விளங்கும்படியாயக நித்திரை கொள்வதைப் போலவே இறந்தார்

பாடல்:

கூடிச் சூழ்ந்தவர் விதிப்பய னெனக்குலை குலைந்து
வாடி மன்னரை யெழில்பெற மணத்துட னடக்கிப்
பாடி யூரபு வாவைவிட் டகன்றுபோய்ப் பதியை
நாடி வந்தவ ராமினாக் கிவையெலா நவின்றார்.

பாடல் பிரிப்பு: *கூடிச் சூழ்ந்தவர் விதிப்பயன் எனக்குலை குலைந்துவாடி, மன்னரை எழில்பெற மணத்துடன் அடங்கிப் பாடிஊர் அபுவாவை விட்டு அகன்றுபோய்ப் பதியை நாடிவந்தார் ஆமினாக்கு இவைஎலாம் நவின்றார்.*

பொருள்: (இறந்துகிடந்த அப்துல்லாவை) சூழ்ந்து நின்றார்கள் இது ஊழ்வினைப் பயனென்று மனமிரங்கித் துன்புற்று, மன்னரான அப்துல்லாவை (உடலை) அழகுபெற அலங்கரித்து, வாசனைத் திரவியங்கள் தெளித்து அடக்கஞ் செய்து விட்டு, சிற்றூரான அபுவாவை விட்டு நீங்கிச் சென்று மக்கா என்னும் (தம்) நாட்டை அடைந்தார்கள் ஆமினாவுக்கு நடந்துமுடிந்த சகல விடயங்களையும் கூறினார்கள்.

மடமயிலின் மனமயக்கம்

பாடல்:

மாற்றங் கேட்டலு மடமயில் மனமுடைந் தலறித்
தோற்று மாமழை சொரிந்தெனக் கண்ணீர் சொரியப்
போற்றுங் காழகிற் புகைக்குழல் நிலம்புரண் டசையக்
கோற்றொ டிக்கரக் காந்தடா மரைமுகங் குழைக்க.

பாடல் பிரிப்பு: *மாற்றம் கேட்டலும் மடமயில் மனமுடைந்து அலறித், தோற்றும் மாமழை சொரிந்து எனக் கண்ணின் நீர்சொரிய, போற்றும் காழ்அகில் புகைக்குழல் நிலம்புரண் டசையக் கோற்றொ டிக்கரக் காந்தடா மரைமுகங் குழைக்க.*

பொருள்: (அபுவாவைவிட்டு நீங்கி வந்தவர்கள்) கூறியவற்றைக் கேட்ட, இளமையான மயிலைப் போன்ற ஆமினா மனந்தடுமாறிக் கதறியழுது, மழைக்காலத்துப் பெருமழை பெய்ததுபோலக் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்துவழிய, போற்றுதற்குரிய காழ்பகுதியால் ஆன அகிற்புகையால் மணமூட்டப்பட்ட கூந்தலானது நிலத்திலே புரண்டு அசையும்படி விழுந்து, வளைந்த வளையல்கள் அணிந்து காந்தள் மலர்போன்ற விரல்களைக் கொண்ட கைகளால் தாமரைபோன்ற முகத்தைப் பிசைந்து..................

பாடல்: வருந்தி நொந்தழு தாமினா விடைதலும் வளைந்து
திருந்தி ழைக்கொடி மடவியர் இரங்குத திரண்முத்து
இருந்த சூல்வலம் புரியினைச் சூழ்ந்தசங் கினங்கள்
நிரைந்தி ரங்குவ போன்ற தெங்கணு நிறைந்தே.

பாடல் பிரிப்பு: *வருந்தி நொந்துஅழுது ஆமினா இடைதலும், வளைந்து திருந்து இழைக் கொடிமடவியர், இரங்குதல் திரள்முத்து இருந்து சூல் வலம்புரியினைச் சூழ்ந்த சங்கினங்கள், நிரைந்து இரங்குவ(து) போன்றது எங்கணு நிறைந்தே.*

பொருள்: வருத்தமுற்று மனம் நொந்து அழுது ஆமினா தன்வசமிழந்த போது, சிறந்த ஆபரணங்களை அணிந்த கொடிபோன்றவரான இளம்பெண்கள், திரட்சியான முத்தைக் கொண்டிருக்கின்ற வலம்புரிச் சங்கினைக் சூழ்ந்த ஏனைய சங்கினங்கள், சூழ்ந்திருந்து ஒலியெழுப்புவதைப் போன்று எல்லாப் பக்கங்களிலும் நெருங்கிச் சூழ்ந்து அழலாயினர்.

ஆறுதல் சொன்னார் அப்துல்முத்தலிபு

பாடல்: உடுத்த பூமியிற் புதைமணி யெனவுட லொடுங்கி
வடித்த கண்ணினீ ரொழுகிட இருந்த பொன் மயிலை
அடுத்து வந்திருந் தன்புட னப்துல்முத் தலிபு
தொடுத்த துன்பங்க ளாற்றிநல் வழிபல சொன்னார்.

பாடல் பிரிப்பு: *உடுத்த பூமியிற் புதைமணி என உடல் ஒடுங்கி, வடித்த கண்ணின் நீர் ஒழுகிட இருந்த பொன்மயிலை, அடுத்து வந்து இருந்த அன்புடன் அப்துல் முத்தலிபு, தொடுத்த துன்பங்கள் ஆற்றிநல்வழி பல சொன்னார்.*

பொருள்: (பூமியின்) புழுதியிலே புதையுண்டு கிடந்த மணிபோன்று உடலானது மெலிந்து, கண்களிலிருந்து வடிந்த நீரானது ஒழுகுமாறு இருந்த பொன்மயமான மயிலைப்போன்று இருந்த ஆமினாவின் பக்கத்திலே வந்திருந்து, அன்புடன் அப்துல்முத்தலிபு, ஆமினா அடைந்த துன்பங்களை மாற்றி, நல்ல அறிவுரைகள் பலவற்றைச் சொன்னார்.

பரதாபம் நீங்கிய பைங்ககொடி

பாடல்: அண்டரி லொருவர் மரகதக் கிண்ணத்
தமுதினை யேந்திவந் தடுத்துக்
கொண்டவர் கொடுப்பக் கூறிலீன் வாங்கிக்
கொடியிடை மடமயிற் கீய

Geetha Yamuna

முண்டகக் கரத்தாற் றாங்கியே பருகு
முதிர்பர தாபமு நீங்கிக்
கண்டனு மொழியார் கருப்பநோ யகன்று
கலக்கமுந் தெளிந்தன ரன்றே.

பாடல் பிரிப்பு: *அண்டரில் ஒருவர் மரகதக் கிண்ணத்து அமுதினை ஏந்திவந்து அடுத்துக் கொண்டவர் கொடுப்பக் கூறுலீன் வாங்கிக் கொடி இடை மடமயிற்குஈய, முண்டகக் கரத்தால் தாங்கிே ய பருக, முதிர்பரதாபமும் நீங்கி, கண்டு எனும் மொழியார் கருப்பநோய் அகன்று கலக்கமும் தெளிந்தனர். (அன்றே)*

பொருள்; தேவர்களில் (மலக்குகளில்) ஒருவர் மரகதத்தாலான கிண்ணத்திலே அமுதத்தினை எடுத்துக் கொண்டு பக்கத்திலே வந்து கொடுக்க, அதைத் தேவலோகக் கன்னிகள் வாங்கி, இளம் மயிலையொத்த ஆமினாவுக்குக் கொடுக்க, (ஆமினாவும் தனது) தாமரை போன்ற கைகளினால் பெற்றுப் பருகவும், கணவனை இழந்ததால் உண்டான முதிர்ந்த சோகமும் நீங்கப்பெற்று, கற்கண்டை ஒத்த சொற்களைப் பேசுகின்ற ஆமினாவின் கர்ப்பத்தினால் ஏற்பட்ட நோயும் நீங்கப்பெற்று, மனக்கலக்கமும் தெளிந்தது.

ஆதரம் பெருக அகுமது தோற்றினார்

பாடல்: கோதறப் பழுத்து மதுரமே கனிந்த
கொவ்வைவா யரம்பையர் வாழ்த்தித்
தீதற நெருங்கி யேவல் செய் திருப்பச்
செழுங்கம லாசனத் திருந்த
மாதருக் கரசி யாமினா வுதர
மனையிடத் திருந்துமா நிலத்தில்
ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய்
அகுமது தோற்றின ரன்றே.

பாடல் பிரிப்பு: *கோது அறப்பழுத்து மதுரமே கனிந்த கொவ்வைவாய் அரம்பையர் வாழ்த்தித் தீது அறநெருங்கி ஏவல் செய்து இருப்ப, செழும் கமல ஆசனத்து இருந்த மாதருக்கு அரசி ஆமினா உதரமனையிடத்து இருந்து, மானிலத்தில் ஆதரம் பெருக நல்வழிப் பொருளாய் அகுமது தோன்றினர் அன்றே.*

பொருள்: குற்றமின்றிப் பழுத்த நன்கு கனிந்த கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயையுடைய தேவமாதர்கள் வாழ்த்தியபடி எவ்விதத் தீங்குகளுமின்றி அருகேயிருந்து குற்றேவல்களைச் செய்திருக்கவும், செழுமையான தாமரைபோன்ற ஆசனத்திலிருந்த பெண்ணரசியான ஆமினாவின் வயிறாகிய வீட்டிலிருந்து, இப்பெரிய பூமியின்கண் அன்பு பெருகுமாறு, நல்ல வழிகாட்டும் பொருளாக புகழுக்குரியவரான முகம்மது நபி தோன்றினார்.

கலிமா விரலினை உயர்த்தி உதித்தனர்

பாடல்:

கிடந்தொளி பரப்பி வாசங்கொப் பளித்துக்
கிளர்கிபு லாவைமுன் னோக்கி
இடங்கொளந் தரநேர் சிரசினை யுயர்த்தி
யெழில்பெறச் சுசூதுசெய் திணைத்தாள்
திடம்பெற மடித்துக் குறியிடக் கையாற்
சேர்த்தொளிர் வலக்கைகால் மேல்வைத்து
உடனணி கலிமா விரலினை யுயர்த்தி
உதித்தனர் முகம்மது நபியே.

பாடல் பிரிப்பு: *கிடந்து ஒளிபரப்பி, வாசம்கொப்பளித்துக் கிளர்கிபுலாவை முன்னோக்கி, இடம் கொள் அந்தரநேர் சிரசினை உயர்த்தி,எழில் பெறச் சுசூது செய்து இணைத்தாள் திடம்பெறமடித்து, குறி இடக்கையால் சேர்த்து ஒளிர் வலக்கைகால் மேல் வைத்து உடன் அணி கலிமாவிரலினை உயர்த்தி முகம்மது நபி உதித்தனர்.*

பொருள்: பூமியில் ஒளிபரப்பியவாறு கிடந்து, தமது மேனியிலிருந்து வாசனை கொப்பளித்து வெளியே வீசவும், தொழுந்திசையை நோக்கித் தலையை உயர்த்தி, நெற்றியானது அழகுவிளங்கப் பூமியைத் தொடும்படி பணித்திருந்த, இரண்டு கால்களையும் வலிமைபெறும் வண்ணம் மடித்து இடக்கையை இடக்காலிலே சேர்த்து, அவற்றை ஒளி விடும் வலக்கை, கால்களின்மேல் வைத்து வலக்கைச்சுட்டு (கலிமா) விரலினை உயர்த்தியபடி முகம்மதுநபி பிறந்தார்.

கஸ்தூரி மணம் மனையெலாம் பரவியது

பாடல்:

சிரசினி னெய்தோய்த் திருவிழிக் கருமை
சிறந்திடக் கொப்புழுங் கொயலாய்
மருவுசுன் னத்துஞ் செய்யலாய்த் துடக்கின்
வருங்குறி யொன்றுமில் லாதாய்ப்
பரவுகஸ் தூரிமனையெலா நிறைந்த
பரிமளங் கமகம கமெனப்
பெருகிய வொளிவு வானமட் டுலவப்
பிறந்தனர் முகம்மது நபியே.

பாடல் பிரிப்பு: *சிரசினில் நெய்தோய்த்து, இருவிழிக்கருமை சிறந்திடக் கொப்புழும் கொயலாய், மருவு சுன்னத்தும் செயலாய், துடக்கின்வரும் குறி ஒன்றும் இல்லாதாய்ப் பரவு கஸ்தூரி மனைஎலாம் நிறைந்த பரிமளம் கமகமகமஎன, பெருகிய ஒளிவு வானம் மட்டும் உலவ முகம்மதுநபி பிறந்தனர்.*

பொருள்: தலைக்கு நெய்பூசி, இரண்டு கண்களுக்கும் கரியமைதீட்டி, கொப்புள் கொடியையும் கொய்து, சுன்னத்துச் சடங்கும் செய்ததோடு தொடக்குக் குறியொன்றும் இல்லாதிருக்கவும், பரவுகின்ற கஸ்தூரியின் பரிமள வாசனையானது கமகமவென்று வீடெங்கும் நிறையவும், பெருகிய ஒளியானது வானம் வரைக்கும் சென்று பரவவும் முகம்மதுநபி பிறந்தனர்.

எம்மனைக்கும் பேறென அவதரித்தார்

பாடல்:

செம்மையங் கோட்டுக் கடகரிக் கலகந்
தீர்த்தபி னைம்பதா நாளில்
அம்மதி மாசத் தொகையினில் றபியுல்
அவ்வலிற் பன்னிரண்டாந் தேதி
எம்மனைக் கும்பே றெனவரும் பொருளாய்
இசைத்திடுங் திங்களி ராவின்
மும்மையென் றுரைக்கும் புவனமும் புரக்க
முகம்மது நபிபிறந் தனரே.

பாடல் பிரிப்பு:

செம்மை அம்கோட்டுக் கடகரிக்கலகம் தீர்ந்தபின் ஐம்பதாம் நாளில் அம்மதிமாசத் தொகையினிற் றபீயுல் அவ்வலில் பன்னிரண்டாம் தேதி, எம்மனைக்கும்பேறு எனவரும் பொருளாய் இசைத்திடும் திங்கள் இரவில் மும்மை என்று உரைக்கும் புவனமும் புரக்க முகம்மது நபி பிறந்தனர்.

பொருள்: சிவந்த அழகிய கொம்புகளைக் கொண்ட வலிமைபொருந்திய யானைப்போர் தீர்ந்த ஐம்பதாவது நாளிலே, (இஸ்லாமிய ஆண்டின் மூன்றாம் மாதம்) ரபியுல் அவ்வல் பன்னிரண்டாம் திகதி, எந்த வீட்டிற்கும் பெரும்பேறு என்று கூறத்தக்க பொருளாக , புகழ்மிக்க திங்கட் கிழமை இரவில் மூன்று என்று கூறப்படும் உலகங்களையும் காப்பதற்காக முகம்மதுநபி அவதரித்தார்.

அபித்தாலிபு திருமனையில் அவதரித்தார்.

பாடல்:

பூதலத் தரசு பதியென வுதித்த
புகழ்பெறு மக்கமா நகரிற்
சீதவொண் கதிர்சேர் கஃபத்து லாவின்
திசையினில் வடகிழக் காக
ஏதமொன் றணுகா ஜெம்றத்தி லுஸ்தா
வெனுமொரு தலத்தினி னடுவே
மாதவ ரபித்தா லிபுதிரு மனையில்
முகம்மது நபிபிறந் தனரே.

பாடல் பிரிப்பு:

பூதலத்து அரசு உதித்த புகழ்பெறும் மக்கமாநகரில் சீதஒண் கதிர்சேர் கஃபத்துல்லாவின் திசையினில் வடகிழக்காக, ஏதம் ஒன்று அணுகா ஜெம்றத்திலுஸ்தா எனும் ஒரு தலத்தினின் நடுவே, மாதவர் அபித்தாலிபு திருமனையில் முகம்மதுநபி பிறந்தனர்.

பொருள்: உலகத்திலே அரசபதி இதுவே எனத்தோன்றிய புகழ்விளங்குகின்ற மக்கா என்னும் நகரில், குளிர்ச்சி பொருந்தியதும், ஒளி நிரம்பியதுமான கஃபாவுக்குரிய வடகிழக்குத் திசையிலே, குற்றங்கள் எதுவும் அணுகாத ஜெம்றத்துலுஸ்தா எனப்படுகின்ற தலத்தின் நடுவிலே, பெருந்தவம் செய்தவரான அபித்தாலிபு என்பவரின் சிறந்த இல்லத்திலேநபி பிறந்தார்.

குபிரின் குலமறுக்கப் பிறந்தார்

பாடல்:

நெறிநிலை திரியா மருண்மத மிகுந்து
நெடுநில மெங்கணும் பரந்து
துறவறந் தவறி யில்லற மடிந்து
சுடரிலா மனையது போலக்
குறைபடுங் கால மிருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே.

பாடல் பிரிப்பு:

நெறிநிலை திரியா மருள் மதம் மிகுந்து நெடும்நிலம் எங்கணும் பரந்து, துறவுஅறம் தவறி, இல்லறம் மடிந்து சுடர்இலா மனையதுபோலக் குறைபடும்காலம் இருள் எனும் குபிரின் குலம் அறுத்து அறநெறி விளக்க, மறுஇலாது எழுந்த முழுமதிபோல முகம்மதுநபி பிறந்தனர்.

பாடல்: ஒழுக்க நெறிகள் சிதைந்தும், மயக்கம் தருகின்ற ஆணவம் மிகுதியாகிப் பெரிய உலகத்திலே பரவவும், துறவுக்குரிய ஒழுக்கம் மாறுபடவும், இல்வாழ்க்கைக்கு உரிய தருமம் அழிந்துபோகவும், ஒளியில்லாத வீடுபோலக் குறைகள் பெருகுங் காலத்திலே, அஞ்ஞானம் என்னும் இருளின் வேரை அறுத்துத் தருமநெறியானது உலகத்திலே விளங்கும்வண்ணம், மாசுமறுவற்ற எழுந்த பூரணச் சந்திரனைப் போல முகம்மதுநபி பிறந்தார்.

குறைஷியின் திலகம் பிறந்தார்

பாடல்:

பானுவின் கதிரா லிடருறுங் காலம்
படர்தரு தருநிழல் எனலாய்
ஈனமும் கொலையும் விளைந்திடும் பவநோய்
இடர்தவிர்த் திடுமரு மருந்தாய்த்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்
குறைஷியின் றிலகமே யெனலாய்
மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய்
முகம்மது நபிபிறந் தனரே.

பாடல் பிரிப்பு: *பானுவின் கதிரால் இடர்உறும் காலம் படர்தரு தருநிழல் எனலாய், ஈனமும் கொலையும் விளைந்திடும் பவநோய் இடர் தவிர்த்திடும் அரும்மருந்தாய்த், தீன் எனும் பயிர்க்கு ஓர் செழும்மழை எனலாய், குறைஷியின் திலகமே எனலாய், மாநிலம் தனக்கு ஓர் மணிவிளக்கு எனலாய் முகம்மதுநபி பிறந்தனர்.*

பொருள்: சூரியனின் வெப்பக் கதிர்களால் கஷ்டப்படுகின்ற நேரத்திலே, விரிந்து படர்ந்த மரம் தருகின்ற நிழல் என்னும் படியாக, சிறுமைத்தனத்தையும், கொலைத்தன்மையையும், பிறவித் துன்பத்தையும் தீர்க்கின்ற அரிய மருந்தாகவும், இஸ்லாமிய சன்மார்க்கம் என்னும் பயிருக்குச் செழிப்புத் தருகின்ற மழைபோலவும், குறைஷி என்னும் பெரிய குலத்திலே தோன்றிய தலைமகன் போலவும், இப்பெரிய உலகத்துக்கு ஒளியைத் தருகின்ற ஒப்பில்லாத தூண்டாமணி விளக்காகவும் முகம்மதுநபி பிறந்தார்.

சுருதியை விளக்கவந்த முகம்மதுநபி

பாடல்:

சிலைநுதற் கயற்க ணாமினா வென்னுஞ்
செவ்விபூத் திருந்தபொன் மடந்தை
மலர்தலை யுலகிற் சுருதியை விளக்கு
முகம்மதுநபிநயி னாரை
இலகிய கமலக் கரத்தினி லேந்தி
யிருவிழி குளிர்தர நோக்கிப்
பலகலை யறிவுங் கொடுப்பபோ லெழுநாட்
பான்முலை கொடுத்தன ரன்றே.

பாடல் பிரிப்பு: *சிலைநுதல் கயல்கண் ஆமினா என்னும், செவ்விபூத்து இருந்த பொன்மடந்தை மலர்தலை உலகில் சுருதியை விளக்கும் முகம்மதுநபி நயினாரை, இலக்கிய கமலக்கரத்தினில் ஏந்தி, இருவிழி குளிர்தர நோக்கிப் பலகலை அறிவும் கொடுப்பபோல் எழுநாள் பால்முலை கொடுத்தனர் (அன்றே)*

பொருள்: வில் போன்ற நெற்றியையும் கயல்மீனைப் போன்ற கண்களையும் கொண்ட ஆமினா எனப்படும் சிறப்பிலே மிகுந்த திருமகள் போன்ற பெண்ணானவள், பரந்த விளங்குகின்ற இந்த உலகில் வேதத்தை விளக்க வந்தவரான முகம்மதுநபி என்னும் தலைவரை, விளங்குகின்ற தாமரை போன்ற கைகளிலே தூக்கி தனது இரண்டு கண்களும் குளிரும்படியாகப் பார்த்து, உலகிலேயுள்ள பல்வேறுவிதமான கலை அறிவுகளையும் கொடுப்பவர் போல, ஏழு நாள் பாலைக் கொடுத்தார்.

முகம்மது எனப் பெய தரித்தார்

பாடல்:

கதம்பமான் மதம்பே ரொளியுடன் றிகழ்ந்த
காளையைக் கரத்தெடுத் தணைத்து
மதஞ்சொரிந் தசைந்த களிறென நடந்து
வந்துகஃ பாவினை வலஞ் செய்து
இதம்பெறப் போற்றி யுள்ளுறப் புகுந்தங்
கிருந்திறை தனைப்புகழ்ந் தேத்தி,
விதம்பெற முகம்ம தெனப்பெயர் தரித்து
வீறுடன் றிரும்பின ரன்றே.

பாடல் பிரிப்பு:

கதம்பமான் மதம்பேர் ஒளியுடன் திகழ்ந்த
காளையைக் கரத்து எடுத்து அணைத்து,
மதம்சொரிந்து அசைந்த களிறுஎன நடந்து
வந்துகஃ பாவினை வலம்செய்து,
இதம் பெறப்போற்றி உள்ளுறப்புகுந்து,
அங்கு இருந்து இறைதனைப் புகழ்ந்து ஏத்தி
விதம் பெற முகம்மது எனப் பெயர் தரித்து
வீறுடன் திரும்பினார் (அன்றே).

பொருள்: (அப்துல் முத்தலிபு எனப்படும் முகம்மதுநபியின் பாட்டனார்) பலவாகிய வாசனைத் திரவியங்களும் கஸ்தூரியும் மணக்க, பேரொளியோடு விளங்கிய காளையைப் போன்று வலிமையுடைய குழந்தையைக் கையிலே தூக்கி அணைத்து, மதநீர் வடியும்படியாக அசைந்து நடக்கின்ற யானையைப் போல நடந்துசென்று, கஃபாவினை வலம் வந்து அதனுள்ளே புகுந்து, இறைவனைப போற்றிப் புகழ்ந்து வணங்கி சிறப்புப் பெறும் வண்ணம் முகம்மது எனப்பெயரிட்டு வீரத்தோடு திரும்பிவந்தார்.

சுவனநாட்டரசர் முகம்மதுநபி (ஸல்) அவர்கள்

பாடல்:

தேமலர்ப் பொழில்சூழ் சுவனநாட் டரசைத்
திசைதொறும் விளக்குநா யகத்தை
மாமறைக் கொழுந்தை முகம்மது நபியை
மறுப்படா தெழுந்தசெம் மணியைப்
பூமலர் குழலி யாமினா வென்னும்
பூங்கொடி கரத்தினி லருளி
நாமவை வேற்கை யப்துல்முத் தலிபு
நடந்துதந் திருமனை சார்ந்தார்.

பாடல் பிரிப்பு:

தேமலர்ப்பொழில்சூழ் சுவனநாட்டு அரசை,
திசை தொறும் விளக்கும் நாயகத்தை,
மாமறைக்கொழுந்தை, முகம்மது நபியை,
மறுப்படாது எழுந்த செம்மணியைப்

பூமலர்க்குழலி ஆமினா என்னும்
பூங்கொடி கரத்தினில் அருளி,
நாமவை வேற்கை அப்துல் முத்தலிபு
நடந்து தம்திருமனை சார்ந்தார்.

பொருள்: தேன் சொரிகின்ற பூக்களைக் கொண்டுள்ள சோலைகளாற் சூழப்பட்ட சொர்க்கலோகத்தின் அரசரை, எல்லாத் திசைகளிலும் அறநெறியை விளக்கப்போகின்ற தலைவரை, பெரிய வேதத்தின் கொழுந்து போன்றவரை, புகழப்பட்டவர் என்று கூறப்படும் நபி(ஸல்) அவர்களை, எவ்விதக் குற்றமில்லாமல் தோன்றியுள்ள சிவந்த மாணிக்கம் போன்றவரை பூ மலர்ந்து விளங்குகின்ற கூந்தலைக் கொண்ட ஆமினா எனப்படுகின்ற பூங்கொடிபோன்ற பெண்ணின் கையிலே கொடுத்து விட்டு, அச்சமும் கூர்மையும் மிகுந்த வேலினைக் கையிலே கொண்ட அப்துல் முத்தலிபு என்பவர் நடந்துச்சென்று தம்முடைய சிறந்த வீட்டை அடைந்தார்.

கங்கையில் விடுத்த ஓலை
கந்தசாமிப் புலவரின் சிறப்பு

பாடல்:

எழுத்தறிந்து கலைபயின்றோ னின்றமிழி னியனூல்
எத்தனையோ வத்தனையு மெண்ணியாழங் கண்டோன்
பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும்புலவன் கனிந்தகுண நலத்தான்.

பாடல் பிரிப்பு:

எழுத்து அறிந்து கலை பயின்றோன், இன் தமிழின் இயல்நூல்
எத்தனையோ அத்தனையும் எண்ணி ஆழம் கண்டோன்
பழுத்த தமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்த மொழிப் பெரும் புலவன், கனிந்த குணநலத்தான்.

பொருள்: எழுத்தின் இலக்கணத்தை அறிந்து கலைகளைக் கற்றுக் கொண்டவர், இனிய தமிழ்மொழியில் இயற்றமிழ் நூல்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் நன்கு கற்றறிந்து அவற்றின் எல்லையைக் கண்டறிந்தவர், நன்கு கற்றறிந்த தமிழறிஞர்களின் பெரிய சபையிலே முந்தியிருக்கத் தக்க சிறப்புடைய பணிவான சொற்களைப் பேசுகின்ற பெரிய புலவன், இரக்கத்தன்மை பொருந்திய குணவியல்புகளைக் கொண்டவர்.

பாடல்:

சொல்வகையுஞ் சொற்றொகையுஞ் சொல்நடையுமுணர்ந்தோன்
சொல்லவல்லான் சொற்சோராத் தூய நெறி யாளன்
பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்
பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்.

பாடல் பிரிப்பு:

சொல் வகையும், சொல் தொகையும், சொல் நடையும் உணர்ந்தோன்,
சொல்ல வல்லான், சொல்சோராத் தூய நெறியாளன்
பல்வகைய நூல் கடலுள் படிந்து உண்மை மணிகள்
பல எடுத்துத் திரட்டி வைத்த பண்டாரம் போல்வான்.

பொருள்: சொல் இலக்கணத்தை நன்கு கற்றுத் தெளிந்தவர், தான் சொல்ல எண்ணியவற்றை உரிய முறையிலே சொல்ல வல்லவர், சொற் குற்றம் இல்லாதவர், தூய்மையான வழியிலே செல்பவர், பல்வேறு வகையான நூல்கள் என்னும் கடலினுள்ளே மூழ்கி (உலகுக்கு உதவக்கூடிய) உண்மை மணிகள் பலவற்றைக் கண்டெடுத்துச் சேர்த்து வைத்திருக்கின்ற களஞ்சியத்தைப் போன்றவர்.

பாடல்:

மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூலு முணர்ந்தோன்
மொழிவதற மொழியென்னும் மூதுரையுந் தெளிந்தோன்
அழுக்கறுத்த தூய சிந்தை அந்தண்மை யடக்கம்
அணியிவைதா மெனக் கொண்டோ னறநெறியில் நின்றோன்.

பாடல் பிரிப்பு: *மொழித் திறத்தின் முட்டு அறுத்து முதல் நூலும் உணர்ந்தோன்,*
மொழிவது அறமொழி என்னும் மூதுரையும் தெளிந்தோன்,
அழுக்கு அறுத்து தூயசிந்தை அந்தண்மை அடக்கம்
அணி இவைதாம் எனக் கொண்டோன், அற நெறியில் நின்றோன்.

பொருள்: சொல்லும் எதனையும் கஷ்டமில்லாமற் சொல்லத்தக்க திறன் பெற்றும் (வினையிலிருந்து நீங்கக்கூடிய) ஆதி நூலையும் அறிந்து கொண்டவர், சொல்லவேண்டியவற்றை ஐயத்துக்கிடமில்லாமற் சொல்லவேண்டும் என்னும் (ஔவையாரின்) மூதுரையையும் நன்கு கற்றுத் தெரிந்தவர், குற்றமற்ற தூய்மையான மனம், எளிமை, அடக்கம் என்பவற்றைத் தமது அணிகலன்களாகக் கொண்டவர், தரும வழியிலே நிற்பவர்.

பாடல்: மெய்ப்பொருளே பொருளென்ன விளங்கவைத்து முன்னோர்
விரித்துரைத்த வகமேழும் புறமேழும் பயின்றோன்
பொய்ப்பொருளை நச்சுபவர் புறங்கடைநோக் காதோன்
போதுபுனை மாதர்நலந் தீதெனவிட் டகன்றோன்.

பாடல் பிரிப்பு: *மெய்ப்பொருளே பொருளென்ன விளங்க வைத்து, முன்னோர்*
விரித்து உரைத்த அகம் ஏழும் புறம் ஏழும் பயின்றோன்
பொய்ப் பொருளை நச்சுபவர் புறங்கடை நோக்காதோன்,
போது புனை மாதர் நலம் தீது என விட்டு அகன்றோன்.

பொருள்: இறைவனே உண்மைப்பொருளென விளக்கி முன்னோர் விரிவாக ஆராய்ந்து கூறிய ஏழுவகையான அக ஒழுக்கங்களையும், ஏழு வகையான புற ஒழுக்கங்களையும் கற்றறிந்தவர். (இறைவனை விடுத்து) பொய்யான பொருட்களை விரும்புபவர்களின் புறவாசலைக் கூடப் பார்க்காதவர், பூக்களைச் சூடுகின்ற பெண்களின் கூட்டுறவு தீமையானது என்று எண்ணித் துறவு பூண்டவர்.

பாடல்: அவநெறியிற் செல்வோர்தாங் கரும்பிருக்க விரும்பை
அயிலுகின்ற மூடரென வறிந்துலகு துறந்து
தவநெறியிற் றலைப்பட்டோ வைாவின்மை யென்னும்
தனிச்செல்வந் திரட்டிவைத்த தாவில்புக ழாளன்.

பாடல் பிரிப்பு: *அவநெறியில் செல்வோர் தாம் கரும்பு இருக்க இரும்பை*
அயிலுகின்ற மூடர் என அறிந்து உலகு துறந்து
தவநெறியில் தலைப்பட்டோன், அவா இன்மை என்னும்
தனிச் செல்வம் திரட்டி வைத்த தாஇல் புகழாளன்.

பொருள்: தீயவழியிலே செல்பவர்கள் (இனிமையான) கரும்பை விடுத்து இரும்பை உண்ணுகின்ற அறிவற்றவர்கள் என்பதை உணர்ந்து, இல் வாழ்கையைத் துறந்து தவவாழ்வினை மேற்கொண்டவர், அவா இல்லாத தன்மை என்னும் தன்னிகரற்ற செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கின்ற குற்றமற்ற புகழைக் கொண்டவர்.

பாடல்: அன்பாண்ட புலமையினோ ரெந்நாடும் நாடா
அடைந்துவத்தல் முறையெனினு மமலனர சாண்ட
தென்பாண்டி நன்னாட்டிற் சோழவந்தா னூரைச்
சேர்ந்துதிகழ் சைவநெறித் திருமடத்தி லுறைந்தோன்.

பாடல் பிரிப்பு: *அன்பு ஆண்ட புலமையினோர் எந்நாடும் நாடா,*
அடைந்து உவத்தல் முறை எனினும், அமலன் அரசு ஆண்ட
தென்பாண்டி நல்நாட்டில், சோழவந்தான் ஊரைச்
சேர்ந்து திகழ் சைவநெறித் திருமடத்தில் உறைந்தோன்.

பொருள்: அன்பு எனப்படும் அரசை ஆட்சி செய்கின்ற அறிஞர்களுக்கு (உலகிலுள்ள) எந்நாடும் சொந்த நாடே எனக் கருதிச்சேர்ந்து மகிழ்ந்திருத்தல் முறையாயினும், இறைவன் (சோமசுந்தர பாண்டியனாகி) அரசு புரிந்த தென்பாண்டி என்னும் நல்ல நாட்டைச் சேர்ந்த சோழவந்தான் என்னும் ஊழிலுள்ள சைவ வழியிலே நடைபெறும் திருமடத்தைச் சேர்ந்து வாழ்ந்து வந்தவர்.

கந்தசாமிப் புலவரோடு நட்பு

பாடல்: கந்தசா மிப்பெயரோன் வேட்களத்தி லென்னைக்
கண்டநா ளன்பென்னுங் கயிறுகொண்டு பிணித்தான்
அந்தநாண் முதலாக நட்புரிமை பூண்டோம்
அண்மையில்யான் வட நாடு நண்ணியதையறிந்தே.

பாடல் பிரிப்பு: *கந்தசாமிப் பெயரோன் வேட்களத்தில் என்னைக்*
கண்டநாள் அன்பு என்னும் கயிறு கொண்டு பிணித்தான்,
அந்த நாள் முதலாக நட்புரிமை பூண்டோம்,
அண்மையில் யான் வடநாடு நண்ணியதை அறிந்தே.

பொருள்: கந்தசாமி என்னும் பெயரையுடைய நண்பன் திருவேட்களத்தில் என்னைக் கண்ட நாளிலேயே அன்பு எனப்படும் கயிற்றினாலே என்னைக் (தன்னோடு சேர்த்துக்) கட்டிவிட்டான். அந்த நாளிலிருந்தே நாம் நட்புக்கொண்டுவிட்டோம். சமீபத்தில் நான் வடநாட்டுக்குச் சென்றதை அவன் அறிந்து...

பாடல்: நம்மடிக ளுறைகின்ற தவப்பள்ளி யாது
நற்றவத்தோர் முகவரியா தெனவினவித் தெரிந்து
செம்மையுறுஞ் செய்திபொதி யோலையொன்று விடுக்கச்
சிந்தைவைத்தா னெனவெனக்கோ ரன்பனறி வித்தான்.

பாடல் பிரிப்பு: *நம் அடிகள் உறைகின்ற தவப்பள்ளி யாது,*
நல் தவத்தோர் முகவரி யாது, என வினவித் தெரிந்து
செம்மையுறும் செய்தி பொதி ஓலை ஒன்று விடுக்கச்
சிந்தை வைத்தான் என எனக்கு ஓர் அன்பன் அறிவித்தான்.

பொருள்: நம்முடைய விபுலாந்த அடிகள் (வடநாட்டிலே) வசிக்கின்ற தவச்சாலை எது? நல்ல தவவாழ்வை மேற்கொண்டிருக்கின்ற அடிகளின் விலாசம் எது? என்று கேட்டுத் தெரிந்து, நன்மையான விடயங்கள் அடங்கிய கடிதமொன்றை எழுதுவதற்கு(கந்தசாமி) மனதிலே எண்ணியுள்ளார் என்று எனக்கு ஓர் அன்பன் தெரிவித்தான்.

பாடல்:

அகநெகுமன் பினிலூறு முரைபகரும் பொருட்டோ
ஆய்ந்தசில கலைமுடிபு தேர்ந்துணரும் பொருட்டோ
முகவரிபெற் றோலைவிட முயன்றனன்பே ரன்பன்
மூதறிஞ னெனவெண்ணி யாதரமுற்றிருந்தேன்.

பாடல் பிரிப்பு:

அகம் நெகும் அன்பினில் ஊறும் உரை பகரும் பொருட்டோ,
ஆய்ந்த சில கலை முடிபு தேர்ந்து உணரும் பொருட்டோ,
முகவரி பெற்று ஓலைவிட முயன்றனன் பேரன்பன்,
மூதறிஞன் என எண்ணி ஆதரம் உற்று இருந்தேன்.

பொருள்: உள்ளம் உருகி, அன்பின் வெளிப்பாடான செய்தியைச் சொல்லும் நோக்கத்திலோ அல்லது தான் ஆராய்ச்சி செய்த கலை முடிபுகளைத்தெளிவாக உணர்ந்து கொள்ளும் நோக்கத்திலோ பேரன்பனும் முதிர்ந்த தமிழறிஞனுமான அவன், எனது முகவரியைப் பெற்றுக் கடிதம் எழுத முயற்சி செய்தான் என நான் நினைத்து அன்பு கொண்டிருந்தேன்.

கந்தசாமியாரின் இறப்பும் அடிகளின் துன்பமும்

பாடல்:

ஓரிருநாள் கழியுமுன்னர் மார்படைப்பு நோயால்
ஊனுடலம் பாரில்விழ வானுலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பனெனு மவலவுரை செவியில்
அனற்பிழம்பாய்ப் புகுந்துளத்தை யுருக்கியதப் பொழுதில்.

பாடல் பிரிப்பு:

ஓரிரு நாள் கழியும் முன்னர் மார்பு அடைப்பு நோயால்
ஊன் உடலம் பாரில் விழ, வான் உலகு புகுந்தான்
ஆருயிர்நேர் நண்பன் எனும் அவலஉரை செவியில்
அனல் பிழம்பாய்ப் புகுந்து உளத்தை உருக்கியது அப்பொழுதில்

பொருள்: (கந்தசாமி என்னுடைய விலாசத்தை அறிந்து சென்றார் என்பதைக் (கேள்விப்பட்டு)ஒன்று இரண்டு நாட்கள் கழிந்து போவதற்கு முன்பாகவே என்னுடைய அரிய உயிரை ஒத்த நண்பன் கந்தசாமி மார்படைப்பு என்னும் நோயால் தசையாலாகிய உடல் பூமியிலே விழுந்து கிடக்க, மேலுலகத்தை அடைந்து விட்டான் என்னும் துன்பத்தைத் தருகின்ற செய்தி செவியினூடாக நெருப்புத் திரளாகப் புகுந்து உள்ளத்தை வருத்தியது.... அப்பொழுது....

பாடல்:

பொங்கியெழுந் துயர்க்கனலைப் போக்குதற்கும் மாயப்
பொய்யுலகி னுண்மையினைப் புலங்கொளற்குங் கருதிக்
கங்கையெனுந் தெய்வநதிக் கரைப்புறத்தை யடைந்து
கல்லென்று சொல்லிவிழும் நீர்த்தரங்கங் கண்டேன்.

பாடல் பிரிப்பு:

பொங்கி எழும் துயர்க்கனலைப் போக்குவதற்கும் மாயப்
பொய் உலகின் உண்மையினைப் புலம் கொளற்கும் கருதிக்
கங்கை எனும் தெய்வ நதிக் கரைப்புறத்தை அடைந்து
கல் என்று சொல்லி விழும் நீர்த்தரங்கம் கண்டேன்.

பொருள்: மனதிலே பொங்கி வருகின்ற துயரென்னும் தீயை அணைப்பதற்கும், மாயத்தோடு கூடிய நிலையில்லாத இவ்வுலகின் உண்மைத் தன்மையினை அறிந்து கொள்வதற்கும் எண்ணி, கங்கை எனப்படுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய நதியின் கரைப்பக்கத்தை அடைந்து கல் என்ற ஒலியோடு விழுகின்ற நீரலைகளைக் கண்டேன்.

பாடல்:

மேற்றிசைவான் ஈமத்தீ போற்சிவக்கப் பகலோன்
மெலிந்துமறைந் திடல்கண்டேன் நலிந்தவருள் ளம்போற்
காற்றுயிர்த்து பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்
காரிருளின் கணமிரிய வானவெளிப் பரப்பில்.

பாடல் பிரிப்பு:

மேல் திசைவான் ஈமத்தீ போல் சிவக்கப் பகலோன்
மெலிந்து மறைந்திடல் கண்டேன், நலிந்தவர் உள்ளம்போல்
காற்று உயிர்த்துப் பனித்திவலை தூற்றுதலைக் கண்டேன்,
கார் இருளின் கணம் இரிய வானவெளிப் பரப்பில்....

பொருள்: மேற்குத் திசையிலுள்ள வானமானது சுடுகாட்டுத் தீயினைப் போலச் சிவந்திருக்கச் சூரியன் தேய்ந்து மறைந்திடுவதைக் கண்டேன். துன்பமடைந்தவர்களுடைய உள்ளத்தைப் போலக் (பெருமூச்சுவிட்டு) காற்று மென்மையாக வீசிப் பனித்துளிகளைத் தூற்றுவதைக் கண்டேன். கரிய இருட்பொழுதானது மறைய, வானவெளியிலே.

மாயவுலகின் மர்மம்

பாடல்:

ஐயிரண்டு நாள் வளர்ந்த வெண்மதியந் தோன்றி
அன்புசொரிந் திடல்கண்டேன் மன்பதையோர் வாழ்க்கைச்
செய்தியினைத் தேவரறி வாரெனலா மிவர் பால்
தேர்ந்திடுவ னெனமனத்தி லோர்ந்தொருபாலிருந்தேன்.

பாடல் பிரிப்பு:

ஐயிரண்டு நாள் வளர்ந்த வெண்மதியம் தோன்றி
அன்பு சொரிந்திடல் கண்டேன். மன்பதையோர் வாழ்க்கைச்
செய்தியினைத் தேவர் அறிவார் எனலாம், இவர் பால்
தேர்ந்திடுவன் என் மனத்தில் ஓர்ந்து ஒரு பால் இருந்தேன்.

பொருள்: பத்தாம் நாள் வளர்ச்சியைக் கொண்ட வெண்மையான சந்திரன் உதித்து ஒளியாகிய அன்பைப் பொழியக் கண்டேன். மக்களது வாழ்க்கைச் செய்திகளைத் தேவர்கள் அறிவார்கள். ஆகையால், இவரிடம் (சந்திர தேவரிடம்) கேட்டு அறிந்து கொள்ளலாம் என்று மனதிலே எண்ணிக் கங்கைக் கரையின் ஒரு பக்கத்திலே இருந்தேன்.

பாடல்:

அக்கரையிற் காசிப்பூர்ச் சுடுகாட்டு நரிகள்
அழுகுரலி னொலிசெவியை யடைந்ததுநன் னீரின்
இக்கரையி லுதிர்சருகுங் குச்சிகளு மலையால்
எற்றுண்டு செயலொழிந்து கிடந்தனவெம் மருங்கும்,

பாடல் பிரிப்பு:

அக்கரையில் காசிப்பூர்ச் சுடுகாட்டு நரிகள்
அழுகுரலின் ஒலி செவியை அடைந்தது, நன்னீரின்
இக்கரையில் உதிர் சருகும் குச்சிகளும் அலையால்
எற்றுண்டு செயல் ஒழிந்து கிடந்தன எம்மருங்கும்.

பொருள்: அந்தக் கரையிலேயுள்ள காசிப்பூரின் சுடுகாட்டிலுள்ள நரிகளின் ஊளையிடும் ஓசையானது என்னுடைய செவிகளில் விழுந்தது. கங்கையெனப்படும் நல்ல நீரிலே உதிர்கின்ற சருகுகளும் சிறுகுச்சிகளும் நீரலையால் எற்றப்பட்டுச்(இழுத்துச் செல்லப்பட்டு) செயலற்று எல்லாப் பக்கங்களிலும் கிடந்தன.

பாடல்:

நீர்த்திரையா லிழுப்புண்ட குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்தும் கீழ்விழுந்து மலைந்து
சீர்க்கரையி லெற்றுண்டு கிடந்த செயல் நோக்கிச்
சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கையிது வென்றேன்.

பாடல் பிரிப்பு:

நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சி ஒன்று கணமும்
நில்லாது மேல் எழுந்தும் கீழ் விழுந்தும் அலைந்து
சீர்க்கரையில் எற்றுண்டு கிடந்த செயல் நோக்கிச்
சிந்திக்கின் மானிடர் தம் வாழ்க்கை இது என்றேன்.

பொருள்: நீர் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்ட சிறு குச்சியொன்று கொஞ்ச நேரமும் ஓரிடத்தில் நில்லாமல் மேலே எழுந்தும், கீழே விழுந்தும், அலைந்தும் இறுதியில் சிறப்புமிக்க கங்கைக் கரையிலே எற்றப்பட்டுக் கிடந்த செய்கையைப் பார்த்துச் சிந்தித்தால் மனிதர்களது வாழ்க்கையும் இப்படித்தான் என்று எண்ணினேன்.

பாடல்:

இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்
எமக்குநிக ராரென்ப ரிருகணத்தி னுளத்தில்
துன்பமுற மண்ணில் விழுந் திருகண்ணீர் சொரியச்
சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லலைவார்.

பாடல் பிரிப்பு: *இன்ப விளையாட்டின் இடை மேலெழுந்து குதிப்பார்,*
எமக்கு நிகர் ஆர் என்பர், இரு கணத்தில் உளத்தில்
துன்பம் உற மண்ணில் விழுந்து இரு கண்ணீர் சொரியச்
சோர்ந்து அழுவார், மயக்கம் எனும் சுழல் காற்றில் அலைவார்.

பொருள்: வாழ்க்கையில் இன்பம் நேருகின்றபொழுது மேலேயெழுந்து குதிப்பார்கள். இந்த உலகத்தில் எமக்கு நிகராக உள்ளவர் யார் என்று கூறுவார்கள். அடுத்த கணப்பொழுதிலே உள்ளத்தில் துன்பம் வந்துசேர நிலத்திலே விழுந்து இருகண்களும் நீரைச் சொரியச் சோர்ந்துபோய் அழுவார்கள். அறியாமையால் மயக்கம் எனப்படும் சுழல்காற்றிலே அகப்பட்டுத் தத்தளிப்பார்கள்.

பாடல்: மரணமெனுந் தடங்கரையி லெற்றுண்டு கிடப்பார்
மறு பிறவித் திரைகவர வந்தியையுங் கருவி
கரணமுறு முடலெடுத்து மண்ணுலகி னுழல்வார்
காதலிப்பா ரெண்ணிறந்த வேதனையுட் புகுவார்.

பாடல் பிரிப்பு: *மரணம் எனும் தடம்கரையில் எற்றுண்டு கிடப்பார்,*
மறுபிறவித் திரைகவர வந்து இயையும் கருவி
கரணம் உறும் உடலெடுத்து மண்ணுலகில் உழல்வார்,
காதலிப்பார், எண்ணிறைந்த வேதனையுள் புகுவார்.

பொருள்: மரணம் எனப்படும் வலிய கரையிலே எற்றப்பட்டுக் கிடப்பார்கள். மறுபிறப்பு என்கின்ற அலையானது கவர்ந்து இழுக்க வந்து சேரும் கருவி, கரணங்களோடு கூடிய உடலை எடுத்து மண்ணாலாகிய இந்த உலகத்திலே உழன்று திரிவர். உலகத்தில் உள்ள பொருட்களிலே ஆசை கொள்வர். மீண்டும் அளவற்ற வேதனைகளை அடைந்து வருந்துவர்.

அடிகள் சந்திரனிடம் வினாவுதல்

பாடல்: என்றினைய சிந்தைசெய்து நீலவிதா னத்தில்
எழில்முத்தின் சுடர்பரப்பி யெழுமதியை நோக்கி
நன்றிறறிவார் கலைத்திறத்திற் கிலக்காய மதியே
நன்மதியே நாதர்சடை முடியுறையும் நலத்தோய்.

பாடல் பிரிப்பு: *என்று இனைய சிந்தை செய்து நீலவிதானத்தில்*
எழில் முத்தின் சுடர்பரப்பி எழுமதியை நோக்கி,
"நின்று அறிவார் கலைத்திறத்துக்கு இலக்காய மதியே,
நன்மதியே, நாதர்சடை முடி உறையும் நலத்தோய்."

பொருள்: என்று இவ்வாறு சிந்தித்து நீலநிறமான ஆகாயத்திலே அழகிய முத்தைப்போல ஒளிவீசித் தோன்றுகின்ற சந்திரனைப் பார்த்து, "நன்மையை அறிந்த புலவர்களின் கலைத்திறத்துக்கு ஆட்பட்ட சந்திரனே, நல்ல சந்திரனே, இறைவனின் சடை முடியிலே வாழ்கின்ற நலம் பொருந்தியவனே."

பாடல்:

தாழ்வதும் மடிவதுவுந் தரணியில்வந் துதித்தோர்
தாவில் புகழ் நலம்பெருக்கித் தண்ணளிசேர்ந் தனராய்
வாழ்வதுவு மெத்திறத்தால் வந்தனகாண் என்றேன்
வான்மதிய மெனைநோக்கி மானிடவ கேட்டி

பாடல் பிரிப்பு:

"தாழ்வதுவும் மடிவதுவும் தரணியில் வந்து உதித்தோர்
தாவில் புகழ் நலம் பெருக்கித் தண்ணளி சேர்ந்தனராய்
வாழ்வதும் எத்திறத்தால் வந்தனகாண்" என்றேன்,
வான்மதியம் எனை நோக்கி, "மானிடவ கேட்டி...."

பொருள்: "இந்தப் பூமியிலே வந்து பிறந்தவர்கள் குற்றமற்ற புகழ்நலத்தைப் பெருக்கி அருளுடையவர்களாய் வாழ்ந்து வருவதும், (பின்) தாழ்ந்து போவதும், இறந்து போவதும் அவர்களுக்கு எக்காரணத்தால் வந்து சேர்ந்தன" என்று கேட்டேன். வானத்திலே உள்ள சந்திரன் என்னைப் பார்த்து, "மானிடனே கேட்பாயாக...." (தரணியில் வந்துதித்தோர் தாவில்புகழ் நலம்பெருக்கித் தண்ணளி சேர்ந்தனராய் வாழ்வதுவும், தாழ்வதுவும், மடிவதுவும் எத்திறத்தால் வந்தனகாண் என்றேன், வான் மதியம் எனை நோக்கி மானிடவ கேட்டி..... என்று கொண்டு கூட்ட வேண்டும்.)

பாடல்:

மாய்தலெனும் பேருண்மை பிறத்தலெனு முண்மை
வந்துதித்தோர் தொல்லுலகில் வளர்தலெனு முண்மை
தேய்தலெனு முண்மையிவை யாருமுளங் கொள்ளச்
சென்றுதேய்ந் திறந்துதித்து நின்றுவளர்கின்றேன்.

பாடல் பிரிப்பு:

தொல்லுலகில் வந்துதித்தோர், பிறத்தலெனு முண்மை,
வளர்தலெனு முண்மை, தேய்தலெனு முண்மை,
மாய்தலெனும் பேருண்மை இவை யாருமுளங் கொள்ளச்
சென்று தேய்ந் திறந்துதித்து நின்றுவளர்கின்றேன்
என்று கொண்டு கூட்ட வேண்டும்.

"தொல் உலகில் வந்து உதித்தோர், பிறத்தல் எனும் உண்மை, வளர்தல் எனும் உண்மை, தேய்தல் எனும் உண்மை, மாய்தல் எனும் பேருண்மை இவை யாரும் உளம் கொள்ளச் சென்று, தேய்ந்து, இறந்து உதித்து நின்று வளர்கின்றேன்.

பொருள்: "தொன்மையான உலகத்திலே வந்து பிறந்தவர்கள், பிறத்தல் என்னும் உண்மையையும், வளர்ந்து வருதல் என்னும் உண்மையையும், தேய்ந்துபோதல் என்னும் உண்மையையும், ஈற்றிலே இறந்து போதல் என்னும் பெரிய உண்மையையும், எல்லோரும் உள்ளத்திலே நிலைநிறுத்திக் கொள்வதற்காக நான் தேய்ந்து, இறந்து, மீண்டும் தோன்றி நின்று வளர்கின்றேன்."

பாடல்: இன்றுயில்போற் சாக்காடும் இனிதுதுயின் றதன்பின்
எழுவதுபோற் பிறப்புபெனு மியற்புலவ னுரையை
நன்றுணர்தி யெனக் கூறுந் தண்மதியை நோக்கி
நரகமொடு சுவர்க்கமுந்தான் நண்ணுவதேன் என்றேன்.

பாடல் பிரிப்பு: *"இன்துயில் போல் சாக்காடும், இனிது துயின்றதன்பின்
எழுவது போல் பிறப்பும் எனும் இயல் புலவன் உரையை
நன்று உணர்தி" எனக் கூறும் தண்மதியை நோக்கி,
"நரகமொடு சுவர்க்கமும் தான் நண்ணுவது ஏன்" என்றேன்.*

பொருள்: "இனிமையான நித்திரை போன்றது இறப்பு, இனிமையாக நித்திரை செய்ததன் பின் விழித்துக் கொள்வது போன்றது பிறப்பு என்று கூறிய இயற்றமிழ்ப் (திருவள்ளுவரின்) புலவரின் வார்த்தையை நீ நன்கு அறிந்து கொள்வாயாக" என்று கூறுகின்ற குளிர்ச்சி பொருந்திய சந்திரனை நோக்கி, (மனிதனாகப் பிறந்தவர்கள்) "நரகத்தோடு சுவர்க்கத்தையும் அடைவது ஏன்?" என்று கேட்டேன்.

பாடல்: நற்கனவு சுவர்க்கமுளம் நலியவருங் கனவு
நரகமிவை நல்வினையின் தீவினையின் விளைவாய்
உற்றவென வறிதியெனு முரையையுளங் கொண்டேன்
உண்மை நண்பன் றனைநினைத்து பின்னுமுரை பகர்வேன்.

பாடல் பிரிப்பு: *"நல்கனவு சுவர்க்கம், உளம் நலியவரும் கனவு
நரகம், இவை நல்வினை யின் தீவினையின் விளைவாய்
உற்றன அறிதி" எனும் உரையை உளம் கொண்டேன்,
உண்மை நண்பன் தனைநினைந்து பின்னும் உரை பகர்வேன்*

பொருள்: "நல்ல கனவு சுவர்க்கமாகும். உள்ளம் துன்பப்படும்படியாக வருகின்ற கனவானது நரகமாகும். இவை நல்வினையின் பயனாகவும், தீவினையின் பயனாகவும் ஏற்படுகின்றன என்பதை நீ அறிந்து கொள்வாயாக" என்று சந்திரன் கூறிய வார்த்தையையும் உள்ளத்திலே கொண்டுவிட்டேன். என்னுடைய உண்மையான நண்பனை நினைத்துப் பின்பும் சந்திரனுடன் பேசத் தொடங்கினேன்.

பாடல்: வருந்தித்தாங் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ
மறுமையிலு முதவுமோ வான்மதியே என்றேன்
திருந்துகல்வி யெழுமையுமே மாப்புடைத்தென் றுரைத்த
செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க.

பாடல் பிரிப்பு: *"வருந்தித் தாம் கற்றகல்வி மாய்ந்து மறைந்திடுமோ,
மறுமையிலும் உதவுமோ வான்மதியே" என்றேன்,
"திருந்து கல்வி எழுமையும் ஏமாப்பு உடைத்து என்று உரைத்த
செம்மொழியைத் தேர்தி" என வெண்மதியும் விடுக்க.*

கருத்து: "ஒருவர் (ஒரு பிறப்பிலே) உடலை வருத்திக் கற்ற கல்வியானது அவர் இறக்கும் போது அழிந்து மறைந்துவிடுமோ? அல்லது மறு பிறவியிலும் உதவுமோ வானத்திலே உள்ள சந்திரனே" என்றேன். "ஒருவர் தான் திருத்தமாகக் கற்ற கல்வியானது ஏழு பிறப்புக்களிலும் உதவக்கூடியது என்று கூறிய செம்மொழியாகிய திருக்குறளை ஆராய்ந்து அறிந்து கொள்வாயாக" என்று வெண்மையான சந்திரன் விடை கூற.

சுவர்க்கத்தில் கந்தசாமிப்புலவர்

பாடல்:

மாணியென வாழ்க்கைமுற்று மிலக்கணநூல் பயின்றோன்
வானகத்து மதுபயில்வா னெனுமுண்மை தெளிந்தேன்
பாணினிதொல் காப்பியன்சீர்ப் பதஞ்சலிவா ழுலகு
படர்ந்தனென் நண்பனெனும் பான்மையினை உணர்ந்தேன்.

பாடல் பிரிப்பு:

மாணிஎன வாழ்க்கை முற்றும் இலக்கண நூல் பயின்றோன்,
வானகத்தும் அது பயில்வான் எனும் உண்மை தெளிந்தேன்
பாணினி, தொல்காப்பியன், சீர்ப்பதஞ்சலி வாழுலகு
படர்ந்தனன் என் நண்பன் எனும் பான்மையினை உணர்ந்தேன்.

பொருள்: பிரமசாரியாக இருந்து வாழ்க்கை முழுவதுமே தமிழ் இலக்கண நூல்களைக் கற்றவரான கந்தசாமியார், வானுலகத்திலும் அவ்வாறான நூல்களையே கற்பார் என்ற உண்மையினைத் தெளிந்து கொண்டேன். பாணினி, தொல்காப்பியன், சிறப்புமிக்க பதஞ்சலி முனிவர் முதலியோர் வாழுகின்ற உலகை என்னுடைய நண்பனும் அடைந்துவிட்டான் என்னும் உண்மையை நான் உணர்ந்து கொண்டேன்.

ஓலையொன்று எழுத உளங்கொண்டார்

பாடல்:

தோற்றுவதும் மறைவதுவும் தொல்லியல்பென் றுணரத்
துயரகன்ற தெனினுமன்புத் தொடரகலா மையினால்
மாற்றமொன்று முரையாது வான்புகுந்தாற் கோலை
வரைவலென அன்புபொதி வாசகங்க ளெழுதி,

பாடல் பிரிப்பு:

தோற்றுவதும் மறைவதுவும் தொல் இயல்பு என்று உணரத்
துயர் அகன்றது எனினும் அன்புத்தொடர் அகலாமையினால்
மாற்றம் ஒன்றும் உரையாது வான்புகுந்தாற்கு ஓலை
வரைவல்என அன்பு பொதி வாசகங்கள் எழுதி.

பொருள்: உலகிலே (உயிர்கள்) பிறப்பதும் இறப்பதும் பழமையாக இருந்து வருகின்ற இயல்பாகும் என்று உணர்ந்தவுடன் துன்பம் நீங்கி விட்டது. ஆயினும், (கந்தசாமியோடு கொண்ட) அன்புப் பிணைப்பு நீங்காத காரணத்தினால் எதுவித பதிலுங் கூறாது வானுலகு சென்றுவிட்டவருக்கு (கந்தசாமிக்கு) கடிதமொன்று எழுதக்கருதி, அன்பு நிறைந்த சொற்களை எழுதி.

பாடல்: அறிவற்றங் காக்குமெனு மறவுரையை யெழுதி
அறநெறியா லின்பமெய்து மமைதியையு மெழுதி
உறுநட்பு நிலைபெறுமென் றுறுதிப்பா டெழுதி
ஒதுவிபு லாநந்த னுரையிவையென் றெழுதி.

பாடல் பிரிப்பு: *அறிவு அற்றம் காக்கும் எனும் அற உரையை எழுதி*
அறநெறியால் இன்பம் எய்தும் அமைதியையும் எழுதி,
உறுநட்பு நிலைபெறும் என்று உறுதிப்பாடு எழுதி,
ஒது விபுலாநந்தன் உரை இவை என்று எழுதி.

பொருள்: அறிவானது அழிவு வராமல் பாதுகாக்கும் என்னும் தரும வார்த்தையை எழுதி, தரும நெறியால் இன்பம் உண்டாகும் என்னும் முடிவையும் எழுதி, நாம்கொண்ட நட்பானது என்றும் நிலைபெறும் என்னும் உறுதியான வாசகங்களை எழுதி, (என்றும்) கற்றுக் கொண்டிருக்கின்ற விபுலாநந்தனின் வார்த்தைகள் இவை என்று(ம்) எழுதி,

கந்தசாமியாரின் வானுலகு முகவரி

பாடல்: செல்வமலி விண்ணாட்டிற் செழுங்கலைத்தெய் வம்வாழ்
திருநகரிற் றமிழ்வழங்குந் தெருவிலொரு மனையில்
அல்லலின்றி வாழ்கின்ற கந்தசா மிப்பே
ரறிஞனுக்கிவ் வோலையென வடையாளம் பொறித்தேன்.

பாடல் பிரிப்பு: *செல்வமமலி விண்நாட்டில் செழும்கலைத் தெய்வம் வாழ்*
திருநகரில் தமிழ் வழங்கும் தெருவில் ஒரு மனையில்
அல்லல்இன்றி வாழ்கின்ற கந்தசாமிப்
பேரறிஞனுக்கு இவ் ஓலை என அடையாளம் பொறித்தேன்.

பொருள்: பல்வேறு வகையான செல்வங்களும் மலிந்து காணப்படுகின்ற தேவர்களின் நாட்டிலே, சிறந்த கலைத்தெய்வமாகிய சரஸ்வதி வாழ்கின்ற மேலான நகரிலே, தமிழ் விளங்குகின்ற தெருவொன்றிலே, வீடொன்றில் எதுவித துன்பமுமின்றி வாழ்கின்ற கந்தசாமி என்னும் பெரிய அறிஞனுக்கு இக் கடிதம் உரியது என அடையாள முத்திரை இட்டேன்.

கடிதத்தைக் கொண்டு செல்வது யார்?

பாடல்: வேலைநீர் வையகத்தோ ரன்னத்தைக் கிளியை
மென்முகிலைத் தூதாகவிடுத்தனர்யா னெழுதும்
ஓலைகொண்டு விண்புகுந்து நண்பனிடஞ் சேர்க்கு
முதவியினைப் புரியவல்லார் யாவரெனக் கலங்கி,

பாடல் பிரிப்பு: *வேலைநீர் வையகத்தோர் அன்னத்தைக் கிளியை*
மென்முகிலைத் தூதாக விடுத்தனர், யான் எழுதும்
ஓலைகொண்டு விண்புகுந்து நண்பனிடம் சேர்க்கும்
உதவியினைப் புரியவல்லார் யாவர் எனக் கலங்கி.

பொருள்: கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்திலே வாழ்கின்றவர்கள் அன்னப்பறவையை, மென்மையான முகிலை, கிளியை(பிறரிடம்) தூதாக அனுப்பினார்கள். நான் எழுதுகின்ற இக் கடிதத்தை எடுத்துச் சென்று தேவருலகையடைந்து என்னுடைய நண்பனிடம் கொடுக்கின்ற உதவியைச் செய்யக்கூடியவர் யார் இருக்கின்றார்கள் என மனங்கலங்கி.

பாடல்: தேவர்புகழ் கங்கையெனுஞ் செல்வநதி நங்கை
செஞ்சடைவா னவனிடத்தா ளிங்குமுறை கின்றாள்
மூவுலகுஞ் செல்லவல்லா ளெவ்வுயிரும் புரக்கும்
முதல்வியிவள் துணைபெறுவே னெனவியந்து துணிந்தே.

பாடல் பிரிப்பு: *தேவர்புகழ் கங்கை எனும் செல்வ நதி நங்கை*
செஞ்சடை வானவன் இடத்தாள் இங்கும் உறைகின்றாள்,
மூவுலகும் செல்லவல்லாள், எவ் உயிரும் புரக்கும்
முதல்வி இவள், துணை பெறுவேன் என வியந்து துணிந்து.
(ஏ–அசை)

பொருள்: தேவர்களாற் புகழ்ந்து போற்றப்படுகின்ற கங்கை எனக்கூறப்படும் செல்வம் கொழிக்கும் ஆறு எனப்படும் பெண்ணானவள், சிவந்த சடையினையுடைய சிவபெருமானிடத்திலே இருக்கின்றவள், இந்த உலகத்திலும் வாழ்கின்றாள். அவள் மூன்று உலகங்களுக்கும் செல்ல வல்லவள். (அத்துடன்)அவள் எல்லா உயிர்களையும் பாதுகாக்கும் தலைவி. இப்படிப்பட்டவளுடைய உதவியை நான் பெறுவேன் என்று ஆச்சரியப்பட்டுத் துணிவு கொண்டு.

கங்காதேவியே கடிதத்தைச் சேர்த்துவிடு!

பாடல்: செம்பவளக் கொம்பினிடைச் சேர்ந்த முத்து மாலையைப்போல்
எம்பெருமான் செஞ்சடையை யெய்திநின்ற வானதியே
எம்பெருமான் செஞ்சடைவிட் டிங்கு வந்து தண்ணளியால்
வெம்பரிதித் தீயகற்றும் மின்னே நினைத்தொழுதேன்.

பாடல் பிரிப்பு: *செம்பவளக் கொம்பின் இடைச் சேர்ந்த முத்துமாலையைப் போல்*
எம்பெருமான் செம்சடையை எய்திநின்ற வான்நதியே,
எம்பெருமான் செம்சடைவிட்டு இங்குவந்து,
தண்ணளியால் வெம்பரிதித் தீ அகற்றும் மின்னே
நினைத்தொழுதேன்.

பொருள்: சிவந்த பவளக்கோலிலே சேர்ந்து விளங்குகின்ற முத்துமாலையைப் போன்று எமது தலைவரின்(சிவபெருமானின்) சிவந்த சடையை அடைந்து நிற்கின்ற ஆகாயகங்கையே, எமது தலைவரின் சிவந்த சடையைவிட்டு நீங்கி இங்கேவந்து, இரக்கத்தினால் வெப்பமான சூரியனின் வெம்மையை நீக்குகின்ற மின்னற்கொடி போன்றவளே உன்னை வணங்கினேன்.

பாடல்:

மாற்றுயர்ந்த பொன்மலைமேல் வைத்த வெள்ளிக் கோல் போல்
ஏற்றியல்வோன் பொற்சடையை யெய்திநின்ற வானதியே
ஏற்றியல்வோன் பொற்சடைவிட் டிங்கு வந்து மக்கள் பசி
ஆற்ற வுணவளிக்கு மன்னாய் நினைத்தொழுதேன்.

பாடல் பிரிப்பு:

மாற்று உயர்ந்த பொன்மலைமேல் வைத்தவெள்ளிக் கோல்போல்
ஏற்று இயல்வோன் பொன்சடையை எய்தி நின்ற வான்நதியே
ஏற்று இயல்வோன் பொன்சடைவிட்டு இங்கு வந்து மக்கள் பசி
ஆற்ற உணவு அளிக்கும் அன்னாய் நினைத்தொழுதேன்.

பொருள்: உயர்ந்த தரத்தைக் கொண்ட பொன்னாலாகிய மலையின்மீது வைத்திருக்கின்ற வெள்ளியினாலான கோல்போன்று, எருது வாகனத்தையுடைய சிவனின் பொன்போன்ற சடையினை அடைந்து நிற்கின்ற ஆகாய கங்கையே, எருது வாகனத்தையுடைய சிவனின் பொன்போன்ற சடையை விட்டு நீங்கி இங்கே வந்து மக்களுடைய பசியினைப் போக்குவதற்காக (நீராகிய) உணவையளிக்கின்ற தாயே உன்னை வணங்கினேன்.

பாடல்:

சுடர்கதிரைச் சூழ்ந்தொளிருந் தூவெண் முகில்போல்
இடர்களைவோன் நீள்சடையை யெய்தி நின்றவானதியே
இடர்களைவோன் நீள் சடைவிட் டிங்கு வந்து பூதலத்தோர்
தொடர்பிறவி வேர்களையுந் தூயோய் நினைத்தொழுதேன்.

பாடல் பிரிப்பு:

சுடர்கதிரைச் சூழ்ந்து ஒளிரும் தூவெண்முகில் போல்
இடர்களைவோன் நீள்சடையை எய்திநின்ற வான்நதியே,
இடர்களைவோன் நீள் சடைவிட்டு இங்கு வந்து பூதலத்தோர்
தொடர்பிறவிவேர்களையும் தூயோய் நினைத்தொழுவேதன்.

பொருள்: ஒளிவீசுகின்ற சூரியனைச் சூழ்ந்துநின்று ஒளிர்கின்ற தூய்மையான வெண்ணிற முகிலைப்போன்று, பிறவித் துன்பத்தை நீக்குகின்ற சிவனின் நீண்ட சடையை அடைந்து நிற்கின்ற ஆகாய கங்கையே, பிறவித் துன்பத்தை நீக்குகின்ற சிவனின் நீண்ட சடையை விட்டு நீங்கி இங்குவந்து, பூமியிலே உள்ளவர்களின் தொடர்ந்து வருகின்ற பிறவியென்னும் துன்பத்தின் வேர்களை வெட்டி நீக்குகின்ற தூயவனே உன்னை வணங்கினேன்.

வானதி ஓலையை ஏந்தி வேலையை நோக்கிச் சென்றது

பாடல்:

மும்முறை நினைந்து முறைமையின் வணங்க
அம்மென் சிலம்புநின் றரற்றுஞ் சீறடி
செம்மல ரென்னத் திகழ வம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டி னியன்ற
தூசு செறியிடை துவள மாசில்
வாண்மதி முகத்திற் புன்னகை தவழ
மகர மீன்மிசை யிவர்ந்து
காரிடைத் தோன்றிய மின்னுக் கொடிபோல்
நீரிடைத் தோன்றி மறைந்தனள் பாரிடைத்
தெண்டனிட் டவளடி வணங்கி யண்டர்
நாட்டை வைகும் நண்பன் கையில்
ஈங்கிது சேர்கவென் றிரும்புனல் நீரில்
ஓலையை யிடலு மேந்திய வானதி
வேலையை நோக்கி விரைந்து சென்றதுவே.

பாடல் பிரிப்பு:

என ஆங்கு, மும்முறை நினைந்து முறைமையில் வணங்க,
அம்மென் சிலம்பு நின்று அரற்றும் சீறடி
செம்மலர் என்னத்திகழ, அம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டில் இயன்ற
தூசு செறி இடை துவள, மாசு இல்
வாண்மதி முகத்தில் புன்னகை தவள
மகர மீன்மிசை இவர்ந்து,
கார்இடைத் தோன்றியமின்னுக்கொடி போல்
நீர் இடைத்தோன்றி மறைந்தனள், பார் இடைத்
தெண்டனிட்டு அவள் அடி வணங்கி அண்டர்
நாட்டு இடை வைகும் நண்பன் கையில்
ஈங்குஇது சேர்கஎன்று இரும்புனல் நீரில்
ஓலையை இடலும், ஏந்திய வான்நதி
வேலையை நோக்கி விரைந்து சென்றது. (ஏ(வே) - அசை)

பொருள்: என்று அவ்விடத்தில் மூன்று முறை(கங்காதேவியை) நினைத்து முறைப்படி வணங்க அழகிய மென்மையான சிலம்பு நின்று ஒலிக்கின்ற சிறிய பாதங்கள் செந்தாமரை மலரைப்போல விளங்கவும், அந்த மலரின் பசுமையான இலைகளை ஒத்த பட்டியனாலான ஆடையானது நெருங்கிய இடையிலே துவளவும், குற்றமற்ற ஒளிபொருந்தி சந்திரனைப் போன்ற முகத்திலே புன்சிரிப்புத் தோன்றவும், மகரமீனிலே ஏறிவந்து கரிய மேகத்தினிடையே தோன்றிய மின்னலைப்போல நீரினிடையே தோன்றிப் பின் மறைந்து விட்டாள். நான் பூமியிலே விழுந்து மண்டியிட்டு அவளுடைய பாதங்களை வணங்கி, "தேவர் உலகத்திலே வசிக்கின்ற என்னுடைய நண்பனது கையில் இக் கடிதம் சேரட்டும்" என்று கூறிப் பெரிய பரந்த நீரிலே கடிதத்தை இட்டதும் அதனை ஏந்திக் கொண்ட ஆகாய கங்கையானது கடலை நோக்கி விரைந்து சென்றது.

செய்னம்பு நாச்சியார் மான்மியம்

அ. மணம் சரிகாண் படலம்

செய்யுள் பகுதி:

எல்லாமறிந்த எங்கள் ஆலிமு
நல்லது சொல்வார் நாமேன் தடுப்பான்?
ஏவல், விலக்கல் எல்லாம் அறிந்தவர்;
பாவம் என்றால் பதறி விலகுவார்
குடும்ப மெல்லாம் குலத்தோ டறிவார்;

பொருட்பகுதி:

எல்லா விடயங்களையும் நன்கு அறிந்துள்ள எங்களுடைய ஆலிம், நல்லதைத்தான் சொல்வார், நாம் ஏன் அதைத்தடுக்க வேண்டும்? நாம் செய்ய வேண்டியது எது? செய்யக்கூடாதது எது? என்பதுபற்றிய எல்லாவற்றையும் அறிந்துள்ளவர். பாவச்செயல்களைக் கண்டால் அவ்விடத்தை விட்டு நடுநடுங்கி விலகி விடுவார். இவ்வூரில் உள்ள குடும்பங்கள் எல்லாவற்றைப்பற்றியும், அவரவரின் குலம் எதுவென்பதைப் பற்றியும் அறிந்துள்ளார்.

செய்யுள் பகுதி :

ஆண்டுக் கத்தம் ஆரார் வீட்டில்
அடுக்காய் வருமென்றவரே அறிவார் ;
ஊரை அளந்த உத்தமரவரே,
பேரைக் கேட்டால் பிள்ளையும் பிறக்கும் ;
ஊதிப் பார்த்தால் ஊரோடி யோடும்.

பொருட்பகுதி:

(இறந்தவர் பொருட்டு) ஆண்டுக்கொருமுறை அளிக்கப்படும் திவசம் (கத்தம்) எவரெவர் வீட்டில் அடுத்தடுத்து வரும் என்று அவர் தான் அறிவார். ஊர் மக்களின் உள்ளத்தை அளவெடுத்திருப்பவர் அவர், அவருடைய பெயரைக் கேட்டால் பிரசவம் கூட இலேசாக அமையும் சுபகாரியங்கள் நிறைவேறும் மந்திரித்து தொற்று நோய்களை நீக்குபவர்.

செய்யுள் பகுதி :

இப்படியான எங்க ளாலிமு
சுகுத் தொழுகையைச் சுறுக்காய் முடித்து,
நடையாய் நடந்து, நாலாம் குறிச்சி
கணக்கப் பிள்ளை காசிம்பாவா
வீடு போகுமுன் விரைவாய்ச் சென்று

பொருட்பகுதி:

இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட எங்களுடைய ஆலிம், வைகறைத் தொழுகையை மிக விரைவாக முடித்துவிட்டு, கால்நடையாக நடந்து சென்று,நாலாம் குறிச்சி கணக்கப்பிள்ளை காசிம்பாவா என்பவர் தன்னுடைய வீட்டுக்குச் செல்வதற்கு முன்பாக விரைந்து சென்று .....

செய்யுள் பகுதி:

வழியில் மறித்து வல்லவன் துணையால்
நல்ல நாள் பார்த்து நாங்கள் வருவோம்,
என்று முடிவையும் எடுத்தே வந்தார்
ஆதலால் மாமா ஆதங் கண்டு,
சாவல் கமீது சக்கரிக்காக்கா, ...

பொருட்பகுதி :

(கணக்கப்பிள்ளை காசிம்பாவை) வீட்டுக்குப் போகும் வழியில் தடுத்து இறைவனுடைய கிருபையினால் நல்லதொரு நாளைப் பார்த்து (தங்கள் மகனைக் கேட்பதற்காக) நாங்கள் (இசுமான்கண்டு குடும்பத்தினர்) உங்கள் வீட்டுக்கு வருவோம் என்று கேட்டுச் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு வந்துவிட்டார். ஆகையால் ஆதங்கண்டுமாமா சவால்க மீது சக்கரிக்காக்கா....

செய்யுட்பகுதி:

......உதுமான் தம்பி உமறு லெவ்வை
உங்க சாச்சா, உசன் பெரியப்பா
வெள்ளத் தம்பி, வேங்க மரைக்கார்
யாவரும் வேணும் என்றார் ஆலிமு,
ஆதலினாலே, அவர்களைக் கண்டு.....

பொருட்பகுதி:

(மேற்கூறியவர்களுடன்) உதுமான்தம்பி, உமறுலெவ்வை உங்க சாச்சா, (சிற்றப்பா) உசன் பெரியப்பா, வெள்ளத்தம்பி, வேங்கமரைக்கார் ஆகிய எல்லோரும் வேண்டும் என ஆலிம் கூறினார். ஆகையால் அவர்கள் எல்லோரையும் நேரிலே பார்த்து......

செய்யுள் பகுதி :

முன்னறிவித்தலாய் முழுதுஞ் சொல்லி
அவர்களிடமும் அறியச் செய்து
சம்மதங் கேட்டுச் சரிகண்டு வருவது
சும்மாவாகிலும் நல்லது தானே,
என்று சொல்லி இசுமான் கண்டு

பொருட்பகுதி:

அவர்கள்அனைவருக்கும் முதல் அறிவித்தலாக விடயம் முழுவதையும் சொல்லி அவர்களது சம்மதத்தையும் கேட்டு சரிகண்டு வருவது நல்லது தானே என்று

செய்யுள் பகுதி:

முண்டாசு நீக்கி மொட்டத் தலையைப்
பெண்டாட்டி மரியம் பீவி காணத்
தடவிக் கொண்டார், தட்டிக் கொண்டார்;
மரியம் மாவும் மன மகிழ்வுடனே
சரி சரி என்று சரியே கண்டா.

பொருட்பகுதி:

(இசுமான்கண்டு) தன்னுடைய தலைப்பாகையைக் தலையிலிருந்து எடுத்து மொட்டத்தலையினைத் தன்னுடைய மனைவியாகிய மரியம்மா காணும்படியாகத் தடவி, தலைடியலே மெல்லத் தட்டியும் தடவியும் கொண்டார். (அதைக் கேட்டு) மரியம் பீவியும் சரிசரி என்று கூறியபடி ஒப்புக்கொண்டார்.

ஆ. செப்பு அனுப்பும் படலம்

செய்யுள் பகுதி:

மரியம் பீவி மகளை நோக்கி
சின்னக்கண்டு, சிவந்த மாமி,
பொன்னி நாச்சி, போடியார் சாக்கி,
மூத்தபிள்ளை, முக்காட்டுக்காரி,
இவர்களை யழைக்க இளைய சிறுக்கனை......

பொருட்பகுதி :

மரியம் பீவி தன்னுடைய மகளைப் பார்த்து சின்னக்கண்டு சிவந்தமாமி, பொன்னிநாச்சி, போடியார் சாச்சி, மூத்தபிள்ளை, முக்காட்டுக்காரி, (உறவினர்களாகிய) இப்படியானவர்களை அழைத்துக் கொண்டு வரும்படி இளைய சிறுவனை (தம்பியை)

செய்யுள்பகுதி:

......உடனே அனுப்புவாய் என்ன அவளும்
ஓதப்போன அவனை அழைக்கத்
தம்பி சாயுவைக் தட்டியே விட்டாள்;
அங்கே தம்பி அலிபு, பேத் தேயை
அப்போது முடித்தே ஆலிமைக் கேட்டான்.

பொருட்பகுதி:

(தாய் மகளிடம் மேற்கூறிய பெயர்களைக்கூறி இளைய தம்பியை) உடனே அனுப்புவாய் என்று கூற மகளும் திருக்குர்ஆன் ஓதுவதற்கும் பள்ளிவாசலுக்குப் போன அவனை அழைத்து வருவதற்காக மற்றொரு தம்பியாகிய சாயுவைப் அனுப்பினாள். பள்ளிவாசலில் தம்பியானவன் அலிபு பே, தே என்னும் அறபு எழுத்துக்களைக்கற்று முடித்து ஆலிமிடம் விடை கேட்டான்.

செய்யுள்பகுதி:

ஒப்பவே அவரும் ஓடியே வந்து
உம்மாவை யணுக, உவப்புடன் அவளும்
முன்னே கூறிய முழுப்பேரையுமே
இன்னே ஓடி எங்கும்போகாமல்
அழைத்து வாவென, அவர்களும் வந்தனர்.

பொருட்பகுதி:

(இளைய சிறுக்கன் தொழுகையை முடித்துவிட்டு ஆலிமிடம் கேட்க) அவரும் (அவன் தன்வீட்டிற்குப் போவதற்கு) விடை கொடுக்க. அவனும் ஒட்டமாக ஓடி உம்மாவுக்குப் பக்கத்தில் வர அவளும்தான் (தன்மகளிடம்) முன்பு கூறியவர்களை எல்லாம் எங்கும் ஓடிப்போகாமல் இப்பொழுதே அழைத்துக் கொண்டுவா என்றுகூற (அவனும் அவர்களிடம் சென்று விடயத்தைக் கூற. (அவனும் அவர்களிடம் சென்று விடயத்தைக் கூற) அவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தனர்.

செய்யுள்பகுதி :

பெண்கள் கூடிப் பேச்சைக் தொடுத்தனர்
மண்டபக் கதவில் மறைந்தாள் மகளும்,
கணக்கப்பிள்ளை காசிம்பாவா
இணக்க முரைத்ததை இசைத்தாள் மரியம்
எல்லா அறிந்த எங்கள் ஆலிமு.......

பொருட் பகுதி:

பெண்கள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து திருமணம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தார்கள். அதே நேரம் மரியம்பீபியின் மகள் மண்டபக் கதவுப் பக்கத்தில் மறைந்து கொண்டாள். கணக்கப்பிள்ளை காசிம்பாவா சம்மதம் கூறியதை மரியம்மா எல்லோரிடமும் கூறினாள்.

"எல்லாவற்றையும் நன்கு அறிந்து வைத்துள்ள எங்கள் ஆலிம்........

செய்யுள் பகுதி:

.... நல்லது கூறினால் நாமேன் மறுப்பான்?
ஆதனால்.
சீரு சிறப்புச் செய்வதற்காகப்
பெரிய செப்பொன்று பேச்சுகு முன்னே
சம்பந்தி வீட்டுக்குச் சாயந்திரமே
அனுப்ப வேண்டும். ஆதலி னாலே.......

பொருட் பகுதி:

"(எல்லாவற்றையும் அறிந்துள்ள எங்களது ஆலிம்) நல்லதை சொன்னால் நாம் ஏன் மறுப்புச் சொல்ல வேண்டும்? ஆகையால், வரிசை செய்வதன் நிமித்தம் முறையான திருமணப் பேச்சிற்கு முன்னால் பெரிய செப்பு சீர் ஒன்றினைச் சம்பந்தியான காசிம்பாவாவின் வீட்டுக்கு இன்று பின்னேரமே அனுப்பி வைக்க வேண்டும். அதனால்.

செய்யுள் பகுதி:

அரிசி மரக்கால் அளந்தெடுத்து
குற்றிப் புடைத்துக் குருணல் நீக்கி,
ஊறப் போட்டபின் உரலிலிடித்து,
மாப்பல காரம் மாலைக்கு முந்தியே
சேர்த்திட வேண்டும் சிவத்த மாமி

பொருட் பகுதி:

அரிசி மரக்கால் அளந்தெடுத்து, அதைக் குற்றிப்புடைத்து அதிலுள்ள குருணலை நீக்கி ஊறப்போட்டுப் பிறகு உரலிலே இட்டு இடித்து மாவாக்கிப் பின் மாவிலே பலகார வகைகளைச் செய்து மாலையாவதற்கு முன்பாகவே (சம்பந்தி வீட்டாரிடம்)
கிடைக்கச் செய்ய வேண்டும் சிவத்த மாமி......

செய்யுள் பகுதி :

.... யாவரும் வருவீர் என்றனள் மரியம்.
அப்படியே
செப்பும் முடிந்தது, சேர்த்தும் முடிந்தது .
ஒப்புடன் மனைவி உவந்து செய்ததை,
செப்பிட - ஆலிமும் சிரித்துக் கொண்டார்
இசுமான் கண்டும் எடுப்பாய் நின்றார்.

பொருட் பகுதி:

(விடயத்தைக் கூறி) எல்லோரும் வாருங்கள் என்று மரியம் கூறினாள். அதன் படியே செப்பு சேர்கப்பட்டும் முடிந்தது. சம்மதத்துடன் தனது மனைவி விரும்பிச் செய்த காரியத்தினைச் சொல்லவும் ஆலிம் மகிழ்வுடன் சிரித்தார். அதேநேரம் இசுமான் கண்டு மிகப்பெருமிதமாய் நின்றார்.

இ. நாச்சியார் படலம்

செய்யுள் பகுதி:

செய்னம்பு நாச்சி செங்காட்டுப் புலி,
வாயில்லாமலே வங்காளம் போவாள்,
நோயில்லாமலே நூறு நாள் படுப்பாள்,
சீட்டுப் பிடித்துச் சேர்த்த பணத்தைக்
கூட்டுப் பெட்டிக்குள் குவித்து வைப்பாள்.

பொருட் பகுதி:

செய்னம்பு நாச்சியார் கொடிய காட்டிலுள்ள புலி போன்றவள் வாய்ப்பேச்செதுவும் இல்லாமலே காரியம்ஆற்றக் கூடியவள். நோய் நொடி எதுவும் இல்லாமலேயே நூற்றுக்கணக்கான நாட்கள் படுக்கையிலே (சாலம்) படுத்துக் கிடக்கூடியவள். தான் சீட்டுப் போட்டுச் சேர்த்து வைத்திருக்கும் பணத்தையெல்லாம் கட்டுப் பெட்டிக்குள்ளே பத்திரமாகக் குவித்து வைத்திருப்பவள்

செய்யுள் பகுதி :

ஏசப் பிடித்தால் எல்லாம் நடுங்கும்,
காசிம்பாவா கடுகாய் விடுவார்,
படுத்த பூனையும் படிதாண்டி ஓடும்,
எடுத்த பிள்ளையும் இம்என்றடங்கும்
இப்படியானவள் இந்தச் சம்பந்தி.

பொருட் பகுதி:

(செய்னம்பு நாச்சியார்) ஏசத் தொடங்கினால் என்றாள் எல்லா இடங்களும் நடுங்கும். (கணவனான) காசிம்பாவா கடுகைப் போலவே சிறுத்து விடுவார். (இவருடைய கொடூரத்தைக் கண்டு) அடுப்படியிலே படுத்துக் கிடக்கும் பூனையும் வாசற்படியைத் தாண்டி ஓடிவிடும். அழவாரம்பித்த பிள்ளையும் உடனடியாக அழுகையை நிறுத்திவிடும். இப்படியான குணாதிசயங்களைக் கொண்டவள் இந்தச் சம்பந்தியம்மாளாகிய செய்னம்பு நாச்சியார்.

செய்யுள் பகுதி:

செப்பைக் திறந்து சீராய்ப் பார்த்தாள்.
பலகாரங்கள் பலப் பல இருந்தன,
கட்டிலிலிருந்த காசிம் பாவாவை
உற்றுப் பார்த்தாள் ஒடுங்கிப் போனார்,
பாருங்கள் இந்தப் பலகாரங்களை!

பொருட் பகுதி:

செப்பினைத்திறந்து நன்கு பார்த்தாள். பலவகைகளிலே பலகாரங்கள் இருந்தன. (பார்த்து விட்டு கட்டிலிலே ஒய்வாகச் சாய்ந்திருந்த காசிம்பாவாவை ஊன்றிப் பார்த்தாள். அவர் பயந்து நடு நடுங்கிப் போய்விட்டார். " இந்தப் பலகாரங்களின் சிறப்புக்களைப் பாருங்கள்......

செய்யுள் பகுதி:

நம்ம குடும்பம் நாடேயறியும்
கிள்ளிக் கொடுத்தாலும் கிடாரம் வேண்டும்
பேச்சுக் செப்பா? பிச்சைச் செப்பா?
தொடங்கவும் பேச்சை தூங்கிய புருஷன்
விடுங்க நாச்சி வேண்டாமே குறை

பொருட்பகுதி :

நம்முடைய குடும்பத்தைப் பற்றி இந்த நாடு முழுவதும் அறியும் கொஞ்சும் என்று கிள்ளிக கொடுத்தாலும் பெரிய கிடாரம் அளவு வேண்டும். இது என்ன பேச்சிற்கு வருவதற்கான செப்பா? அல்லது பிச்சையாகப் போடுகின்ற செப்பா? என்று நாச்சியார் பேச்சினைத் தொடங்கிய போது தூக்கத்திலிருந்த புருஷனாகிய காசிம்பாவ "இந்தப் பேச்சைப பேசாமல் விடுங்க நாச்சி குறை சொல்ல வேண்டாம்".....

செய்யுள் பகுதி:

முதல் முதல் வந்தது முணுமுணுக்காதே
இதெல்லாம் பெரிதாய் எடுக்கப்படாது
பாட்டன் பூட்டன் பழக்கிய வழக்கம்
வீட்டுக்கு வந்ததை விரும்புதல் வேண்டும்.
பள்ளிம் மாவிடம் பங்கு வைக்க விடு.....

பொருட் பகுதி :

(நமது வீட்டுப் பிள்ளையைக் கேட்டு முதன் முதலாக வந்த செப்பு ஆதலால் குறை சொல்லும் வகையில் முணுமுணுக்க வேண்டாம் இவற்றையெல்லாம் ஒரு பெரிய விடயமாக எடுக்கக்கூடாது. இப்படியானவையெல்லாம் எமது பாட்டன் பூட்டன் மார் பழக்கிவிட்ட வழக்கம் எனவே நமது வீட்டுக்கு வந்ததை விரும்ப வேண்டும். இதைப் பள்ளிம்மாவிடம் கொடுத்து உற்றார் உறவினருக்கு பங்கு வைக்கச் சொல்.

செய்யுள் பகுதி:

நாலு கலியாணம் நடத்திப் பார்த்தவா
வேலிக காலாய் வீட்டிலிருப்பவ
அவவுக்கு தெரியும் அடுக்குப் பண்ண
என்று நாச்சியை இளக்ச் செய்து
சென்றார் காசிம் செட்டியார் கடைக்கு.

பொருட்பகுதி :

(பள்ளியம்மா) நாலைந்து கலியாணம் நடத்திப் பார்த்த அனுபவம் பார்த்த உள்ளவர் வேலிக்கால் போல் வீட்டிலே இருப்பவர் இவற்றையெல்லாம் ஒழுங்குபண்ண அவருக்குத் தெரியும் என்று கூறிச் செய்னம்பு நாச்சியாரை மனம் இளக்ச் செய்து காசிம்பாவா செட்டியார் கடைக்குச் சென்றார்.

T 85
M 90
Sc 85
So 85
Co 85
Li 72
E 85
Re 98
685

Gyulke

Geetharamany. T
Yr. 11 'B'
O/L 2000
R.H.L.C

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு, கொழும்பு – 11
☎ : 422321, 337313

விலை : ரூபா 90.00